|---|---|---|---|---|
| | சமமான ஐ.அ.டொலர் 1.93 மில்லியன் 2020 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத மீதிகள் சார்பில் அரசாங்கத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (இ) | நிலக்கீழ் நீர் தேக்கம் மற்றும் வழங்கல் மற்றும் பொருத்துதலுடன் பூஸ்ரர் இறைக்கும் இல்லம் என்பவற்றின் நிர்மாணம் 2020 ஒக்தோபர் 07 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 06 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் இலக்கிடப்பட்ட 8 சதவீத முன்னேற்றத்திற்கு எதிராக 3 சதவீதத்தை காட்டியதுடன் 0 சதவீதமாக இருக்க வேண்டுமென பட்டியலிடப் பட்டதுடன் 2021 யூன் 30 இல் உள்ளவாறு 16.58 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரருடைய வழமையான வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். | ஒப்பந்தகாரர் ஏற்கனவே 2021 செப்தெம்பர் 30 இல் LC திறந்திருந்ததுடன் 2022 பெப்ரவரி இறுதியளவில் குழாய்கள் வழங்கப்படும். முன்னேற்றத்தை நெருக்கமாக கண்காணிப்பதற்கு வேலைத் தளங்களில் கலந்துரையாடல் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றதுடன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது | ICB 03 ஒப்பந்தத்தின் இறுதி பூர்த்தியாக்கல் திகதி 2022 செப்தெம்பர் 20 ஆக உள்ளது. EOT உடன் ICB 03 ஒப்பந்தம் அனுமதிக்கப் பட்டிருந்தது. 2022 சனவரி 31 இல் உள்ளவாறு திரண்ட பௌதீக முன்னேற்றம் 37.33 சதவீத பௌதீக இலக்குடன் 30.50 சதவீதமாக இருந்தது. |
| (ஈ) | வினைத்திறனான பம்புகள் பொருத்துதல் ஒப்பந்தத்தின் ஊடாக சக்தி சேமிப்புகளிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் தரமுயர்த்தல் மற்றும் சக்தி சேமிப்புகளின் முன்னேற்றத்தின் பிரகாரம், | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரருடைய வழமையான வேலைகளை | ஒப்பந்தகாரருடைய செயலாற்றலின் மெதுவான முன்னேற்றம் 2021 ஒக்தோபர் மாதத்தில் புதிய செயற்திட்ட முகாமையாளரின் வருகையுடன் | ICB 05 ஒப்பந்தகாரர் 022 திசெம்பர் இறுதிவரை EOT யொன்றை வேண்டியதுடன் இது மதிப்பாய்வின் கீழ் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 100 சதவீத முன்னேற்றத்திற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33.22 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. | நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். | அவதானிக்க முடியும். | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு ICB 05 ஒப்பந்த பொதி ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 47.09 சதவீதமாக உள்ளது. |
| (உ) | அம்பத்தளை முதல் எலியகவுஸ் வரை 9 கிமீ (1200 டையா மிமீ) DI குழாய்கள் வழங்கி பொருத்துதல் (ICB-04) ஒப்பந்தத்தின்ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் ஒப்பந்தம் தொடங்கிய திகதியிலிருந்து 4 ஆண்டுகளும் 5 மாதங்கள் கடந்த பின்னர் அத்திகதியில் உள்ளவாறு இலக்கிடப்பட்ட 88.98 சதவீதத்திற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 53.20 சதவீத மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் கீழ் குழாயிடப்பட்டவற்றின் 2,450 மீற்றர் வீதிப் பிரிவு குழாயிடல் வேலைகள் முழுமையாக பூர்த்தியாக்கிய பின்னர் கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டில் இடப்பட்டிருந்த 360 மீற்றர் குழாய் வளைவுத் திருத்த வேலைகள் தாமதம் அடைந்தமையால் 2021 யூன் 30 வரையும் | வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரருடைய வழமையான வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். | சீதாவக்கை வீதி பகல்பொழுதின் போது முடிவுறுத்த முடியாதிருந்ததுடன் பொலீஸ் திணைக்களம் பகலில் 9.00 முப முதல் 4.00 பிப வரையுமே மூடுவதற்கு அனுமதித்திருந்தது. ஆகவே, நாள் ஒன்றின் வேலை நேரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பொலீஸ் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் சேர்ந்து திட்டமிப்பட்டது, அத்துடன் வேலை நேரங்களை அதிகரிப்பதற்கு கென்டைனர் உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெறுகின்றன. | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு ICB 04 ஒப்பந்த பொதி ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 85.86 சதவீத பௌதீக இலக்கிற்கு எதிராக 84.50 சதவீதமாக இருந்தது. மொத்த குழாயிடப்பட்ட வீதிப் பிரிவின் 4,723 மீ மொத்த நீளம் (7,682 மீ) 2022 சனவரி 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப் பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பூர்த்தியாக்கப்பட்டிருந்துடன் அமுக்க வேலைகள் நடைபெறுவதும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஊ) | 2021 யூலை 27 இல் ICB-05 ஒப்பந்தத்தின் உத்தியோகத்தர் வதிவிடக் கட்டிடம் மற்றும் மத்திய கட்டுப்பாட்டு கட்டிடம் தொடர்பான சிவில் நிர்மாண வேலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், உத்தியோகத்தர் வதிவிடக் கட்டிடத்தின் சிவில் வேலைகள் மற்றும் வயரிங் வேலைகள், உபகரணங்கள் பொருத்துதல், மத்திய கட்டுப்பாட்டு கட்டிடம் தொடர்பான முறைமையின் பரீட்சிப்பு மற்றும் தொடங்குதல் என்பன 2021 யூலை 27 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. அதற்குமேல், நிலக்கீழ் நீர்த் தேக்கத்தின் நிரப்புதல் வேலைகளும் களப் பரிசோதனை திகதிவரை பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த வேலைத்தளங்களில் குறைவான தொழிலாளர் படையணி ஈடுபடுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மேலும், தொழிலாளர் படையணியை அதிகரிப்பதற்கும் வேலைகளை துரிதப்படுத்துவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் அதேபோல ஒப்பந்தகாரருடைய வழமையான வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர் வதிவிடக் கட்டிடம் (SAB) மற்றும் மத்திய கட்டுப்பாட்டு கட்டிடத்தின் மிகுதி வேலைகள் பட்டியலிடப் பட்டிருந்ததுன் அந்த நடவடிக்கைகளிற்காக கால இலக்குகள் வழங்கப்பட்டதுடன் நெருக்கமான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது. | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு ICB 05 ஒப்பந்த பொதியின் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 47.09 சதவீதமாக இருந்தது. |

## 2.6 அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I

(i) அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதற்கு அமுலாக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 யூலை 05 வரை இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| இல | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | மொத்த செயற்திட்டத்தின் 35.13 சதவீத பெறுமதியான செயற்திட்டத்தின் பிரதான விநியோகம், பிரதான பரிமாற்றம் மற்றும் குழாய் குழாயிடல் ஒப்பந்தம் 2019 திசெம்பர் 11 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 வரையும் ஆறு தடவைகள் ஒப்பந்த காலப் பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. | லொட் பீ ஒப்பந்தம் பூத்தியாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | விலைப் பட்டியல் செலுத்தாமை, ஒப்பந்தகாரர் பாதகமான காலநிலை போன்றன காரணமாக தெரிவு செய்யப்பட்ட காரணங்களிற்காக பகுதி அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கு கால நீடிப்பு வழங்கப்பட்டது. தற்போது தேசிய நீர் | 2022 சனவரி 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தின் 98.70 சதவீதத்தில் பூர்த்தியாக்கப்பட்ட ஒட்டு மொத்த வேலைகளின் 96.31 சதவீதம் ஒப்பந்தகாரருடைய மிகுதி வேலை நிகழ்ச்சித்திட்டம் போதிய வள |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2021 நவம்பர் 10 இல் நடாத்தப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், 72,048.15 மீற்றர் குழாயிடல் வேலைகளின் அமுக்கப் பரிசோதனையின் இருக்கின்ற 5,080 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள், 50 குறுக்கு மதகுகள் மற்றும் 103 வால்பு இணைப்புகள் பொருத்துதல் என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், மேற்குறித்த வேலைகள் 2022 சனவரி 31 அளவில் மூன்று மாதங்களிற்குள் பூர்த்தியாக்க முடியுமா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது. | | வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உயர் முகாமைத்துவத்தால் தகுந்த காரணங்களின் அடிப்படையில் 2022 மார்ச் 31 வரை ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்புகள் வழங்கப்பட்டது. | ஒதுகிகீட்டில் காலத்திற்கு காலம் அவசியமன அறிவுறுத்தல்களுடன் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டது |
| (ஆ) | இஸ்சின்பேஸ்சகல வலயத்தில் (லொட் சீ-1- ஒப்பந்தம்) 115 கிமீ நீளத்தில் UPVC, DI மற்றும் GI குழாய்கள் குழாயிடலிற்காகவும் றபேவா, கிழக்கு றபேவா மற்றும் எதகண்ட வலயத்தில் (லொட் சீ-3 - ஒப்பந்தம்) 119.6 கிமீ நீளத்தில் UPVC, DI மற்றும் GI குழாய்கள் குழாயிடலிற்காகவும் விநியோக குழாய்கள் குழாயிடல் ஒப்பந்தம் முறையே 2020 பெப்ரவரி 29 மற்றும் 2019 யூலை 15 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தங்களின் கீழ் குழாய்கள் குழாயிடல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் | லொட் பீ இன் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு வலயம் வாரியான திட்டத்தின் கீழ் அந்த வலையமைப்புகளின் அகழ்தல் மற்றும் அகற்றுதல் லொட் பீ இன் அகழ்தல் மற்றும் அகற்றுதலின் பின்னர் அடைய முடியும்.<br>லொட் சீ1 / சீ3 இன் இறுதி விலைப் பட்டியல் அகழ்தல் மற்றும் அகற்றுதல் பூர்த்தியான பின்னர் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்படும். | சகல மிகுதி வேலைகளும் பட்டியலிடப் பட்டிருந்ததுடன் சாத்தியமானளவு விரைவில் பூர்த்தியாக்குவதற்கு வலயத்தால் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். | தற்போது நீர் சுத்திகரிப்பு பொறி லொட் ஏ ஆல் உபகரணங்களின் பரீட்சிப்பு செயற்பாட்டில் உள்ளதுடன் லொட் பீ ஆல் குழாய் வலையமைப்பின் அகழ்தல் ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்தது<br>முதலாவது பரிமாற்ற வலயம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் ஒப்படைப்பதற்கு பட்டியலிடப்பட்டதுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழாய் வழிகளின் அகழ்தல் மற்றும் அகற்றுதல் வேலைகள் என்பன லொட் பீ ஒப்பந்தத்தின் கீழான பிரதான விநியோகம் மற்றும் பிரதான பரிமாற்றம் என்பன பூர்த்தியாக்கும் வரை ஒப்பந்தகாரர்களால் நிறுத்தி வைக்கப்ப்டிருந்தது. இருந்த போதிலும் செயற்திட்டமானது அகழ்தல் மற்றும் அகற்றுதல் வேலைகள் மேற்கொள்வதற்கு உடன்பட்டு 2021 மார்ச் 12 இல் அந்த ஒப்பந்தகாரர்களிற்கு இடைக்கால பூர்த்தியாக்கல் சான்றிதழை வழங்கியிருந்தது. | | | PMU ஒப்பந்தகாரருடைய வேலை நிகழ்ச்சித் திட்டத்தை கடுமையாக கண்காணிக்கின்றது |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் பயன்படுத்தல் உடன்பட்ட கடன் தொகையின் 62.23 சதவீதத்திற்கு சமமான ஜப்பான் யென் 3,214.81 மில்லியனாக இருந்த போதிலும், செயற்திட்டம் பூர்த்தியாக்குவதற்கு மற்றும் முழுமையான கடன் பயன்படுத்தலிற்கு முன்னர் 2020 மார்ச் முதல் 2021 செப்தெம்பர் 17 வரை கடன்ளிக்கு முகவரிற்கு ஜப்பான் யென் 558.51 மில்லியனிற்கு சமமான ரூபா 994.38 மில்லியன் தொகையான கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டது. | உடனடியாக செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கும் கடன் திருப்பிச் செலுத்தல் நிபந்தனைகளை மாற்றுவதற்கு JICA இடமிருந்து வேண்டுகை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிடும். | JICA இற்கும் நிதி அமைச்சிற்கும் இடையில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. மூல கடன் உடன்படிக்கை பிரகாரம் கடன் திருப்பிச் செலுத்தல்கள் நடைபெறுகின்றன. | மூல கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சால் கடன் திருப்பிச் செலுத்தல்கள் தொடங்கப்பட்டது. நிதி அமைச்சு செயற்திட்டத்தின் முன்னேற்றத்தையும் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது |
| (ஈ) | லொட் A தொடர்பில் ரூபா 868.74 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 927,547 மற்றும் லொட் B தொடர்பில் ரூபா 595.62 மில்லியன் மற்றும் ஜப்பான் யென் 892.522 | கடன் பெறுகைகள் மூலம் தகுதியுடைய செலவினங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது முகாமையாளரால் அனுமதிக்கப்பட்டிருந்த முரண் கட்டளை ஊடாக தாமதக் கட்டணங்கள் | நாங்கள் எதிர் காலத்தில் ஏதாவது முரண் கட்டளைகளிற்காக முரண் கட்டளைக் குழுவில் இந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் தொகையான ஒப்பந்த விலைப் பட்டியலின் பெறுமதி விலைப்பட்டியல் கொடுப்பனவிற்காக வெளிநாட்டு நிதி ஒதுக்கீடுகள் போதாமையால் 2018 சனவரி முதல் 2020 யூலை வரை தாமதப்பட்டிருந்தது. அந்த நிலுவையாகவிருக்கின்ற விலைப் பட்டியல் கொடுப்பனவுகள் 2020 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஓ்ப்பந்தகாரர்களால் முறையே ரூபா 21.39 மில்லியன், ஐ.அ.டொலர் 10,429 மற்றும் ஜப்பான் யென் 1.32 மில்லியன் தொகையான நிதிக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும், கடன் உடன்படிக்கைக்கு முரணாக நிதிக் கட்டணங்களின் 98 சதவீதம் 2021 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க நிதிப் பெறுகைகளின் கீழ் செலுத்துவதற்குப் பதிலாத கடன் பெறுகைகள் ஊடாக தவறாக செலுத்தப்பட்டிருந்தது. | | செலுத்தப்பட்டது. 98 சதவீத விலைப் பட்டியல் மற்றும் சகல முரண் கட்டளைகள் கடன் ஊடாக செலுத்தப்படுகின்றன. இந்த முரண் கட்டளைகளும் அதே நடைமுறைகள் மூலம் செலுத்தப்படடது. | புள்ளி / தாக்கம் சுட்டிக் காட்டப்பட வேண்டிய்ருந்ததை நாங்கள் மதிப்பீடு செய்தோம். |
| (உ) | கட்டம் - 01 இன் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2018 பெப்ரவரியாக இருந்தது. பின்னர், லொட்- A மற்றும் லொட் - B இன் ஒப்பந்தம் வழங்கலில் தாமதம் மற்றும் நலிவான செயலாற்றல் காரணமாக 2022 யூலை | மேலும் தாமதமில்லாமல் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2022 யூலை வரை JICA ஆல் கடன் நீடிப்பு வழங்கப்பட்டது. பிரதானமாக கொள்வனவு கட்டத்தின் போது 2 ஆண்டுகளிற்கு மேலான தாமதம் மற்றும் சில வேறு நியாயமான தாமதங்களைக் | 7 ஒப்பந்த பொதிகளில் 5 பூர்த்தியாக்கப் பட்டதுடன் ஏனைய இரண்டு ஒப்பந்த பொதிகளும் ஏற்கனவே அண்ணளவாக 95 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருந்தது. |

| | |
|---|---|
| மாதம் வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் ஏனைய வேலைத்தள அலுவலகங்களின் பராமரிப்பிற்காக மேலதிக மேந்தலை கிரயமாக ரூபா 132.7 மில்லியன் செயற்திட்டத்திற்கு ஏற்பட்டது. | கருத்திற் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்காக நீடிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்குவதற்கு சகல அவசியமான அளவீடுகளும் எடுக்கப்பட்டிருந்தது. |

## 2.7 அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2

(i) அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 அநுராதபுரம் மாவட்டத்தில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் செயற்திட்டப் பகுதியில் சுகாதார நிலை மற்றும் சுற்றாடல் வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்வதற்கே அமுலாக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,779 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,137 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

(ஐ) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியற்ற கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| இல | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தத்தின் காலப்பகுதி 2021 ஆகஸ்ட் 31 இல் காலாவதி யாகியிருந்த போதிலும், 2021 ஆகஸ்ட் 31 இல் காலாவதி திகதிவரையும் 12 ஒப்பந்தங்களில் 10 வழங்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் ஆலோசனை வேலைகளை நிறைவேற்ற பூர்த்தியாக்குவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். | கோவிட்-19, பயணத் தடையின் போது வேலைகள் தொடர்வதால் ERD ஊடாக JICA ஆல் TECs, SCAPC, CPCC மற்றும் இறுதி ஒத்துழைப்பு என்பவற்றிலிருந்து கேள்வி ஆவணங்களிற்காக அனுமதி பெறுவதற்கு சகல சாத்தியமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டன. | செய்திட்டத்தின் ஆறு பிரதான பொதிகளில் ஐந்து கேள்வி மதப்பாய்வு கட்டத்தில் உள்ளதுடன் அமைச்சரவை அனுமதி பெறுதல் 2022 இன் 2 ஆவது காலாண்டிற்குள் வழங்க எதிர்பார்க்கப்பட்டது. |
| (ஆ) | பொது மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடாத்துவதற்காக ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன மக்கள் விழிப்புணர்வு மற்றும் கருத்தரங்கு போன்றன நடாத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் வழங்க முன்னர் விழிப்புணர்வு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிர்மாணங்கள் தொடங்க வேண்டும். | சிரேஸ்ட பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் உதவி பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் முறையே 2022 சனவரி 10 மற்றும் 25 இல் நியமிக்கப்பட்டிருந்தனர். பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் PMU உடனான கூட்டம் PAC ஐ நிறைவேற்றுவதற்கு சனவரி 27 இல் நடைபெற்றது. | பொது மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் 2022 சனவரி 10 இல் தொடங்கப் பட்டிருந்ததுடன் துணை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக 05 பிரதான விழிப்புணர்வு செயலமர்வுகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. |
| (இ) | செயற்திட்டம் கட்டம் II பாதுகாப்பற்ற நீலக்கீழ் நீரில் தங்கியிருந்த மக்களின் கிட்ணி நோயை பரப்புகின்ற பகுதியளான | பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு விசேட கவனம் | விவசாயிகள் மற்றும் பொது மக்கள் எதிர்ப்பு காரணமாக வஹல்கட ஓயாவிலிருந்து ஜான் ஓயாவிற்கு தண்ணீர் | செய்திட்டத்தின் ஆறு பிரதான பொதிகளில் ஐந்து கேள்வி மதப்பாய்வு கட்டத்தில் |

| | | | |
|---|---|---|---|
| ஹெப்பிட்டகெல்லாவ, பதவிய, ஹொரவப் பொத்தான மற்றும் பிரதேச செயலக பிரவுகளை மேவுகின்றது. எனவே, அரசாங்கம் அந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட ஒப்பந்தத்தின் கொள்வனவு நடைமுறை கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் இருக்கவில்லை. இதன் விளைவால் திருத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் ஐயத்திற்கிடமாகவுள்ளமை அவதானிக்கப்பட்டது. | செலுத்த வேண்டியதுன் செயற்திட்ட வேலைகளை நெருக்கமாக கண்காணிக் வேண்டும். | வளம் மாற்றப்பட்டதுடன் புதிய தண்ணீர் வளமாக ஜான் ஓயாவிற்கு அனுமதி பெறப்பட்டது. | உள்ளதுடன் அமைச்சரவை அனுமதி பெறுதல் 2022 இன் 2 ஆவது காலாண்டிற்குள் வழங்க எதிர்பார்க்கப்பட்டது. |

## 2.8 யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்

(i) யாழ்ப்பாணம், கிளிநெச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் செயற்திட்டப் பகுதியில் வசிப்பவர்களிற்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவது மற்றும் யாழ்ப்பாணம் தீபகற்பத்தின் நீர் வளங்களை முகாமை செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் அமுலாக்கப்பட்டது.

(ii) செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,474.59 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147.45 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,541.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 76.45 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 5,363.04 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48 மில்லியன் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவரிடமிருந்தான கடன் நீர் சுத்திகரிப்பு பொறிக்கு இரணைமடு குளத்திலிருந்து தண்ணீர் வளமான செயற்திட்டத்தின் நோக்லெல்லை மீள்கட்டமைப்பு காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளில் சில இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் 2015 ஒக்தோபர் 06 இல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது ஆகவே, மேலதிக கடன் உடன்படிக்கை 2017 திசெம்பர் 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iii) மேலதிக கடன் உடன்படிக்கை பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம், ரூபா 23,256 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 153 மில்லியனானதுடன் அதில் ரூபா 18,240 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர்வள மாற்றம் காரணமாக செயற்திட்டக் காலப்பகுதி 2026 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், யாழ் குடாநாட்டிற்கு குடிதண்ணீர் வழங்கல் தாமதப்பட்டிருந்தது.

(v) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
| --- | --- | --- | --- |
| திருத்திய நோக்கெல்லையின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியத்தில் நீர் வழங்கும் நோக்கில், கடல் நீர் மீள்சுத்திகரிப்பு பொறி பொருத்துவதையும் உயர்த்தப்பட்ட தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்தையும் 2022 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டது. ஆகவே, ரூபா 1,140 மில்லியன் கிரயத்தில் 15 தண்ணீர் கோபுரங்களின் நிர்மாணத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் மற்றும் ரூபா 5,536 மில்லியன் கிரயத்தில் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற குழாய்கள் பொருத்துதல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கீழான அந்த சகல நிர்மாண வேலைகளும் பூர்த்தியாக்கப் பட்டிருப்பினும் முறையான தண்ணீர் வளம் கிடைக்காமையால் பயனற்றிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு உரிய மக்களிற்கு செயற்திட்டத்தின் எதிர்பார்த்த வெளியீடு வழங்கப்பட்டது. | கடல்நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. | கடல்நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் திட்டமிடப்பட்டவாறு நீர் வழங்கல் திட்டத்தை அமுலாக்குவதற்கு வேலைக்கமர்த்தப்பட்டனர். |

## 2.9 உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டம்

(i) உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டம் வீட்டுரிமையாளர் மட்டத்தில் இருக்கின்ற மற்றும் புதிய கழிவகற்றல் வலையமைப்புக்களுடன் கழிவகற்றல் வீட்டு இணைப்புக்கள் அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்தில் குறைந்த வருமான வீட்டுரிமையாளர்களிற்கு அதன் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதற்கு அமுலாக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,559 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.10 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலப்பகுதி 2019 மார்ச் 31 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மார்ச்சில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| செயற்திட்டமானது ஆரம்பத்தில் 2015 திசெம்பர் 31 அளவில் சுகாதார சேவைகளின் கீழ் 13,107 கழிவகற்றல் இணைப்புகள் மற்றும் 2,300 கழிவு சுத்திகரிப்பு அலகுகள் என்பவற்றினை அடைவதற்கு திட்டமிடப்பட்டது. பின்னர் இது செயற்திட்ட கிரயம் அதிகரித்தமையால், 5,015 | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கும் தாமதமில்லாமல் கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் நிதியாண்டில் செயற்திட்டம் முழுமையாக மூலதனமாக்கப்பட்டிருந்தது | சொத்துக்கள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. |

கழிவகற்றல் இணைப்புகள் மற்றும் 3,785 கழிவு சுத்திகரிப்பு அலகுகள் வரை திருத்தப்பட்டது. செயற்திட்டமானது பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2019 மார்ச்சில் 4,793 கழிவகற்றல் இணைப்புகள் மற்றும் 3,554 கழிவு சுத்திகரிப்பு அலகுகள 2020 யூன் 30 வரையும் கணக்கொழிப்பு கணக்ககுளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்ல.

## 2.10 கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்

(i) கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதற்கே அமுலாக்கப்பட்டுள்ளது.

(ii) மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்படாமையால், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், முறையான வழியில் கண்டி நகரத்தின் கழிவுநநீர் அகற்றல் தாமதப்பட்டது.

(iv) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் அலோக வைத்தியசாலை வளவில் மேலதிக காணியின் உரிமையாண்மை பிரதான இறைக்கும் இல்லம் அமைந்திருந்தது, மனுபில் இறைக்கும் இல்ல காணி மஹாமய ஆரம்ப கல்லூரி மற்றும் தையன்லெ்ல மனுபில் இறைக்கும் இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ளது. | செயற்திட்டமனது மேலதிக செலவினம் அதிகரிப்பதை தவிர்ப்பதற்கு உரிய காலத்தில் பூர்த்தியாக்க வேண்டும். | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | |

## 2.11 நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம்

(i) நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டமானது தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட நீர் சேவைகளின் நுழைவுகளை அதிகரிப்பதற்கும் இணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதற்குமே அமுலாக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட காலப்பகுதி 2022 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால், தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட நீர் சேவைகளின் நுழைவுகளை அதிகரிப்பதற்கும் இணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் அடைய முடியாதிருந்தது.

(iv) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்காய்வு தலைமை அதிபதியின் சிபார்சுகள் | செயற்திட்டத்தால் எடுக்கப்பட்ட தடுக்கும் அளவீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், பூர்த்தியாக்கிய செயற்திட்ட வேலைளில் கிராமிய மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் திட்டங்களிற்கான ரூபா 189.87 மில்லியன் மற்றும் கிராமிய நீர் வழங்கல் புனரமைப்பு திட்டங்களில் ரூபா 250.6 மில்லியன் சமுதாய பங்களிளிப்பு அடையாளம் கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், நிதி நிலைமைக் கூற்றுக்களில் சமுதாய பங்களிப்பு மீதி ரூபா 440.47 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பூர்த்தியாக்கிய செயற்திட்டங்களிற்காக சமுதாய பங்களிப்பு இனங்காணப்பட வேண்டும். | செயற்திட்டத்தினுடைய சமுதாய பங்களிப்பு அடையாளம் கண்டு 2021 நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். | |
| (ஆ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவரால் ரூபா 21,623 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 116 மில்லியன் கைதவிர்க்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் நேரொத்த தொகை ரூபா 19,179 மில்லியனாக காட்டப் பட்டிருந்தது. இதன் விளைவால், | கடன் மீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2021 இன் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக் கூற்றுக்களில் கடன் பெறுகைகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது நான்கு ஒப்பந்தகாரர் களிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 16.87 மில்லியன் மொத்த தாமதக் கட்டணங்கள் 2021 ஏப்ரல் 30 வரையும் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டுமென வேண்டப்பட்டது. | நாங்கள் ஆண்டின் போது அமைச்சிற்கு அனுப்பியிருந்தோம். |
| (ஈ) | மூல ஒப்பந்த காலத்தை விஞ்சிய போதிலும் அதே செயற்திட்டங்களிற்காக இரண்டு முதல் ஐந்து சந்தர்ப்பங்கள் வரையான வீச்செல்லையில் பதினொரு நீர் வழங்கல் செயற்திட்ட ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்பு வழங்கப் பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக ஒப்பந்தகாரரிடம் ரூபா 512.12 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வைத்திருக்க அனுமதித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | மாவட்ட முகாமையாளர் பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் அவற்றினை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றம் கண்காணிக்க வேண்டும். | காலாத்திற்கு காலம் செயற்திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிந்தது. |
| (உ) | ரூபா 98.6 மில்லியன் கிரயத்தில் பதுளை மாவட்டத்தில் உடுபட்டாம நீர் வழங்கல் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2019 பெப்ரவரி 13 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டுள்ளது. பின்னர், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக 52 சதவீத வேலைகள் பூர்த்தியான பின்னர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம், செயலற்றல் மற்றும் முற்பண பிணை முறி சாத்தியமானளவு விரைவில் காசாக்க வேண்டுமென வேண்டப்பட்டது. . | தண்ணீர் பிரச்சனை காரணமாக ஒப்பந்த் பரஸ்பரம் நிறுத்தப்பட்டதுடன் புதிய ஒப்பந்தம் மீள வழங்கப்பட்டது.<br>பினன்ர் பிரச்சனைகள் நீதி மன்றத்தில் சட்டரீதியாக தீர்வு காணப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வாறாயினும், மீகுதி வேலைகளை பூர்த்தி யாக்குவதற்கான ஒப்பந்தம் 2021 ஏப்ரல் 30 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | கிளிநொச்சி மாவட்டத்தில் ரூபா 216.93 மில்லியன் கிரயத்தில் பொன்நகர் பதிபுரம் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட சிவில் ஒப்பந்த வெலைகள் 2018 ஒக்தோபர் 20 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டுள்ளது. பின்னர், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2021 ஏப்ரல் 30 வரையும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்தார். | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | பவிகின்ன நகர நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக ரூபா 7 மில்லியன் கிரயத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மின்பிறப்பாக்கிகள் மன்னவத்த நிலக்கீழ் நீர்த்தேக்க வேலைத் தளத்தில் மின்பறிப்பாக்கி இல்லத்தை நிர்மாணம் தவறியமையால் பயனற்று இருந்தது. | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மின்பிறப்பாக்கியை வாடகைக்கமர்த்தல் முடிவுறுத்தப்பட்டதுடன் மின்பிறப்பாக்கி அறையில் மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது. | |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் | உரிய நிறுவனங் களிடமிருந்து வாகனங்களை பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆகவே, உடமையாளர் நிறுவனங்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்கு இரண்டு கூறுகளின் கீழ் வளங்கள் ஒதுக்கப்பட்டன. | |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் என்பவற்றிற்கு ஏழு வாகனங்கள் விடுவிக்கப் பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 1.22 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஐ) | 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 27,238,510 ஆன கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூடம், வாகன உரிமையாண்மை மாற்றப்படாமல் 2019 ஏப்ரல் 10 இலேயே தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது மாதிரி சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை 24 நாட்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்தும் நோக்கில் முறையான கண்காணிப்பு பொறிமுறை இருக்க வேண்டும். | தற்போது வாகனங்களின் உரிமையாண்மை மாற்றப்பட்டதுடன் நடமாடும் ஆய்வுகூடம் மாதிகள் சேகரிப்பதற்கும் பரீட்சிப்தற்கும் பயன்படுத்தப்படுகின்றது. |

## 2.12 நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டம்

(i) நகரங்களிற்கான சுகாதார மற்றும் தூய்மை முயற்சிகளின் செய்றதிட்டமானது (அ) நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் 73,000 மக்களிற்கான விரிவாக்கப்பட்ட கழிவுநீர் சேகரிப்பு சுத்திகரிப்பு முறைமை மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், (ஆ) தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்தல் தரமுயர்த்துதல், (இ) வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கு நுழைவு வசதிகள், (ஈ) கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி தந்திரோபாயம் மற்றும் அமுக்கம் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு என்பனவற்றிற்காக அமுலதக்கப்பட்டுள்ளது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவர் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

(iv) செயற்திட்டம் தொடர்பான 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கான சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக முனைப்பழியுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், பின்வருவன செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த விடயங்களாக உள்ளன.

## 3. வீதி நிர்மானம் மற்றும் போக்குவரத்து துறை

### 3.1 தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்)

(i) வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) ஆனது தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கு அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. கடன் மீளப்பெறல் காலாவதி 2021 ஜுன் 5 இல் மூட பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய மற்றும் 2016 மார்ச் 24 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2016 மற்றும் 01/2019 இன் பிரிவு 3.2.2 இன் ஏற்பாடுகளிற்கு முறணாக, ரூபா 1.4 மில்லியன் தொகையான ஓர் பிழையான சம்பள படி செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டதன் காரணமாக 02 உத்தியோகத்தர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்று வருடத்திற்கு ஒரு முறையான அறிக்கை 2020 இல் பரிந்துரைத்தபடி 2022.02.01 இலிருந்து செல்லுபடியாகுமாறு அவ் உத்தியோகத்தர்களின் சம்பளங்களை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தான தெளிவுபடுத்தலிற்காக காத்திருக்கின்றனர். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் பொது நிர்வாக சுற்றிக்கை என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு முரணாக, செயற்திட்டமானது 2021 ஜூலை 31 இல் உள்ளவாறு எஸ்பிஎம்யூவின் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் 3 பேரிற்கு 50 சதவீத கொடுப்பனவு, ஈபிஎப் (EPF) மற்றும் ஈடிஎப் (ETF) உள்ளடங்களாக ரூபா 1.9 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அட்டவணை 01 இல் கூறப்பட்டிறாத செயற்திட்ட உத்தியோகத்தர்களின் பதவிக்கான சம்பளம் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 இல் ஆரம்ப ஆட்சேர்ப்பு கட்டத்திலான சமனான பதவிக்கான சம்பளத்தின் ஆரம்ப நிலையின் அடிப்படையில் காணப்படல் வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்று வருடத்திற்கு ஒரு முறையான அறிக்கை 2020 இல் பரிந்துரைத்தபடி 2022.02.01 இலிருந்து செல்லுபடியாகுமாறு அவ் உத்தியோகத்தர்களின் சம்பளங்களை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தான தெளிவுபடுத்தலிற்காக காத்திருக்கின்றனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கடனானது 2013 ஜுன் 05 இலிருந்து செல்லுபடியாகியிருந்தும், பால நிர்மானத்தின் தாமதம் காரணமாக, ஜப்பான் யென் 12,381 மில்லியனில் 37 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் ஜப்பான் யென் 4,586 மில்லியன் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.<br>மேலும், 2018 மற்றும் 2019 முடிவில் உள்ளவாறான கடன் ஒதுக்கீட்டில் 43 சதவீதம் மற்றும் 37 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் முறையே யென் 5,378 மில்லியன் மற்றும் யென் 4,587 மில்லியன் மேற் கூறிய காரணத்தின் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்த முடியாமல் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் காலப்பகுதியினுள் வேலைப்பரப்பினை பூர்த்திசெய்ய பால நிர்மான வேலைகளை திட்டமிடல் வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி கொள்வனவு மற்றும் நகர்த்தல் சேவைகளை பூர்த்திசெய்ய மும்மொழியப்படுகின்றது. | காணி கொள்வனவு மற்றும் நகர்த்தல் சேவைகளை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | பால வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பிற்கான ஆலோசனை சேவை 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 37 பாலங்களின் வடிவமைப்பு 2015 இல் ஆலோசகரினால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.<br>இருப்பினும், மொத்த வடிவமைப்புக்களில், 8 பால வடிவமைப்புக்கள் மாத்திரம் கடன்காலம் முடிவில் 2 ஒப்பந்த பொதிகளின் கீழ் 18 புதிய பாலங்களின் நிர்மானத்திற்காக | நட்டத்தினை குறைக்க எதிர்கால பால நிர்மான வேலைகளில் மிகுதி வடிவமைப்புக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏனைய நிதி வளங்களை பயன்படுத்தி பாலநிர்மானங்களிற்கு மிகுதி வடிவமைப்புக்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 3 பாலங்களின் நிர்மானம் பிரதான பாலங்கள் நிர்மான செயற்திட்டத்தின் ஆலோசகரினால் செய்யப்பட்ட வடிவமைப்புக்களை பயன்படுத்தி செயன்முறையிலுள்ளது. |

செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, 19 பாலங்களின் வடிவமைப்பிற்காக செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட அண்ணளவாக ரூபா 275 மில்லியன் கிரயம் செயற்திட்டத்திற்கு பயனற்றதாக போய் காணப்பட்டது.

### 3.2 புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம்

(i) புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டமானது நாட்டின் நிதி மற்றும் நிர்வாக தலை நகரங்களிலுள்ள பாரிய போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் மற்றும் சேவை வழங்களினை அதிகரிப்பதற்காக கொழும்பு கோட்டையினை துறைமுக நகரம், கொழும்பு துறைமுகம், மாலபே கல்வி வலையம் மற்றும் பத்தரமுல்லை நிர்வாக மையம் உள்ளடங்களாக ஏற்கனவேயுள்ள அதிவேகப்பாதை வலையமைப்புடன் இணைப்பதனூடாக அதிவேகப்பாதை வலையமைப்பின் இணைப்பினை அதிகரித்தலிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 193 பில்லியனான் ஆகும். முன்மொழியப்பட்ட செயற்திட்டமானது பொது தனியார் பங்குடமையாக (பிபிபி) வடிவமைத்தல்-நிர்மானித்தல்-பராமரித்தல் மற்றும் மாற்றுதல் (டீபீஎப்ஓஎம்டி) எனும் அடிப்படையில் அமுல்படுத்தவேண்டும்.

(iii) செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்ககைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2025 இல் 3 வருடங்களிற்குள் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2016 இல் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தும், செயற்திட்டத்தின் சிவில் நிர்மான வேலைகள் செயற்திட்டத்திற்கான முதலீட்டாளரை தெரிவு செய்வதில் தாமதம் காரணமாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 வருடங்கள் கடந்தும் கூட ஆரம்பிக்க முடியாமலிருந்தது. மேலும், கட்டம் II (ராஜகிரியவிலிருந்து அத்துருகிரிய வரை 10.4 கிமீ) இற்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை (ஈஐஏ) 2021 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு கூட சுற்றாடல் பாதுகாப்பு பிரிவினூடாக (ஈபிஏ) நெடுஞ்சாலை அடிச்சுவடு செல்வதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கிடப்பட்ட திகதிகளில் நடவடிக்கைகளை தாமதமின்றி செயற்திட்டத்திற்கான முதலீட்டாளர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அமைச்சரவையானது முன்மொழிவுகளை மதிப்பிட்டு கட்டமைத்து அமைச்சரவை அமைச்சர்களிற்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க இணக்கப்பாட்டு குழு மற்றும் செயற்திட்ட குழுவினை நியமித்திருக்கின்றது. | |
| (ஆ) | ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய பிரிவின் மீது கொள்வனவு செய்யவேண்டிய 821 காணித்துண்டுகளில், 03 சதவீதமான பௌதீக செயலாற்றல் மாத்திரமே 2020 ஆம் ஆண்டு முடிவிலுள்ளவாறு செயற்திட்டத்தினால் அடையப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் காணிசுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்ய பிரதேசசெயலகங்கள், நிளஅளவைதிணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்துடன் முறையான ஒருங்கிணைப்பை வைத்திருத்தல் வேண்டும். | காணிகளின் கொள்வனவினை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |

## 3.3 ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம்

(i) ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டமானது இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கி.மீ களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜூன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், காணி கொள்வனவு நடவடிக்கைகளில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் போன்றன காரணமாக 2021 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுறோக, இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கி.மீ களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பன தாமதமடைந்திருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் காரணமாக வட்டி ரூபா 286 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 1,600 மில்லியன் தொகையான இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1716 காணித்துண்டுகளிற்காக அதன்மீது செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 22 காணித்துன்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | காணி கொள்வனவு நடவடிக்கையினை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணியை பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

## 3.4 ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம்.

(i) ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டமானது கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நாரஹேம்பிட்டிய – நுகெகொட வீதியின் மீள் நிர்மானம் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 12,347.37 மில்லியனுக்குச் சமமான 94.99 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியினால் வழங்க உடன்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், காணி கொள்வனவு நடவடிக்கைகளில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் போன்றன காரணமாக 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுறோக, புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் என்பன தாமதமடைந்திருந்ததுடன் வீதி பயன்பாட்டாளர்கள் வீதி புனரமைப்பின் நன்மைகளை பெற்றுக் கொள்வதில் தாமதம் கானப்பட்டது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| 911 அரச காணிகள் உள்ளடங்களான 5,493 காணித்துண்டுகளில், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 காணித்துன்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக ரூபா 1,175 மில்லியன் தொகையான வட்டி செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | காணி கொள்வனவு நடவடிக்கையினை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணியை பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

## 3.5 துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம்

(i) துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டமனது துறைமுகம் மற்றும் முன்மொழியப்பட்ட பல்நிலை போக்குவரத்து மையத்தினூடாக புதிய களனி பாலம் தொடக்கம் காலி முகத்திடல் வரை 04 சந்துகளைக் கொண்ட 5.3 கி.மீ நீளமான மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலையை நிர்மானிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 56,815.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 47,346 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது.

(iii) 2016 பெப்ரவரியில் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2016 மார்ச் இல் பெறப்பட்டதுடன் 2025 ஜூன் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினையும் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | துறைமுக நுழைவினை மேன்மையுறச் செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 10,382 தொகையான 8 நடவடிக்கைகள் என்பனவற்றின் பௌதீக செயலாற்றல் இலக்குகளிற்கு பின்னாக காணப்பட்டது. மேலும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் கூட இலக்குகளிற்கு பின்னாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்ய நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உடன்பட்டதுடன் சீர்செய்யும் நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மானத்தின் தற்போதைய பௌதீக செயலாற்றல் 29.4 சதவீதம். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த திட்டம், செயல்திட்டம், பெறுகைத்திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை ஏனையவற்றுடன் பொறுந்தாததுடன் செயற்திட்டத்தின் குறிக்கோல்களுடன் வரிசைப்படுத்தப்பட்டது. | செயற்திட்டத்தின் செயலாற்றல் திட்டம், பெறுகைத்திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் என்பன செயற்திட்ட இலக்குகளை அடைய பயன்படுத்தப்பட வேண்டும். | உடன்பட்டனர். ஏஜி(AG) இன் பரிந்துரைகளை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அனைத்து தொடர்புடைய பிரிவுகளும் 2022 ஆம் ஆண்டிற்கான செயன்முறைத் திட்டம் மற்றும் ஏனைய அறிக்கைகளை தயாரிக்கும் போது ஒருங்கினைக்கப்படுகின்றது. |
| (இ) | ரூபா 6,508 மில்லியன் மற்றும் ரூபா 5,858 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வெளிநாட்டு கடனின் பயன்படுத்தலிற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக பொதுத்திறைசேரியினால் | காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடன் வசதிகளினையும் பயன்படுத்த நிதித்திட்டத்திற்குள் ஒதுக்கீடு | ஏற்றுக்கொண்டனர். | |

| | |
|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்த ஒதுக்கீட்டில், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீட்டில் 33 சதவீதம் மற்றும் 73 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,182 மில்லியன் மற்றும் ரூபா 4,302 மில்லியன் தொகை ஒப்பந்த கையளிப்பில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் வேலைகள் போன்றன காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட நிதிகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம்

(i) றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டமானது நாட்டின் தந்திரோபாய மற்றும் சமூக நிலைமையை முன்னேற்றுவதற்காக தெற்கு அதிவேக பாதை மற்றும் மத்திய அதிவேக பாதைக்கும் இடையில் புதிய அதிவேக பாதையை நிர்மாணிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் அன்னளவாக ரூபா 286,000 மில்லியனானதுடன் அமைச்சரவை அமைச்சானது திறைசேரியின் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு வங்கி முறைமையினால் நிதியளிக்க தீர்மானித்திருந்தது. செயற்திட்டமானது 24.3 கி.மீ நீளத்துடனான கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய பிரிவு வரையான செயற்திட்டத்தின் கட்டம் 1 இலுள்ள அதன் நடவடிக்கைகளை 2021 மே 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2 ½ வருடங்களிற்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் கஹதுடவ இடமாறலிலுள்ள 2 கி.மீ மற்றும் இங்கிரிய தொடக்கம் பெலேமுல்ல பிரிவு வரையான வீதியின் நீளம் 47.6 கி.மீ என்பனவற்றின் நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், 76.40 கி.மீ களில் 24.3 கி.மீ கள் மாத்திரமே நிர்மானத்திற்காக கையளிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கஹதுடுவ இடமாறலிலுள்ள 2 கி.மீகள் மற்றும் இங்கிரிய தொடக்கம் பெல்மடுள்ள வரையான பிரிவின் 47.6 கி.மீ வீதி நீளம் என்பன செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 6 வருடங்கள் கடந்ததன் பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்க முடியாமலிருந்தது. கட்டம் II இற்கான (இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான 47.6 கி.மீ) சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கைக்கான (ஈஐஏ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கொள்வனவு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இங்கிரிய தொடக்கம் பெல்மடுல்ல வரையான 47.6 கி.மீ மிகுதி வீதி பிரிவிற்கு சுற்றாடல் விளைவு மதிப்பீட்டு அறிக்கையினை (ஈஐஏ) பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொன்டனர். | |

## 3.7 தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம்

(i) தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டமானது தென்பகுதி நெடுஞ்சாலைகள் இணைப்பு வீதிகளின் 33 கிலோமீற்றர்களை தரப்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென

பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி காணி கொள்வனவில் தாமதம், பொதுப்பயன்பாடுகளை நகர்த்தல் மற்றும் வேலைப்பரப்பு மாற்றம் போன்ற காரணங்களினால் 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுபேறக செயற்திட்டத்தின் நன்மைகளை பெற்றுக்கொள்வது தாமதித்திருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினையும் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | உரிய ஒப்பந்தங்களின் மொத்த செலவு மதிப்பீடு சரியான முறையில் தயாரித்து ஒப்பந்ததாரரிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். இருப்பினும், கூட்டு மொத்தம் ரூபா 1,110 மில்லியன் பெறுமதியான 2018-2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட 3 ஒப்பந்த பொதி களின் அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 626 வேலை உருப்படிகள் ஒப்பந்ததாரரினால் முழுமையாக செய்யப்படவில்லை. அதன் பெறுபேறாக, ரூபா 191 மில்லியன் பெறுமதியான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செய்யப்படாத வேலைகளிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | விபரமான பொறியியல் கற்கைகள் செய்யப்பட வேண்டியதுடன் அளவைப்பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் சரியான வேலைப்பரப்பினை அடையாளப்படுத்தலும் வேண்டும். | உடன்பட்டதுடன் எதிர்கால ஒப்பந்தங்களில் பின்பற்ற கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்த பொதி சீ.பி01, சீபி02 & சீபி03 என்பன வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட அம்பத்தல – சினேக் சந்தி மற்றும் கிருலப்பானை தொடக்கம் கொடகம வீதியின் எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் ஒப்பந்ததாரரினால் அடையப்படடிருக்கவில்லை. | இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்தி செய்வதனை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கோவிட் பரவல் நிலமை காணப்பட்ட போதிலும் வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சீபி 04 ஆனது வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 248.6 மில்லியன் தொகையான ஒப்பந்ததாரர் இறுதி கொடுப்பனவு பத்திரம் செயற்திட்டத்தினால் கொடுத்து தீர்க்கப்பட்டிராததுடன் ஒப்பந்த மேலதி கிரயங்களிற்காக கடன் வழங்கும் முகவரிடமிருந்தான அனுமதியில் தாமதம் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட சுமார் 1 1/2 வருடங்கள் செலுத்த வேண்டிய பொறுப்பாக காணப்பட்டது. ஒப்பந்ததாரர் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவில் தாமதம் செயற்திட்டத்தின் கிரயத்தனை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும். | மேலதிக பெறுவனவுகளை குறைக்க தாமதமின்றி ஒப்பந்ந உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் பொறுப்பினை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எம்பிசீ (MPC) இனால் அனுமதிக்கப்பட்ட மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி (ரூபா 2488 மில்லியன்) இற்குள் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எஸ்ஆர்சீபி (SRCP) கடனின் கடன் சேமிப்பிலிருந்து தீர்ப்பனவு செய்ய ஏடிபி உடனான கலந்துரையாடல் செயன்முறையிலுள்ளது. |
| (ஈ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அரசாங்கத்திற்கு சொந்தமான 548 காணித்துண்டுகள் உள்ளடங்களாக 3,558 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய படடியலிடப்பட்டிருந்தது. மொத்தமாக ரூபா 9,500 மில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி கொள்வனவு செலவிற்காக | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணி உரிமையை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இழப்பீடு மற்றும் வட்டி செலுத்தப்பட்ட அனைத்து துண்டுகளும் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி உரிய பிரதேச செயலாளரிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஓர் நிலையான செயன்முறை பிரிவு 44 இனை வழங்கும் போது காணப்பட முடிந்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 5,243 மில்லியன் காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்கள் குழுக்களின் தீர்மானத்தின் கீழ் அதன் மீது செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 289 மில்லியன் 2020 திசெம்பர் 31 வரை இழப்பீடுகளின் கொடுப்பனவில் தாமதம் மீதான வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித காணித்துண்டுகளும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | ஒப்பந்த பொதி 02 இன் மொத்த கிரயம் ரூபா 3,064 மில்லியனாக இருந்ததுடன் அதில் 20 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் ரூபா 510 மில்லியன் தொகை அதனடுத்த மாற்றங்களிற்காக நிகழத்தகக்க ஏற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் தேவையான அனுமதி பெறப்படாமல் நிர்மானத்தில் அதனடுத்த வேலைப்பரப்பு மாற்றம் காரணமாக மொத்த ஒப்பந்த பெறுமதியில் 51 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தமாக ரூபா 1,573 மில்லியன் மாறல்கள் செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டியினை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு விடுவிக்கப்பட முன்னர் உரிய அதிகார சபையிடமிருந்து தேவையான அனுமதிகள் பெறப்படவும் வேண்டும். | தேவையான அனுமதிகள் பெறப்படுகின்றன. | செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |

## 3.8 போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம்

(i) போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டமானது சொத்து முகாமைக்கான வீதி அபிவிருத்தி அதிகர சபையின் திறனை அதிகரித்தல் மற்றும் பைலட் முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயல்திறன் சர்ந்த சலை ஒப்பந்த முறைமையை யன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக பேகலியகொடவிலிருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் ஜா-எல – சிலாபம் வரையான வீதித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியனிற்கு சமமான ரூபா 18,125 மில்லியனானதுடன் மொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சபையினால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும், 2018 ஒகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம், பேகலியகொடவிலிருந்து புத்தளம் வரையன வீதியிலுள்ள ஜா-எல தொடக்கம் சிலபம் நகரத்தின் முடிவு வரையான வீதியின் வீதி நிமான வேலைகள் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடுகள் ரூபா 1,305 மில்லியனுக்குச் சமமான 9 மில்லியன் அமெரிக்க டொலர் வரை குறைக்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜுன் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஒகஸ்ட் 15 இல் மீள் கட்டமைக்கப்பட்டு 2023 ஜுன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினையும் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நடைமுறை வேலை 233.35 மில்லியனில், மொத்தமாக | நட்டங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் | முந்நிலைப்படுத்தப்பட்ட நட்டங்கள் வடிவமைப்புக்கள், வரைபுகள் மற்றும் ஏல | TCAMP இனால் OPBRC ஒப்பந்த வடிவத்திற்காக தயாரிக்கப்பட்ட ஏல |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 90.57 மில்லியன் ஜாஎல பிரிவிலுள்ள சிலாபமிருந்து பேகலியகொட – புத்தளம் வீதிக்கான ஆரம்பகட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் மீது செலவிடப்பட்டிருந்தது. 2018 மார்ச்சிலான அரசாங்க தீர்மானத்தின் பிரகாரம் மேற்கூறிய பிரிவு அமுல்படுத்தல் திட்டத்திலிருந்து கைவிடப்பட்டிருந்தது. அதனால் அச் செலவினங்கள் ஒரு பலனற்றதாக காணப்பட்டது. | வேண்டும். | ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் உண்மையான செயற்திட்டத்திற்கு செய்யப்பட்ட பிரதானமான வேலைப்பரப்பு மாற்றம் காரணமாக ஏற்பட்டிருந்தது. எனவே மீள்சீரமைக்கப்பட்ட செயற்திட்டங்களில் அவ்வாறான கடுமையான வேலைப்பரப்பு மாற்றங்களினை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆவணங்கள் ஐ வீதி செயற்திட்டத்தின் வீதி முகாமைத்தவ ஒப்பந்தங்களிற்காக பயன்படுத்தப்படுகிறது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்து முகாமைத்துவம் மற்றும் அலகு ரீதியான திரன்மேன்பாடு போன்றவற்றை செயல்படுத்தல் மற்றும் திறன் கட்டியெழுப்பல், பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை வழங்கள், வீதி பாதுகாப்பு மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் பௌதிக செயலாற்றல் இலக்கிடப்பட்ட 13.05 சதவீதம், 7.76 சதவீதம் மற்றும் 3.23 சதவீதத்திற்கு பின்னால் முறையே 8.22 சதவீதம், 3.2 சதவீதம் மற்றும் 1.7 ஆகவிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 05 எண்ணிக்கையான பிரதான ஒப்பந்தங்களின் மொத்த கிரயம் அண்ணளவாக ரூபா 450 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நோக்கம் பூர்த்தி செய்ய முடியுமானதுடன் இலக்குகள் WB கடன் காலாவதி திகதிக்கு முன்னர் அடைய முடியும். |
| (இ) | மொத்தமாக ரூபா 236.12 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் 2018 இல் விசேட (டொலர்) கணக்கிற்கு மாற்றியமைக்கப்பட்டிருந்தும், | செயற்திட்டதின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் கடன் காலாவதியாவதற்கு | மிகுதித்தொகை ரூபா 98.7 மில்லியன் (மீள்மதிப்பீட்டு மிகை தவிர்த்து) 2021 மூன்றாம் காலாண்டின் முடிவில் முழுமையாக செலவு | ஆதிக பெறுமதிவாய்ந்த வெளிநாட்டு நிதிகளின் பயன்படுத்தல் செயற்திட்ட முடிவில் கீழ்வரும் பகுதிகளில் செலவளிக்க |

| | | | |
|---|---|---|---|
| 82.63 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 195 மில்லியன் மற்றும் 58.19 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 137.4 மில்லியன் செயற்திட்டதினால் பயன்படத்தப்பட்டிராததுடன் முறையே 2019 மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (டொலர்) கணக்கில் செலவு செய்யப்படாமல் காணப்பட்டது. | முன்னர் பூர்த்தி செய்ய அவைகளை துரிதப்படுத்தவும் வேண்டும். | செய்யப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் மீண்டும் விசேட டொலர் கணக்கிற்கு செய்யப்பட்டுள்ளது<br><br>நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | திட்டமிடப்பட்டுள்ளது.<br>- உபகரணங்கள் கொள்வனவு<br>- வீடு மற்றும் வெளிநாட்டிற்குள்ளான ஆலோசனை மற்றும் சேவை ஒப்பந்தம். |

## 3.9 போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் கூறு (மாகாண வீதி அபிவிருத்தி)

(i) போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு (மாகாண வீதி அபிவிருத்தி) ஆனது சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு – 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியன் தொகையானதுடன் மொத்தத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தனால் வழங்க உடன்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது ரூபா 7,769.86 மில்லியன் கிரயமான ஒப்பந்தங்களினை கையளிப்பதற்கு, அபிவிருத்தி செய்ய வேண்டிய வழிகள் மற்றும் விபரமான செயற்திட்ட அறிக்கைகளை தயாரிக்கவும் தேவைப்படுகின்றது. இருப்பினும் எவ்வித செயலாற்றலும் ஆண்டின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | போதுமான செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. | விடையம் தீர்க்கப்படவில்லை. |
| (ஆ) | 15 தனிப்பட்ட ஆலோசகர்கள் தெளிவில்லாத பெறுகை செயன்முறை ஊடாக செயற்திட்டத்திற்கு நேர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து போதுமான சேவைகளை பெற்றக்கொள்ள எவ்வித முறையான உள்ளககட்டுப்பாட்டு முறைமை காணப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனையை பெறுகை செய்ய பெறுகை வழிகாட்டிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். | இச்செயற்திட்டம் வீதி அபிவிருத்தி அமைச்சிடமிருந்து இவ்அமைச்சினால் பெறப்பட்ட ஓர் செயற்திட்டமானதுடன் எவ்வித ஆலோசனை நிறுவனம் அல்லது ஏனைய செயற்திட்டங்களைப்போல் முன்திட்டமிடப்பட்ட செயற்திட்ட கட்டமைப்பு காணப்படவில்லை. | விடையம் தீர்க்கப்படவில்லை. |

## 3.10 போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டம்

போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டமானது செயற்திட்டங்களின் பரீட்சிப்பு கட்டத்தின் போது சாத்தியவள ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்தல் ஆதரவை வழங்குவதன் மூலம் வீதி, புகையிரத பாதை மற்றும் துறைமுக உப துறைகளில் முன்னுரிமைப் போக்குவரத்து செயற்திட்டங்களின் தொடக்கத் திறனை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

### 3.10.1 வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

(i) ஆர்டிஏ கூறின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,697.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.34 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,496.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(ii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iii) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

(iv)

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 4 இன் பிரகாரம் செயற்திட்டத்தால் தாங்கிக்கொள்ளப்படும் மொத்த வட்டி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 6 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 40,434 தொகையான வட்டி மாத்திரமே நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிர்மாண காலப்பகுதியினுள் உருவாக்கப்படும் வட்டிகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 4 கடன்பெறல் கிரயத்தின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டும். | இவ்விடயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினை பெற்றுக்கொள்ள ADB இற்கு கூறப்பட்டுள்ளது. | அவதானிப்பிலுள்ள உண்மை இன்னும் காணப்படுகின்றது. |
| (ஆ) | செயற்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் வீதிக் கூறுகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 11.34 மில்லியன் ஆகும், இதில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் ADB ஆல் வழங்கப்படுகிறது. | செயற்திட்டம் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் மீது நிதிகளை பயன்படுத்த வேண்டியதுடன் செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்த்த | பரிலலித்திருக்கவில்லை. | அவதானிப்பிலுள்ள உண்மை இன்னும் காணப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுமார் ஐ.அ.டொலர் 7.41 மில்லியன் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத் திகதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 2.58 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | வருமானத்தை பெறுவதற்கு செயற்திட்டங்கள் சரியாகத் திட்டமிடப்படலும் வேண்டும். | | |
| (இ) | இதுவரை செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்படுவதற்கு இனங்காணப்பட்ட பணி விடயங்களில், ரூபா 338 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான ஆலோசனை (தனிநபர்) - சர்வதேச PPP பெறுகை ஆலோசனையாளர் மற்றும் அதிவேகப் பாதை அபிவிருத்தி செயற்திட்டம் ஆகிய பெயர்களிலான இரண்டு வேலை விடயங்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் செயற்திட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேறம்பேசல் குழு (CANC) PPP ஒப்பந்தத்தினை இறுதிப்படுத்த தொடர்ச்சியாக பேறம்பேசலை நடாத்துகின்றது. | இவ் அறிக்கை திகதி வரை இவ் அவதானிப்பிலுள்ள உண்மைகள் இன்னும் காணப்படுகின்றன. |

## 3.10.2 இலங்கை புகையிரதத்தினால் (கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டம்) செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

(i) இலங்கை புகையிர கூறின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,654 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,456.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(ii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தம்பர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iii) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினையும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தர்.

இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்களிலிருந்தான செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீடு ஐ.அ.டொலர் 15 மில்லியனை விடக் குறைவாக இருந்ததனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (2019 மார்ச் 15 இல் திருத்தப்பட்டது) முதலாவது வகைப்படுத்தலின் கீழ் செயற்திட்டப் பதவியணியினரின் சம்பள அளவுத்திட்டங்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும். ஐ.அ.டொலர் 100 மில்லியனை மிஞ்சுவதற்கு வெளிநாட்டு நிதிகளை நிறுவ ஆய்வு செய்வதற்கு எவ்வித ஏற்பாடுகளும் காணப்பட்டிராத போதிலும் ரூபா 12.89 மிலலியன் மேலதிக கொடுப்பனவுகள் 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது 38 செயற்திட்ட ஊழிய அங்கத்தவர்களிற்கான சம்பள கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமை மேற்கூறிய சுற்றறிக்கை நிபந்தனைகளிற்கு முறனானதாகும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | சம்பள படிமுறைகளுடன் தொடர்புபட்ட சம்பளங்களின் இடமானது முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செய்யப்பட்டுள்ளது. | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற்றுக்கொள்ள எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 5 வருட காலப்பகுதிக்கான கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்தின் செயற்திட்ட | செலவினங்கள் செயற்திட்ட நிர்வாக கையேட்டில் | இது REIP செயற்திட்டத்தின் கீழான முன்னுரைக்கப்பட்ட நிதி | இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவ பிரிவின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 0.50 மில்லியனாகும். இருப்பினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஐ.அ.டொலர் 665,351 இனை செலவழித்திருந்தது. இது காலப்பகுதிக்கான இரண்டு வருடகாலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட தொகையினை ரூபா 30,822,782 இற்குச்சமனான ஐ.அ.டொலர் 165,351 இனால் அதிகரித்திருந்தது. | செய்யப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் தொடர்புபட்டு செய்யப்படல் வேண்டும். | வசதியினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. எனவே இது PMU கிரயம் எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ஐ.அ.டொலர் 0.5 இனை மிஞ்சுகின்றது என அடையாளப்படுத்தப்படும் போது PMU கிரயம் மிஞ்சுவதினை உடனடியாக நிறுத்தியிருந்தது. | |
| (இ) | மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் சிமாட் பயணச்சீட்டு வழங்கல் மற்றும் இருக்கை ஒதுக்கீட்டு முறைமை செயற்திட்ட நோக்கெல்லையின் கீழ் வராத போதிலும் அந்நோக்கத்திற்காக மதியுரை சேவையை வழங்குவதற்கு தனிப்பட்ட மதியுரையாளருக்கு ரூபா 4.83 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அது தொடர்பான மீள்குடியேற்ற திட்டம் தயாரிப்பதற்கும் சமூக ஆய்வை மேற்கொள்வதற்கும் யூஎன்-கபிற்றற் இற்கு ரூபா 77.14 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நோக்கெல்லை மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் அதன்படி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். | புகையிரத சிமார்ட் பயணச்சீட்டு வழங்கள் மற்றும் இறுக்கை ஒதுக்கீட்டு முறைமைக்கான வடிவமைப்பு மற்றும் ஏல ஆவணங்கள் என்பனவற்றின் தயாரிப்பிற்கான ஆலோசனை சேவையை பெற்றுக்கொள்வதற்காக அது REIP இன் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் ரூபா 4.92 மில்லியன் செலவுகள் ஏற்பட்டிருக்கின்றது. | தொடர்பற்ற செயற்திட்ட செலவுகளை கணக்குகளிலிருந்து மாற்றம் செய்ய எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2018-2020 காலப்பகுதியின் போது களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையின் இருபுறங்களிலும் உள்ள 2,036 அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை மூன்று வருட காலப்பகுதியினுள் மீள்குடியேற்றுவதற்காக | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட படியான தேவைப்பாடுகளின் பிரகாரம் ரூபா 9600 மில்லியன் KV வரிசையுடன் சேர்ந்த புகையிரத வரிசையில் குடியிருக்கும் குடும்பங்களிற்கு மீளமர்த்தல் | 534 வீடமைப்பு பிரிவுகள் மாத்திரம் இன்றைய திகதி வரை KV வரிசையுடன் சேர்ந்த புகையிரத பாதையில் வாழும் குடும்பங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடாந்த பாதீட்டில் ரூபா 9,600 மில்லியன் தொகை மேற்கொள்ளப்படடடுள்ளது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்களுக்காக 386 வீட்டு அலகுகள் மாத்திரமே கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நிர்மாணங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வசதியளிக்க அமைச்சரவை தீர்மானத்தினால் ஒதுக்கப்பட்டது. | |

## 3.10.3 இலங்கை துரைமுக அதிகாரசபையினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

(i) இலங்கை துரைமுக அதிகாரசபைக் கூறின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 729.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 645.01 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.42 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(ii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் நிதிக்கூற்றுக்கள் 2020 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

(iii) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| No. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஒக்தோபரில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வுக்கான ஆலோசனை | பொறுப்புகளை நிர்ணயிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு | கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான சாத்தியவள கற்கைக்கான ஆலோசனை சேவை அடையாளப்படுத்தப்பட்டிருந் ததுடன் ஓர் ஒன்றிணைந்த | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கருத்தின் பிரகாரம் ஒன்றிணைந்த திட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சேவை 2020 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 2020 பெப்ரவரி 24 இல் வழங்கப்பட்டது. இதன் விளைவாக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் காணப்பட்டது. | விரிவான திட்டமொன்று செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட வேண்டும். | ADB மற்றும் சர்வதேச ஏல நடைமுறை பின்பற்றப்பட்டதன் பின்னர் அது AECOM இற்கு வழங்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்டு கணக்கானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஒன்றிணைந்த திட்டம் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ரூபா 180 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 21.9 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | உண்மையில் ஆண்டின் போது செய்யக்கூடிய செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | செயற்திட்டமானது 2020 ஜுன் தொடக்கம் 2020 நவம்பர் வரை இடைநிறுத்தல் நிலையில் வைக்கப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகள் பட்டியலிடப்பட்ட பிரகாரம் செலவிடப்படவில்லை. | 2021 டிசெம்பர் 31 அளவில் மொத்த மீளப்பெறல் ஐ.அ.டொலர் 1.3 மில்லியனாகும். |

## 3.11 இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டம்

(i) இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டமானது செயற்திறனான போக்குவரத்து இயலளவினை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து தேவையின் விரைவான அதிகரிப்பு காரணமாக போக்குவரத்து நெரிசலிற்கு உதவுவது பெரும் சவாலாகவுள்ள கொழும்பு பெருநகர் பகுதியில் இலகு புகையிரத போக்குவரத்தினை(LRT) அறிமுகப்படுத்துவதன் மூலம் போக்குவரத்து பிரச்சனையை குறைப்பதன் ஊடாக நகர சுற்றாடலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதற்கு அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான் யென் 246,641 மில்லியனாக காணப்பட்டதுடன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 286,839 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 200,215 மில்லியன் தொகையை ஜேஐசீஏ (JICA) 2019 – 2024 காலப்பகுதியின் போது 06 பகுதிகளின் கீழ் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை வழங்க உடன்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 மார்ச் 25 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கொழும்பில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கான நீண்டகால தீர்வொன்றாக ஜப்பானின் நிதியுதவியின் கீழ் இலகு ரயில் போக்குவரத்து செயற்திட்டம் 2017 மே 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க JICA நிதியில் இருந்து ரூபா 4,622.45 மில்லியன் தொகை மற்றும் திறைசேரி நிதியேற்பாட்டில் இருந்து ரூபா 923.18 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 5,545.63 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அச் செயற்திட்டம் தொடர்பாக செலவிடப்பட்டிருந்தது. 2020 ஒக்தோபர் 06 ஆம் திகதிய 20/1450/312/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் குறித்த செயற்திட்டம் விலை உயர்ந்ததாக உள்ளதுடன் கிரயம் குறைந்தது அல்ல என்பதால், செயற்திட்ட அலுவலகம் மூடப்படும் | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வு நடாத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| | என்றும் செயற்திட்டத்தின் அனைத்து சொத்துக்களும் போக்குவரத்து அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட செலவினங்கள் பயனற்றதாகியிருந்தன. | | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக, ஆலோசனை நிறுவனம் அதற்கு பெற வேண்டிய ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 31.36 மில்லியன் தொகையை கோரியிருந்தது, அவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக 2021 பெப்ரவரி 23 இல் அமைச்சரவையால் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. | நியமனம் செய்யப்பட்ட குழு உடனடியாக இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக, மொத்த கடன் தொகையின் 0.2 சதவீதம் தொடர்பாக 2019 மே 23 இல் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன் இறுதிக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ஜப்பான் யென் 60.08 மில்லியனுக்குச் சமமான ரூபா 102.73 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. அத்துடன், கடன் வழங்கும் முகவரிற்கு (JICA) யென் 2,703.18<br><br>இற்கு சமமான ரூபா 4,622.45 மில்லியன் தொகையான கடனை மீளச் செலுத்தும் பொருட்டு முன்னணி | தேவையற்ற செலவினங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | முகவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | கேள்வி ஆவணங்களை 2020 யூன் 30 இற்கு முன்னர் தயாரித்து சமர்ப்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 26.13 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை கூட கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முழுமையானதும் செயற்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் மாலபேயில் இருந்து பத்தரமுல்லைக்கு செல்லும் பயன்பாட்டு பாதை மற்றும் கொழும்பு நகருக்குள் நிலத்தடி பயன்பாட்டு பாதையை மாற்றுதல் மற்றும் நிலத்தடி கேபிள் ஒட்டுதல் ஆகியவற்றிற்கான மூலப்பொருள் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 36 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் 2021 யூலை வரையிலும் ரூபா 8 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | ஆலோசனை நிறுவனம் வழங்கிய ஆலோசனை அறிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்டத்தை பொது தனியார் பங்குபற்றல் (PPP) செயற்திட்டமாக தொடர்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும், 2021 திசெம்பர் இறுதி வரை ஒன்றரை ஆண்டுகள் கடந்த போதிலும் புதிய | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு முழுமையானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டத்தினை வினைத்திறனாக முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 4 தனிப்பட்ட ஆலோசனையாளர்களுக்கு ரூபா 21.43 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் மீளாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | ரூபா 3,419.52 மில்லியன் பெறுமதியான 114 நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2020 ஆம் ஆண்டிண் இறுதி வரை கையளிப்பதற்கு பட்டியலிடப்பட்ட 16 ஆலோசனை அறிக்கைகளில், 11 அறிக்கைகள் மாத்திரமே ஆலோசனையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட அறிக்கைகளில் 7 அறிக்கைகள் மாத்திரமே செயற்திட்டத்தால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆலோசனை உடன்படிக்கைகளின் பிரகாரம் தாமதமான 5 அறிக்கைகளிலிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, சேதங்களை அறவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி ஆலோசனைப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் சேதத்தை அறவீடு செய்வதற்கு ஆலோசனை உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும். | இழப்பீடுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.12 கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம்

(i) கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டமானது அடுத்த 20 வருடங்களிற்கான தேசிய போக்குவரத்து முறைமையிற்கு அதன் பங்களிப்பினை

உறுதிப்படுத்த கொழும்பு புறநகர் பிரிவில் இலங்கை புகையிரத சேவையினை அபிவிருத்தி செய்ய அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 33,878 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 192 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 28,232 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | காலப்பகுதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் குறைப்பயன்பாட்டிற்காக ரூபா 34 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணமொன்றை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. | நிர்வாக கட்டுப்பாடுகள் பலமாக இருக்க வேண்டும். | ஒப்படைப்பு கட்டணங்கள் தொழிற்சங்கங்களினால் எழுப்பப்பட்ட ஆட்சேபனை, அமைச்சர் சார்ந்த அமைச்சர்களின் மாற்றங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை இலக்கினை அடைவதில் தாமதம் போன்றன காரணமாக ஏற்பட்டிருக்க வேண்டும். | ரூபா 46 மில்லியன் 2021 இல் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | கண்டியை அண்டிய புகையிரதத்தின் விபரமான திட்டத்தை தயாரிப்பதற்கான மற்றும் ஓர் வெளி நாட்டு ஆலேசனை நிறுவனத்துடன் சாத்திய | முழு முன் மொழிவுகளையும் அமுல்ப்படுத்தும் போது அமைச்சரவை தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | இக் கூறிற்கான ஆலோசனை பெறுகை செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை 2018.05.09 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2019.12.10 இல் | இன்னும் செயற்திட்ட கூறின் செயலாற்றல் மந்தகதியாக இருக்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வள கற்கையினை செய்வதற்குமான ஒப்பந்தம் யூரோ 1,385,208, ஐ.அ.டொலர் 2,642,014 பெறுமதிக்கு கையொப்பமிடப்பட்டது. ரூபா 194 மில்லியன் மற்றும் ரூபா 49 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் பின்னர் செயற்திட்டக் கூறு 2020 திசெம்பர் 31 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | | கையெழுத்திடப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பு முற்பணம் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டமானது கைவிடப்பட்டிருந்ததுடன் ERD இன் மதிப்பீட்டின் பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகள் 2021.04.30 இலிருந்து மீளஆரம்பிக்கப்பட்டது. | |
| (இ) | 2018 மே 16 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் நான்கு (4) முன்மொழிவுகளிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் போக்குவரத்து அமைச்சு செயலாளரின் மேற்படி அங்கீகாரத்திற்கு முரணாக ஐ.அ.டொலர் 62.79 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்து இன்னொரு 13 உப முன்மொழிவுகளிற்காக ஏடிபீ உடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. | வேலை முன்மொழிவுகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து அமைச்சரவைத் தீர்மானம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | REIP இல் உள்ளடக்கப்பட வேண்டிய அபிவிருத்தி தலையீடுகளின் பட்டியல் SLR, MOT, ERD உடனான ADP தூதுக்குழு கூட்டத்தில் மேலும் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக REIP இன் கிழான உருப்படிகளின் பட்டியல் ADB மற்றும் GOSL என்பவற்றிற்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஏனைய 3 மும்மொழிவுகள் 2021 இல் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாக கைநூல் | தனியான முகாமைத்துவ பிரிவு | செயற்திட்டத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் | கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்ட |

| | | | |
|---|---|---|---|
| பகுதி இ அட்டவணை 4 இன் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக தனியான செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 25.4 மில்லியன் தொகை சம்பளமாக கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டம் என கூறப்படும் ஏடிபீ கடன் இல 3425 இலிருந்து ஏனைய செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் தெடர்பு பட்ட உத்தியோகத்தர்களிற்கு சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்படல் வேண்டும். | ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் MSD இன் அனுமதியின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. | PMU 2019 இல் புதிய செயற்திட்டம் CSRIEP இணைக்கப்பட்டிருந்தது. |

## 3.13 வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் மத்திய (ஆர்டிஏ) கூறு

(i) வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டமனது வட மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 170 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைத்து முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,790 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 146 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது.

(iii) மேலும் 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2890 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மேலதிக நிதியளித்தல் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 68 மில்லியனை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. அதில் ரூபா 4,420 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 34 மில்லியன் வட மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள தேசிய வீதி நெடுஞ்சாலைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(iv) ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் 2010 ஒக்தோபர் 22 இல் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்திருந்தது. மேலதிக நிதியளித்தல் உடன்படிக்கைகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(v) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர்.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் புனரமைக்கப்பட்ட 03 தேசிய வீதிகளின் 03 வருட செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்புப் பணிகள் உட்பட 10 பொதிகளின் கீழ் வழங்கப்பட்ட வட மற்றும் வடமத்திய மாகாணத்தின் 06 தேசிய வீதிகளின் 170 கிலோமீற்றரிலான பிரிவுகளின் புனரமைப்புப் பணிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், ஏனைய 02 தேசிய வீதிகளின் புனரமைப்புக்கான ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் கீழ் வீதிகளை புனரமைப்பது தொடர்பாக சேமிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் மேலதிக நிதி ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட வட மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள 07 தேசிய வீதிகளின் 122 கிலோமீற்றரிலான ஏனைய பிரிவுகளின் புனரமைப்புப் பணிகள் 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. கடன்களின் சேமிப்புக்களில், யு 009 கண்டி யாழ்பாண வீதியை
புனரமைப்பதற்காக புதிய ஒப்பந்தம் 2017 ஏப்ரல் 28 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு ரம்பேவ தொடக்கம் மதவாச்சி வரையிலான 9.64 கிலோமீற்றரிலான வீதிப் பிரிவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், மதவாச்சி, ஹொரோவ்பத்தான வீதி (டீ238) பிரிவில் இருந்து புனரமைப்பதற்கு அமைச்சரவை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயற்திட்டம் அங்கீகாரத்தை பெற்றிருந்ததுடன் அவை தொடர்பாக இரண்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், புனரமைப்பு பணிகள் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 3.14 வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - மாகாண கூறு

(i) வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பு - மாகாண கூறானது வட மாகாணத்திற்குள்ளும் வடக்கு பிரந்திளம் மற்றும் தெற்கு பிராந்தியத்திற்கும் இடையே வீதி இணைப்பினை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,600 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 34 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,058 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மே 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 யூன் 30 இல் பூர்த்தி செய்திருந்தது. இருப்பினும் செயற்திட்ட காலப்பகுதி மத்திய (ஆர்டிஏ) கூறு நீடிப்பின் காரனமாக 2020 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| இச் செயற்திட்டம் மாகாண வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு வீதிக்கும் செயற்திட்டத்தினால் ஏற்பட்ட கிரயத்தை ஒதுக்கீடு செய்து உரிய சபைகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு வீதிக்குமான மொத்தக் கிரயங்களை ஒதுக்கீடு செய்து உரிய சபைகளிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்விடயங்கள் தீர்க்கப்படவில்லை. |

## 3.15 ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம் (ஐ - வீதி)

(i) ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) ஆனது கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நெடுங்கால விளைவகும்.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஜூன் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2024 செப்தம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உப பிரிவு 4.2 இன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரர்களினால் அவர்களது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், வேறான ஒரு கொடுப்பனவு உருப்படி ஆரம்பகட்ட மற்றும் பொதுவான உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் செய்யப்பட்டுள்ளமை ஒப்பந்ததாரரிற்கு மீளப்பெற முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். | அளவைப்பட்டியலிலுள்ள கொடுப்பனவு உருப்படி நீக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் அவரது சொந்த செலவில் செயலாற்றல் உத்தரவாதத்தினை வழங்குகின்றார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதன்படி, மொத்தமாக ரூபா 564.45 மில்லியன் 2020 வரை ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | தேசிய வீதிகளின் 218.19 கி.மீ மற்றும் கிராமிய வீதிகளின் 3,106.10 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியின் போது புனரமைக்க எதிர்பார்த்திருந்தும், தேசிய வீதிகளின் 104.13 கி.மீ மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப திட்டத்துடன் இணங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய காலத்தில் இலக்கினை அடையவும் வேண்டும். | ஐ-வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2014 தொடக்கம் 2024 வரையாகும். ஆரம்பகாலப்பகுதியின் போது கிராமிய வீதிகளிற்கு அதனது நிலமைகள் ஏனைய வீதிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் மந்தகதியாக இருந்ததால் அதிக முன்னுரிமை வழங்கப்படுகின்றது. | தற்போது திட்டமானது 2022 பெப்ரவரி 10 இல் கையளிக்கப்பட்ட மிகுதி 104.13 கி.மீ உள்ளடங்களாக தேசிய வீதிகளின் 350 கி.மீ யை புனரமைக்க மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 38 கி.மீ கள் பெறுகை செயன்முறையின் கீழ் உள்ளது. ஏலங்கள் 112 கி.மீ களிற்காக கோரப்பட்டுள்ளது. |
| (இ) | கிராமிய வீதிகளின் 2,203.87 கி.மீ களின் புனரமைப்பு வேலைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், 12 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட கிராமிய வீதிகளின் 1,000.43 கி.மீ நீளம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். | ADB ஒப்பந்தங்களில், மதிப்பீட்டின் போது ஒப்பந்ததாரர்களின் மந்தகதியான செயலாற்றலை தவிர்க்க பெறுகை ஆவணங்களில் புதிய பிரிவுகள் உள்ளடக்கப்பட்டன. ஒப்பந்தங்கள் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய கையளிக்கப்பட்டிருந்தது. இது மீள்ஏலத்திற்காக எவ்வித நீதிமன்ற உத்தரவுகளினையும் கொண்டிருக்கவில்லை. நீதிமன்ற அனுமதியுள்ள சில ஒப்பந்தங்களிலுள்ள வீதிகள் ஒப்பந்ததாரரிகளுடன் | சுமார் 520 கி.மீ வீதிகள் ஏற்கனவே கையளிக்கப்பட்டதுடன் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தில் நிர்மானத்தின் கீழ் உள்ளது. 391 கி.மீ வீதிகள் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தவிர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 326 கி.மீகள் உள்நாட்டு வங்கி நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மீள ஏலமிடலை தடுப்பதற்கான நீதிமன்ற உத்தரவினை கொண்டுள்ள 154 கி.மீ நீளத்திற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தீர்ப்பனவு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் பின்னர் உள்நாட்டு வங்கியால் நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 12 கைவிடப்பட்ட ஒப்பந்தபொதிகளில், 03 ஒப்பந்தபொதிகள் 2019 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்தது, 2020 திசெம்பர் 31 இல் கூட மிகுதி வேலைகளை தொடர எவ்வித நடவக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். | உத்தரவு கட்டளை இல்லாத 6 ஒப்பந்தங்கள் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக கையளிக்கப்பட்டிருந்தது. 4 ஒப்பந்தங்கள் உள்நாட்டு வங்கி நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்திடம் கையளிக்கப்பட்டது. மீள்ஏலத்திற்கான உத்தரவுள்ள 2 ஒப்பந்தங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. | இவ்விடயத்தினை தீர்ப்பதற்கான கலந்துரையாடல் செய்யப்படுகின்றது. |
| (உ) | கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில், 05 ஒப்பந்த பொதிகளின் மிகுதி வேலைகள் மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்தினூடாக செய்து முடிக்க மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீள்கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 5,007 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கைவிடப்பட்டதன் காரணமாக பெறுமதி அதிகரித்திருந்ததுடன் 5 ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகள் ரூபா 3886.6 மில்லியனாக சரிசெய்யப்படல் வேண்டும். செய்யப்பட வேண்டிய மீளப்பெறப்படாத முற்பண கொடுப்பனவு கணிப்பீடுகளில் உள்ளடக்கப்படவில்லை. தொழில் வழங்குனர்களின் கொடுப்பனவுகளினூடாக அத்தொகையினை மீளப்பெற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மீள கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் செயலாற்றல் திருப்திகரமாக உள்ளது. புதிய ADB ஒப்பங்களிற்காக தெரிவு செய்யப்பட்ட கைவிடப்பட்ட ஒப்பந்ததாரரிகளின் மந்தகதியான செயலாற்றலை தடுக்க பெறுகை ஆவணங்களில் புதிய பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ஓர் தீர்ப்பனவு உடன்படிக்கை மீளாய்வாண்டின் போது கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 100,000 கி.மீ ஊடாக அதே தோல்வியுற்ற ஒப்பந்ததாரருடன் 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மீகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 580.14 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | மேலும் தாமதமின்றியும் மேலதிக கிரயங்களின்றியும் நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அதிகரிக்கப்பட்ட பெறுமதி ரூபா 580.14 மில்லியன் கணக்காய்வாளர்களின் தவறான கருத்ததாக இருந்தது. மொத்த வேலைகள் ஒப்பந்ததாரர்களிற்கு செய்யப்பட்ட மொத்த கொடுப்பனவுகள் மற்றும் புதிய ஒப்பந்தங்களின் ஒப்பந்த கூட்டுமொத்தம் என்பனவற்றை சேர்த்து கணக்கிடப்பட்டிருந்தது. இருப்பினும் இக்கணிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீளப்பெறப்படாத முற்பணகொடுப்பனவை உள்ளடக்கியிருந்தது. இது நீக்கப்படல் வேண்டும் சரியான மேலதிக கிரயம் ரூபா 108 மில்லியன்கள் மற்றும் அவ்வாறான அதிகரிப்புக்கள் என்பன அனைத்து அளவீடுகள் மற்றும் கொடுப்பனவு வகை ஒப்பந்தங்களில் எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றன. ஏல ஆவணங்களின் தற்போதைய பிரிவின் பிரகாரம் கைவிடப்பட்ட ஒப்பந்ததாரர்களிற்கு கைவிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருடங்களிற்கு எவ்வித ஒப்பநதங்களும் கையளிக்கப்பட மாட்டாது. | திருத்தப்பட்ட பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 12 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 2,668.47 மில்லியம் தொகையான செயலாற்றல் பத்திரத்தினை பணமாக மாற்ற மீளாய்வாண்டின் இறுதிவரை கூட நிகழ்ச்சித்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்த்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உத்தரவுகட்டளையை வெற்றிடமாக்கி உத்தரவாதங்களை பணமாக மாற்றுவதற்கான சட்டவிவகாரம் செயன்முறையில் உள்ளது. | உத்தரவு கட்டளை வணிக உயர்நீதிமன்றத்தினால் ஒரு ஒப்பந்தத்திற்காக (G1) வெற்றிடமாக்கப்பட்டது. பணமாக மாற்றுவதற்கான கடிதம் இலங்கை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்ததாரர் மேன்முறையீடு ஒன்றை செய்திருந்ததுடன்பதவி நடைமுறை நிலையை பேண கட்டளையிடப்பட்டது. |
| (ஏ) | கடன் வழங்கும் முகவர் கைவிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புடய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்று அதனை திருப்பிச் செலுத்த அறிவுறுத்தியிருந்தும், செயற்திட்டமானது 2018, 2019 மற்றும் 2020 ஆண்டிற்கான 8 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 1,830 மில்லியன் தொகையான பெற வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்றுக்கொள்ள தவறியிருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பெற வேண்டடிய வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 04 கைவிடப்பட்ட பொதிகள் உள்ளடங்களாக 12 | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்த்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உத்தரவுகட்டளையை வெற்றிடமாக்கி உத்தரவாதங்களை பணமாக மாற்றுவதற்கான சட்டவிவகாரம் செயன்முறையில் உள்ளது. | உத்தரவு கட்டளை வணிக உயர்நீதிமன்றத்தினால் ஒரு ஒப்பந்தத்திற்காக (G1) வெற்றிடமாக்கப்பட்டது. பணமாக மாற்றுவதற்கான கடிதம் இலங்கை வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்ததாரர் மேன்முறையீடு ஒன்றை செய்திருந்ததுடன்பதவி நடைமுறை நிலையை பேண கட்டளையிடப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொதிகளுடன் தொடர்புபட்ட ரூபா 2,793 மில்லியனாகவிருந்தது. | | | |
| (ஐ) | ரூபா 158.2 மில்லியன் அவசர வேலைகளை பூர்த்திசெய்வதற்காகவும் 2019 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணத்திலுள்ள கைவிடப்பட்ட 05 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட வீதிகளை வாகனங்கள் செல்லும் சாலையாக மாற்றவும் ஏனைய இரண்டு செயலிலுள்ள ஒப்பந்ததாரர்களினால் 2020 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்தது. | உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஏற்பட்ட மேலதிக செலவுகளை மீளப்பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இத்தொகை செயலாற்றல் பாதுகாப்பினூடாக வேலை வழங்குனர் கொடுப்பனவின் கீழ் பெறப்படும் இருப்பினும் ஒப்பந்ததாரர்கள் உத்தரவு கட்டளையை பெற்றனர். உத்தரவுகட்டளையை வெற்றிடமாக்கி உத்தரவாதங்களை பணமாக மாற்றுவதற்கான சட்டவிவகாரம் செயன்முறையில் உள்ளது. | சட்டநடைமுறையின் கீழ் உள்ளது. |
| (ஒ) | களுத்துறை மாவட்டத்திலுள்ள கேஎல்2 மற்றும் கேஎல்3 ஒப்பந்த பொதிகள் 35.15 சதவீதம் மற்றும் 51.83 சதவீதம் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அவைகள் 2019 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டிருந்தது. மேலும், கிரவல்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் நிர்மானத்தினை கவனத்தில் கொள்ளாது அது வீதிகளின் பல அடைவெளிகளில் தார்/காபட் இடப்பட்டிருந்ததுடன் ரூபா 772.84 மில்லியன் மற்றும் 747.47 மில்லியன் முறையே அவ் இரண்டு பொதிகளிற்கும் செலுத்தப்பட்டிருந்தது. | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 3 புதிய ஒப்பந்தங்கள் கேஎல்3 ஒப்பந்தத்தின் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையளிக்கப்பட்டிருந்தது கேஎல்2 இன் ஒப்பந்ததாரர் மறுஏலத்திற்கான உத்தரவினை பெற்றிருந்தனர். | கேஎல்3 வேலைகளின் நிர்மான வேலைகள் நடைமுறையிலுள்ளது. கேஎல்2 இற்காக சட்டசெயன்முறையிலுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | அக்கர 500 தொடக்கம் சாஹரபலன்சூரிய வீதியின்(ஐடி30) 3+700 எனும் இடத்தில் அமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிழக்கீழ் பாலம் ஒரு புதிய நிழக்கீழ் பாலத்தின் நிர்மானத்திற்காக இடிக்கப்பட்டிருப்பினும், அது ஒப்பந்த பொதி கேஎல்03 கைவிடப்பட்டதன் காரணமாக 2021 மார்ச் 10 இலான வெளிக்கல விஜய திகதி வரை கூட ஆரம்பிக்கப்பட்டிரக்கவில்லை. வீதிகளின் பாவனையாளர்கள் அசௌகரியங்களிற்கு முகம் கொடுத்ததுடன் வீதியினை தொடர்புபடுத்த விதியின் பக்கத்திலுள்ள தனிப்பட்ட காணியினை பயன்படுத்துவதனூடாக தற்காலிக தீர்வினை ஏற்படுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஓப்பந்தமானது மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்காக கையளிக்கப்பட்டுள்ளது. | வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. |
| (ஔ) | சில வீதிகளின் புனர்நிர்மானம் ஏபீசி அடுக்கினை இட்டதன் பின்னரே கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சட்டசெயற்பாடுகள் நடைமுறையிலுள்ளது. | சரிசெய்யப்படவில்லை. |
| (க) | திரண்ட ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 1,471.26 மில்லியன் மந்தகதியான செயலாற்றல் மற்றும் ஒப்பந்ததாரர்களின் முடிவுறுத்தல் போன்றன காரணமாக வழங்கப்படாத/பயன்படுத்தப்ப | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் உபபிரிவு 2.03 இன் பிரகாரம் கடன் பெறுனர் ஒரு வருடத்திற்கு 0.15% ஒப்படைப்ப கட்டணம் செலுத்துவார் அக்கட்டணம் இவ் உடன்படிக்கை | சரிசெய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | டாத வருமானங்கள் மீது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. | | திகதியின் பின்னர் 60 நாட்கள் ஆரம்பமாகும் போது கடனின் முழுத்தொயின் மீது (நேரத்திற்கு நேரம் குறைந்த தொகையான மீளப்பெறல்கள்) அட்டுறு செய்யப்படும். | |
| (ச) | நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கூறின் படி, கிராமிய மார்க்க வீதிகள் காலநிலை நியமங்களினை முகங்கொடுக்கக்கூடிய வகையில் புனரமைக்கப்பட வேண்டியதுடன் மூன்று வருட காலத்திற்கு பராமரிக்கப்படலும் வேண்டும். இருப்பினும், 2019 நவம்பர் 27 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக வெளிக்கள விஜயத்தின் மீது, வீதிகளின் நிழக்கீழ் மேற்பரப்பு மீது சில வெடிப்புக்களும், கேயு4 பொதியின் கீழான குருநாகல் மாவட்டத்திலுள்ள மீஓயா பாலம் மற்றும் நீலம்பதுவேவ தொடக்கம் உடுவிவுல்வெவ வீதியினூடாக கசிகோட்டை சந்தி தொடக்கம் பில்ல வரையான சில இடங்களில் வீதி மூழ்கியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பின்னர், அவ்வீதிகள் அன்மைய வெள்ளத்தினால் முழுமையாக அழிவடைந்து காணப்பட்டமை 2020 மே 13 இல் அவதானிக்கப்பட்டிருந்தது. எனவே, உருப்படியினது | நிர்மான விடயங்களை திருத்தவும் வீதிகளின் தரத்தினை உறுதிப்படுத்தவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முற்பணங்கள் மற்றும் செயலாற்றல் உத்தரவாத பத்திரங்களை காசாக மாற்றுவதற்கான சட்டசெயன்முறை நடைமுறையிலுள்ளது. ஓப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் அம்மேலதிக கிரயம் உத்தரவாத பத்திரத்தினை பணமாக்குவதன் மூலம் மீளப்பெறப்படும். | சட்டசெயற்பாடுகள் நடைமுறையிலுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நோக்கமானது நிகழ்ச்சித்திட்டத்தினால் நிறைவேற்றப்படாமல் இருந்தமையை அது வெளிக்காட்டுகின்றது. | | | |
| (ட) | 1981 இன் 03 ஆம் இலக்க பொதுமக்கள் ஒப்பந்தச்சட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு பங்காளர்களுடன் இணைந்து ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் வெளிநாட்டு ஒப்பந்ததாரர் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். எனினும், உள்நாட்டு ஒப்பந்ததாரர்களுடன் இணைந்து வடமேல் மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தின் வீதி புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டுள்ள சீனா மற்றும் இந்தியாவிலிருந்தான ஒப்பந்ததாரர்களின் 02 நிறுவனங்களின் பதிவினை உறுதி செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், குருநாகல் மாவட்டத்திலுள்ள கேயூ3 மற்றும் கேயூ5 பொதிகளின் கீழான உரிய ஒப்பந்தங்கள் மந்தகர செயலாற்றலை ஏற்படுத்தக்கூடிய ஒப்பந்ததாரர்களின் இயலளவினை ஆரம்பகட்டத்தில் நிகழ்ச்சித்திட்டத்தினால் முறையான மதிப்பீடு | பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளம் கானவும் சுற்றறிக்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதில் அலட்சியம் குறித்து நடவடிக்கை எடுக்கவும் செயற்திட்ட கண்கானிப்பு பிரிவால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெறுகைகள் ADB பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செய்யப்படுகின்றது. அது கடன் உடன்படிக்கையில் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது வெளிநாட்டு JV களினூடாக தெரிவு செய்யப்பட்ட நிதி மற்றும் தொழிநுட்ப இயலளவை வைத்திருக்க வேண்டிய தேவையில்லாத உள்நாட்டு ஒப்பந்ததாரரை தடுக்க ஏல ஆவணங்களில் புதிய உபபிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | மந்தகதியான செயலாற்றலையுடைய ஒப்பந்ததாரர்கள் 2021 இல் கையளிக்கப்பட்ட RMC ஒப்பந்தங்களிற்காக தெரிவு செய்யப்படவில்லை. |

செய்யப்பட்டிராததன் காரணமாக, பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது.

## 3.16 இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (ஐ-வீதி - II)

(i) இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (i-வீதி - II) ஆனது கிராமப்புர சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையிலான வீதிகளின் அடயக்கூடிய தன்மையினை அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து திறனை அதிகரிப்பது நீண்டகால தாக்கமொன்றாகும்.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஜூலை 20 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீதமாகும். இருப்பினும், முறையே 2019 | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் | ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர் காரணங்கள் குறிப்பிடாமல் கோரப்படுவதன் மீதான குறைந்தபட்ச பெறுமதியை விட குறைவான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்த பொறியியலாளர்களை | மாற்றியமைக்கப்பட்ட உபபிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 2020 ஆம் ஆண்டிண் போது போது பல்வேறு பொதிகளின் கீழான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 130 மற்றும் 259 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வேண்டும். | அனுமதிப்பதனூடாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவுகள் கோவிட் 19 நிலைமை மற்றும் உள்ளீடுகளின் பற்றர்குறை போன்றனவற்றின் விளைவாலான மேலதிக கிரயங்களை சமாளிப்பதற்கு ஒப்பந்ததாரர்களிற்கு நடைமுறையில் உதவியது. | |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரரினால் அவரது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், மொத்தமாக ரூபா 85.64 மிரல்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் மீதான கிரயத்தினை மீளபெற்றுகொள்வதற்கு ஊவா மாகாணத்திலுள்ள ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். | BOQ விலுள்ள கொடுப்பனவு உருப்படி நீக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் செயலாற்றல் உத்தரவாதத்தினை அவரது சொந்த செலவில் வழங்குகின்றார். |
| (இ) | ஒப்பந்த குறித்த விடயங்களின்/ நிபந்தனைகளின் உபபிரிவு 119.1(1),(2) மற்றும் (3) இன் பிரகாரம் வேலைகள், உபகரணம;, மூன்றாம் நபர்கள், ஆதனங்கள், வேலையாட்களின் இழப்பீடு மற்றும் தொழில்சார் இழப்பு காப்பீடு என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடி 02 மற்றும் பிடி 03 பொதிகளின் ஒப்பந்ததாரரினால் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த குறிப்புகளில் ஒப்புதலலித்த படி ஒப்பந்ததார்களிடமிருந்து தேவையான காப்புறுதிகளை பெற்றக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தேவையான காப்புறுதிகள் ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதிகள் பயன்பாட்டிலுள்ளது. |
| (ஈ) | 2017 மார்ச் 15 ஆம் திகதிய பெறுகை கைநூலின் பிரிவு 4.2.3 இற்கான பின்னினைப்பு 31 இன் பிரகாரம் பெறுகை | பெறுகை நடவடிக்கைகள் ஒப்புதலலிக்கப்பட்ட நேர காலத்திற்குள் பூர்த்தி | பெறுகை நடவடிக்கைகள் அவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் தற்போது செய்யப்படுகின்றது. GOSL | தற்போதைய பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளிற்கான உயர்ந்தபட்ச காலம் தேசிய மற்றும் சர்வதேச விலை மனுவிற்கு 15 வாரங்களாகவிருந்தும், வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள கட்டுமான வேலைக்கான பெறுகைகளிற்கான பெறுகை செயற்பாட்டு காலம் 25 வாரங்கள் தொடக்கம் 38 வாரங்கள் என்ற வீச்சில் நியம நேர காலத்தை மிஞ்சியிருந்தது. | செய்யப்படல் வேண்டும். | ஆனது வருடாந்த நிதித்தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் ஐ வீதி ஒப்பந்தங்களை கையளிக்க RDA வினை அனுமதிப்பதனூடாக உண்மையான பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு அப்பால் கடந்த வருடங்களில் பாதீட்டு ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. | கொண்டிருக்கின்றன 2021 இல் மீளப்பெறல்கள் உண்மையான பாதீட்டு ஒதுக்கீடுகளை விட 10 மில்லியன் மேலதிகமாக இருந்தது. |
| (உ) | 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மானத்துறை அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் இலங்கையிலுள்ள ஏதாவது அடையாளப்படுத்தப்பட்ட நிர்மான வேலையில் ஈடுபடுவதற்கு முன்பு நிர்மான துறை அபிவிருத்தி சபையில் (சீஐபீஎ) ஓர் ஒப்பந்ததாரராக தற்காலிக பதிவினை பெற்றிருத்தல் வேண்டும். இருப்பினும், நிகழ்ச்சித்திட்டமானது 09 ஒப்பந்ததாரர்களுடன் தொடர்புபட்ட சில ஒப்பந்தங்களின் கையளிப்பிற்கு முன் சீஐபீஎ வின் பதில் தேவைப்பாட்டினை கவனத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கு முன்னர் ஒப்பந்ததாரரின் தரப்படுத்தல் செய்யப்படல் வேண்டும். | பெறுகைகள் ADB பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செய்யப்படுகின்றது. அது கடன் உடன்படிக்கையில் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஊ) | 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் ரூபா 5 மில்லியனிற்கு அதிகமான பெறுமதி கொண்ட பொது ஒப்பந்தங்களின் விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை சேகரிக்கும் முன்னர் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த பதிவினை கூட | விலைமனுதாரர்கள் மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தம் என்பன பொது ஒப்பந்த நட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். | பெறுகைகள் ADB பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செய்யப்படுகின்றது. அது கடன் உடன்படிக்கையில் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெற்றிருக்க வேண்டியிருந்தும் செயற்திட்டமானது உரிய விலைமனுதாரர்களின் தொழிநுட்ப விலைமனுவினை பரிசீலிக்கும் போது அத் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (எ) | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 27 தேசிய வீதிகளின் 340 கி.மீ கள் மற்றும் 1,405 கிராமிய வீதிகளின் 3,400 கி.மீ களின் வீதி புனர்நிர்மான வேலைகள் ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தினால் 53 பொதிகளின் கீழ் புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தும், 27 தேசிய வீதிகளின் 319.96 கி.மீகள் மற்றும் 1,349 கிராமிய வீதிகளின் 3,313.16 கி.மீகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப திட்டத்துடன் இணங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய காலத்தில் இலக்கினை அடையவும் வேண்டும். | மீள் ஏலமிடப்பட்ட 2 ஒப்பந்தங்கள் (43.6 கி.மீ) தவிர்ந்த அனைத்து கிராமிய வீதிகளும் கையளிக்கப்பட்டுள்ளது. மேல்மாகாணத்திலுள்ள புதிதாக மும்மொழியப்பட்ட தேசிய வீதிகளின் 73 கி.மீ களில் 44 கி.மீ கள் கூட இத் திகதியில் கையளிக்கப்பட்டுள்ளது. ஐ வீதி2 நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் காலம் 2017 தொடக்கம் 2027 வரையான 10 வருடங்களாகும் எனவே செயற்திட்ட வேலைப்பரப்பு 2027 இல் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் ஆனால் 2020 திசெம்பர் 31 இல் அல்ல அதன்படி அடையப்பெற்ற செயலாற்றல் இலக்கிற்கு மேலாக இருந்தது. | மிகுதி வீதிகளை கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஏ) | மொத்த நீளம் 25.05 கி.மீஇனை உள்ளடக்கிய 13 கிராமிய வீதிகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிரந்தது. மேலும், மிகுதி நடைமுறையிலுள்ள வீதி புனரமைப்புக்களில், தேசிய வீதிகளின் 39.97 கி.மீ மற்றும் கிராமிய வீதிகளின் 731.62 கி.மீகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும். | நிர்மான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பது டன் அடிக்கடி மற்றும் சரியான நேரத்திலான நடவடிக்கைகள் கோவிட் 19 மற்றும் உள்ளீடுகளின் பற்றாக்குறை போன்ற எதிர்பாராத விடையங்களின் தாக்கத்தினை குறைக்க எடுக்கப்படுகின்றது | கிராமிய மற்றும் தேசிய வீதிகளின் சுமார் 2000 கி.மீ கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு ள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனவே, மொத்தமாக கையளிக்கப்பட்ட தேசிய மற்றும் கிராமிய வீதி நீளங்களில் 21.93 சதவீதத்தினை மாத்திரமே இது பிரதிநிதித்துவப்படுத்தியது. | | | |
| (ஐ) | ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்ட பின்னர் கட்டுமான வேலைகள் ஒப்பந்ததாரரினால் அவசரமாக ஆரம்பிக்கப்பட வேண்டி இருந்தும், 37 ஒப்பந்த பொதிகள் கட்டுமான வேலைகளை ஆரம்பிப்பதற்கு 30 நாட்கள் தொடக்கம் 203 நாட்கள் என்ற வீச்சிலான காலம் தாமதித்திருந்தது. அத்தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கட்டுமான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது பயன்படுத்தப்படும் ஆவணங்களின் ஒப்பந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளல் கடிதம் கிடைக்கப்பெற்றதிலிருந்து 28 நாட்களிற்குள் ஆரம்பிப்பு திகதியை நிர்னயிப்பதற்காக மாற்றியமைக்கப்படுகின்றது. | ஒப்பந்த ஆவணங்கள் இவ்விடையங்களை எதிர்கொள்ள மாற்றிமைக்கப்படுகின்றது |
| (ஒ) | செயற்திட்டத்தின் பெறுகை திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் திட்டம் என்பனவற்றின் பிரகாரம், ஐ.அ.டொலர் 2,230,000 மதிப்பிடப்பட்ட கிரயதத்தில் 06 உபகரண பெறுகை நடைமுறைகளின் விலைமனு விளம்பரத்தினை பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்தும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவைகளில் எவ்வித பெறுகைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் மிருதுவான செயறபாட்டிற்கு தேவையான உபகரணம் உரிய நேரத்தில் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். | உபகரணப் பெறுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது | வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | பொறியியலாளர் மதிப்பீடு, விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பன அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட | நட்டத்தினை மீளப்பெற நிகழ்ச்சித்திட்டததினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ADB யின் ஏல மீளாய்வு விதிமுறைகளின் பிரகாரம் தனியான உருப்படிகள் அது உயர்வானதாக இருந்தாலும் கூட விகிதங்களை பேரம்பேசுவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் | தனியான உருப்படிகளை அனுமதிப்பதற்கு அவர்களது ஏல மதிப்பீட்டு வழிகாட்டிகளை அது |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியிருந்தும், ரூபா 48.2 மில்லியன் நட்டம் பொறியியலாளர் மதிப்பீடுகள், விலைமனு ஆவணங்கள் மற்றும் அளவைகள் பட்டியல் என்பவற்றில் விகித முறண்பாடுகள் மற்றும் பிழையான விளக்கம் என்பவற்றின் காரணமாக பீள 4 மற்றும் பீள 5 ஒப்பந்த பொதிகள் சார்பில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | | காணப்படவில்லை ADB ஆனது மொத்த ஏல விலையினை பேரம்பேசுவதற்கு மாத்திரமே அனுமதிக்கின்றது. இருப்பினும் எதிர்கால ஒப்பந்தங்களில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் BOQ விலுள்ள அவ்வாறான உருப்படிகளை பயன்படுத்தபமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சாத்தியமில்லாவிடிலும் கூட மாற்றியமைக்க ADB யிற்கு வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளது |
| (ஔ) | எம்01, எம்02 மற்றும் எம்03 பொதிகளுடன் தொடர்புபட்ட பொறியியலாளர் மதிப்பீட்டிற்கும் அளவைப்பட்டியல்களிற்கும் இடையே பல்வெறு ஆரம்ப கட்ட உருப்படிகளில் விகித முரண்பாடுகள் காணப்பட்டன. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மொத்தமாக ரூபா 1,035 மில்லியன் மாறல்கள் அம் 03 பொதிகள் தொடர்பில் அவதானிக்கப்பட்டது. | யதார்த்தமான முறையில் பொறியியலாளர் மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பல்வேறு ஒப்பந்ததாரர்களினால் கோரப்பட்ட விகிதங்கள் அப்பகுதியிலுள்ள குடும்ப அளவு மற்றும் ஒப்பந்தத்திற்க தேவையான நிர்மான வளங்களை வழங்கக்கூடிய அவர்களது ஆற்றல் என்பவற்றில் தங்கியுள்ளது. மேலும் அதிக எண்ணிக்கையான ஒப்பந்தங்கள் ஒரு மாவட்டத்தில் கையளிக்கப்படும் போது அம்மாவட்டத்தின் நிலம் மற்றும் மதிப்பீடு, ஊழிய விலைகள் என்பன சடுதியான கேள்வி அதிகரிப்புடன் அதிகரிக்கின்றது. அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் வழமையாக இவ்வாறான இடர்களை மதிப்பிடுவதுடன் அவர்களது ஏலத்தில் உரிய விகிதத்தினை உள்ளடக்குவதுடன் இவ்விகிதங்கள் ர்ளுசு விகிதங்களைவ விட அதிகமாக இருக்கக்கூடும் | மிகவும் எதார்த்தமான பொறியியலாளர்கள் மதிப்பீடுகளை தயாரிக்க முறையான முறையொன்று உருவாக்கப்பட மும்மொழியப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எனவே அனைத்து எதிர்பார்க்கப்பட்ட இடர்களையும் கருத்தில் கொண்டு மிகவும் எதார்த்தமான பொறியியலாளர்கள் மதிப்பீடுகளை தயாரிக்க முறையான முறையொன்று உருவாக்கப்படவேண்டும். | |
| (க) | அனைத்து ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் சில அளவை உபகரணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பபட வேண்டியிருந்தும், 2020 திசெம்பர் 31 இல் உளளவாறு மொத்தமாக ரூபா 593 மில்லியன் மற்றும் ரூபா 16.23 மில்லியன் ஒட்டுமொத்தமாக முறையே ஆய்வுகூடம் தளபாடம் மற்றும் நிலஅளவை உபகரணங்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இதனால் அசாதாரண ஒப்பந்த நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகளை ஏற்படுத்தலாம் என்பதை அது சுட்டிக்காட்டலாம். | ஒரு பொது நடைமுறையாக, உரிய சொத்துக்கள் தொழில் வழங்குனரால் தக்கவைத்துக்கொள்ளப் பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்ததாரரின் கிரயம் ஏனைய நன்கொடை வழங்கும் செயற்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளின் கிரயத்துடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். | ஒப்பந்த ஆவணத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலப்பகுதியின் போது உபகரணங்கள் பயன்படுத்துவதற்காக இவ்விகிதங்களை மேற்கொள் காட்ட வேண்டும். PMA ஆனது இவ்நிபந்தனைகளை வரைந்திருந்தது. ஏனென்றால் RDA வானது ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்ட ஐ வீதி மற்றும் ஏனைய செயற்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட அதேவகையான உபகரணங்களின் போதுமான இருப்பை கொண்டுள்ளது. எதிர்காலத்தில் RDA விற்கு ஏதாவது தளபாடங்கள் மற்றும் ஆய்வுகூட மற்றும் அளவை உபகரணங்கள் தேவைப்பட்டால் இந்நிபந்தனைகள், அந்நிபந்தனைகளிற்கு வழக்கு தொடர சரிசெய்யப்படும். | PMA வானது RDA வின் தேவைக்குறிய தளபாடங்கள் மற்றும் ஆய்வுகூட மற்றும் அளவை உபகரணங்கள் இற்கான தரவுகளை பெற்றுக்கொள்வதுடன் தேவைப்பட்டால் அதனடிப்படையில் நிபந்தனைகளை மாற்றம் செய்யும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ச) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி புனரமைப்பு செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலுள்ள ஆறு வீதிகள் வசதி நிர்வாக கையேட்டிலோ தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிற்கு கையளிக்கப்பட்ட தொடர்புடைய ஒப்பந்த பொதிகளின் கீழோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>எனவே எடீபீ மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சம்மதம் புதிதாக சேர்க்கப்பட்ட வீதிகளிற்கு செயற்திட்டத்தினால் பெறப்பட்டதா என்பதனை கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாமல் போகக்கூடும். மேலும், அவ் ஒப்பந்தங்களின் கையளிப்பு முறைகள் மற்றும் கடன்வழங்கும் முகவரிடமிருந்தான வேலைப்பரப்பு மாற்றங்களிற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. | வேலைப்பரப்பு கடன் வழங்கும் முகவர் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் சம்மதத்தின் பின்னரே மாற்றம் செய்யப்படல் வேண்டும். | ADB யின் அனுமதியினை பெற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | ADB யின் அனுமதி விரைவில் பெற முடியும். |
| (ட) | வடிகான்கள் கேஎல் 06 இன் கீழான வீதி ஐபீ இல 113ஏ பொத்தலாவ வீதி (மேலதிக) இல் அடித்தளம் (Wearing Cource) ஈடுவதற்கு முன் வீதியின் கடினமான பகுதிகளில் இரு பக்கங்கள் கூட நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.<br>எனவே, எதிர்காலத்தில் இயந்திரங்களை பயன்படுத்தி வடிகான்களிற்கு மண் அகழ்வு செய்யும் போது நிலக்கீழ் அடுக்கு பாதிப்படையலாம். 0+990 எனுமிடத்தில் ஒரு நிலக்கீழ் பாலத்தினை நிர்மானிக்க செயற்திட்டம் திட்டமிட்டிருந்தும், ஒரு கான்கிரீட் ஹியூம் குழாய் மாத்திரமே ஹியூம் குழாயை சுற்றி | நிர்மானங்கள் விசேட நிபந்தனைகளுடன் கண்டிப்பாக உடன்படல் வேண்டும். | PMU வானது அனைத்து சேதங்களும் திருத்தம் செய்யப்பட்டு இறுதி உற்பத்தி ஒப்பந்த குறிப்புறையினை உறுதிப்படுத்த பொறியியலாளரிற்கு அறிவுறுத்தியுள்ளது. | ஒப்பந்ததாரர் RDA விற்கு எவ்வித மேலதிக கிரயமும் இல்லாமல் இழப்புக்களை திருத்தியிருந்ததுடன் வீதி பிரிவுகளை பூர்த்திசெய்துமிருந்தார். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கான்கிறீட் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. மேலும், காபட் அடுக்கு தளத்தின் இருபக்கமும் கான்கிரீட் நிலக்கீழ் தளத்திற்கு இடம்விடாமல் ஏற்கனவே காபட் அடுக்கு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (த) | ரூபா 243.48 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள், மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்படாத பெறுவனவுகள் மீது கடன் வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரான திரட்டிய ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 449.51 மில்லியனாகும். | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பெறுனர் ஒரு வருடத்திற்கு 0.15% ஒப்படைப்ப கட்டணம் செலுத்துவார் அக்கட்டணம் இவ் உடன்படிக்கை திகதியின் பின்னர் 60 நாட்கள் ஆரம்பமாகும் போது கடனின் முழுத்தொயின் மீது (நேரத்திற்கு நேரம் குறைந்த தொகையான மீளப்பெறல்கள்) அட்டுறு செய்யப்படும். | 2021 ஆம் ஆண்டு காலத்தின் போது செயற்திட்டமானது உயர் மீளப்பெறல்களை அடைந்திருந்தது. |
| (ப) | 6 சிரேஸ்ட பொறியியலாளர்கள் பதவிகளில் 5 வெற்றிடங்கள், 14 ஒருங்கிணைத்தல் பொறியியலாளர்கள் பதவிகளில் 10 வெற்றிடங்கள், 28 பொறியியலாளர்கள் பதவிகளில் 8 வெற்றிடங்கள் மற்றும் 4 செயற்திட்ட கணக்காளர்கள் பதவிகளில் 2 வெற்றிடங்கள் என்பன 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றலை குறைக்க உகந்த வெற்றிடங்கள் நிகழ்ச்சித்திட்டத்தினால் பராமரிக்கப்படல் வேண்டும். | இவ்வெற்றிடங்கள் செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போதே அடையாளப்படுத்தப்பட்டதுடன் வெற்றிடங்களானது ஏதாவது வழங்கப்பட்ட காலத்தில் உள்ள வேலைச்சுமை ஏற்கனவே ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் சமாளிக்க முடியாமல் போகுமிடத்து மாத்திரமே நிரப்பப்படல் வேண்டும். இருப்பினும் சிரேஸ்ட பொறியியலாளர்கள், செயற்திட்ட பொறியியலாளர்களின் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் | உத்தியோகத்தர்களின் வேலைப்பலுக்கல் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்கள் அடயாளப்படுத்தப்படுவதுடன் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்த்தல் நடைமுறையிலுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | துணை உத்தியோகத்தர்களின் தேவைப்பாடு 2021 இல் இராஜினாமா செய்த உத்தியோகத்தர்களை ஈடுசெய்ய தேவைப்படுகின்றது. | |
| (ர) | செயற்திட்டத்தின் வசதி நிர்வாக கையேடு மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரிவு 9 என்பவற்றின் பிரகாரம், ஒவ்வொரு மாகாணத்திலும் செயற்திட்ட வழிகாட்டும் குழு மற்றும் மாகான ஒருங்கினைப்பு குழு கூட்டம் செயற்திட்ட அமுல்படுத்தலினை மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் ஒருங்கினைப்பு செய்ய ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒருமுறை நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும், அவ் இரண்டு குழு கூட்டங்களும் உகந்த அடிப்படையில் அதன்படி செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து வழிகாட்டல் குழுக்களும் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அமுல்படுத்தப்பல் வேண்டும். | நேரடியான செயற்திட்ட திசைமாற்றல் குழு RDA, MOH, பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரின் உத்தியோகத்தர் என்பனவற்றின் பங்குபற்றலுடன் எனது தலைமையின் கீழ் 2021 திசெம்பர் 16 இல் நடாத்தப்பட்டிருந்தது. மாதாந்த செயலாற்றல் கூட்டம் வேலை வழங்குனர்களின், பொறியியலாளர்களின் மற்றும் ஒப்பந்ததாரர்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் நடாத்தப்படுகின்றன. | வழமையான கூட்டங்களிற்கு மேலதிகமாக விஸேட மற்றும் அவசர கூட்டங்கள் தேவைப்படும் போது நடத்தப்படுகின்றன. |

## *4. மின்வலு மற்றும் எரிசக்தி துறை*

### 4.1 பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - திட்டம் - I

(i) பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - திட்டம் - I ஆனது தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட உயர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான பக்க முகாமைத்துவ கேள்வி மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ந ஐந்து கூறுகளின கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன.

(iii) நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,510 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,326 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அிவிருத்தி முகவரினால் (ஏஎப்டி) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iv) நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட காலம் 2023 நவம்பர் வரை நீடிக்கப்பட்டதன் காரணமாக தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் நாட்டு மக்களின் உண்மைத்தன்மையை முன்னேற்றுதல் போன்ற குறிக்கோல்கள் அண்ணளவாக இரண்டு வருடங்கள் தாமதமடைந்திருந்தது.

(v) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED/03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந் திகதிய SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை என்பனவற்றிற்கு முரணாக செயற்திட்டமானது உரிய ஊழிர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து 2020 ஒக்தோபர் 31 வரை ரூபா 47.7 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)/ முற்பணமளிக்கப்பட்ட வருமான வரி (APIT) என்பவற்றினை செலுத்தியிருந்தது. | தொடர்ச்சியாக சபைத் தீர்மானத்தை அமுலாக்குதல். | இலங்கை மின்சார சபையானது செயற்திட்ட ஊழியர்களுக்கு ஒக்தொம்பர் 2020 வரை சம்பளம் வழங்கியதுடன் ஊழியர்கள் நவம்பர் 2020 வரை உயர் தனிநபர் வருமானவரியைப் பெற்றுள்ளனர். | |
| (ஆ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு (2019 மார்ச் 15 திருத்திய 01/2019) இற்கு முரணாக செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு 2020 திசெம்பர் 31 வரை ரூபா 83.1 மில்லியன் கூட்டுத் தொகையான விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் மிகையூதியம் என்பன செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றல். | இது அனைத்து CEB உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்ட CEB யின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகளின் பிரகாரமாகும். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **பகுதி 01 - அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்சார உருவாக்கல் மற்றும் உப நிலையத்திற்கு இணைத்தல்**<br><br>மூல பூர்த்தியாக்கல் பட்டியல் திகதி 2029 யூன் மாதமாக இருந்தது. இது 2023 நவம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பிரதான சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தம் (லொட் ஏ2) மூல பூர்த்தியாக்கல் பட்டியல் திகதிக்கு பின்னரான போதும் 2019 ஒக்தோபர் 04 இல் வழங்கப்பட்டிருந்தது. லொட் ஏ1 மற்றும் ஏ2 மீதான ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் (லொட் ஏ3) 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்டிருந்த போதும் லொட் ஏ1 மற்றும் ஏ2 இற்கான ஒப்பந்தம் முறையே 2018 மே மாதம் மற்றும் 2019 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்பாரக்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | மகாவலி அணைக்கட்டின் மீள்வடிவமைப்பு மற்றும் அனுமதி நடைமுறையில் உள்ள சிக்கல்கள், ஒட்டுமொத்த தாமதங்களுக்கு பின்வருவன காரணங்களாகும் கொவிட்-19 தொற்று, இறக்குமதி கட்டுப்பாடுகள், இதில் மிக முக்கியமானது குண்டு வெடிப்பும், வெளிநாட்டவருக்கு விசா வழங்குவதில் ஏற்பட்ட தாமதம்,வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை, lot A2 மற்றும் B களை வாங்குவதில் தாமதம். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | **பகுதி 02 – உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு.** | | |
| | சகல நடவடிக்கைகளினதும் மூல பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் மாதமளவில் பட்டியலிடப்பட்ட போதிலும், செயற்பாட்டிலுள்ள நான்கு நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு 2021 ஆகஸ்ட் மாதமளவில் எதிர்பார்க்கப்பட்டது. | எதிர்பாரக்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல், பாதகமான நிபந்தனைகள், துணை ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினைகள் மற்றும் கொள்முதல் பொருட்களின் போக்குவரத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் கொவிட் 19 தொற்று நிலமை காரணமாக அனைத்தும் தாமதத்தில் தாக்கம் செலுத்தியது. |
| (உ) | நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தகைய பகுதி நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மேற்பார்வைக்கு பொறுப்பாக இருந்த மேலதிக பொது முகாமையாளரிற்குப் பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரிவு தலைவர்களின் கீழ் இருந்தது எனவே, செயற்திட்ட பகுதிகளின் ஒருங்கிணைப்பு திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | திட்டமிட்டப்பட்டவாறு இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் முறையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த வேண்டும். | முதல் இரண்டு பகுதிகளும் AGM திட்டப் பிரிவின் கீழும் மற்ற பகுதிகள் CEB இன் தனிப்பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. திட்டப் பிரிவானது பிரதான தலைமுறை மற்றும் பரிமாற்றம் தொடர்பான திட்டங்களை மட்டுமே கையாளுகிறதுடன் திட்டத்தின் நோக்கத்தில் ஏதேனும் விநியோகப் பகுதி சேர்க்கப்பட்டால் அந்தப் பகுதி விநியோகப் பிரிவின் கீழ் PMU ஆல் உள்ளடக்கப்படும். |
| (ஊ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்களின் (3146/3147) மூல முடிவுறுத்தல் திகதி 2020 மார்ச் 31 ஆக இருந்ததுடன் எதிர்பாரக்கப்பட்ட | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதிக்குள் இருக்கின்ற செயற்திட்ட | இது பிரதானமாக திட்டத்தின் 01 இன் பகுதியை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பினாலாகும். தாமதத்திற்கான காரணங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றங்களை அடையாமையால் 2024 யூலை 13 இற்கு மேலும் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்ட நிர்வாகச் செலவினம் மற்றும் வேறு செலவினங்கள் அதிகரிப்பதுடன் கைதவிர்க்கப்படாத மீதிகளிற்காக அதிகமான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருக்கும். மேலும், நீண்ட கால குறைந்த கிரய உருவாக்கல் திட்டத்தின் நோக்கு அமைய முடியாதிருக்கும். | நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உண்மையான பூர்த்தியக்கல் திகதிக்கு பின்னால் கால நீடிப்பு வழங்கப்பட்டால் மேலதிக செலவினங்கள் ஏற்பட வேண்டியிருக்கும். |
| (எ) | செயற்திட்டத்தின் பகுதி 2 இன் லொட் B2 இன் அளவீட்டு பட்டியலின் பிரகாரம், 3 வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு ஐ.அ.டொலர் 158,065 ஒதுக்கப்பட்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட 3 வாகனங்களிற்குமான உள்ளபடியான மொத்த CIF ஐ.அ.டொலர் 58,446 ஆக இருந்த பொதிலும் ஒப்பந்தகாரருக்கு ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 158,065 செலுத்தப்பட்டது. மேலும், ரூபா 12.4 மில்லியன் தொகையான மொத்த இறக்குமதி வரி ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டத்திற்கான வாகனங்கள் கொள்வனவு செய்யும் போது செயற்திட்டமானது சிக்கனமற்ற செலவினம் ஏற்பட்டிருந்தது. | தேவையற்ற செலவுகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப விலைமனுவானது SCAPC இன் ஒப்புதலுடன் ஏல நேரத்தில் முடிவு செய்யப்பட்டதுடன் 2016 ல் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை விலையை இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டியதோடு 2017 ல் வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. |

## 4.2 பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (திட்டம் 02)

(i) பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (திட்டம் 02) ஆனது நிலையான முறைமை செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அதிகரித்த மின்வலு தேவையை உள்வாங்குதல் மற்றும் மின்வலு முகாமைத்துவத்தை மீளசெயற்படுத்துல் என்பவற்றிற்கு மின்விநியோக உப நிலையங்கள் மற்றும் அதனுடன் இணைந்த வரிசைகளின் நிர்மாணத்துடன் நாட்டில் பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,453 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 264.7 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,793 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 184.7 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அிவிருத்தி முகவரினால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 ஜுலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2018,2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டப் பணிகள் பட்டியலிடப்பட்ட திகதியான 2016 யூலை 31 தொடக்கம் 2 ஆண்டுகளுக்கும் மேலான தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தாமதத்தினை ஈடு செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் செயற்பாடுகளை தொடர்ந்திருந்தது. ஆகையால் விலை மாற்றங்கள், கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டக் காலத்தை நீடித்தல் போன்ற | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து திட்டங்களினதும் மீளப் பெறல் திட்டங்கள் மாற்றப்பட்டது. பயன்படுத்தபட்ட நிதிகளுக்கு வட்டி கட்டணங்கள் செலுத்தப்படுகின்றதுடன் பயன்படுத்தபடாத நிதிகளுக்கு ஒப்படைப்பு கட்டணங்கள் செலுத்தப்படுகின்றன. | கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு நீண்ட காலத்திற்குள் முடிவடையும் என்று நம்புகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்தங்களில் மேலதிக கிரயங்கள் ஏற்படும் அபாயத்தினை கணக்காய்வினால் நிராகரிக்க முடியாமல் போக கூடும். காணப்பட்டது. | | | |
| (ஆ) | ரூபா 37.89 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 13.38 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92 மில்லியன் தொகை மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>மேலும், நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 259.9 மில்லியன் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.<br>எனினும், அத் திகதியில் உள்ளவாறு உரிய இலக்குகளில் 35 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டிருந்தது.<br>ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மெதுவாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, ரூபா 79.45 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் வழங்கும் முகவர் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து திட்டங்களினதும் மீளப் பெறல் திட்டங்கள் மாற்றப்பட்டது. பயன்படுத்தபட்ட நிதிகளுக்கு வட்டி கட்டணங்கள் செலுத்தப்படுகின்றதுடன் பயன்படுத்தபடாத நிதிகளுக்கு ஒப்படைப்பு கட்டணங்கள் செலுத்தப்படுகின்றன. | கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு நீண்ட காலத்திற்குள் முடிவடையும் என்று நம்புகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் பல்வேறு காரணங்களால், பெலிகஹ மற்றும் எதுல்கோட்டை ஆரம்ப உப மின் நிலையத்தைப் விரிவுபடுத்துதல் மற்றும் இரத்தினபிட்டியவில் ஆரம்ப உப மின்நிலையத்தை நிர்மாணித்தல் என்பவற்றிற்கான பெறுகை செயன்முறை, பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்வதற்கு 3½ ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2020 யூலை 8 இல் ஐ.அ.டொலர் 7.973 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2020 செப்தெம்பர் 21 இல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இரத்தினபிட்டியவில் இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட காணி 2021 யூலை 26 வரை உரிய நோக்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகமைத்துவத்தின் பதிலின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடன் 06 மாதங்கள் தாமதமானது. | கட்டுமானப் பணிகளானது துரிதப் படுத்தப்பட்டு நீடிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவடையும் என நம்புகிறேன். இரத்தினபிட்டிய காணி 2020 ஒகஸ்ட் 02 இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| (ஈ) | நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் சிமார்ட் வலையமைப்புக்கள் மற்றும் அளவீடு மற்றும் ஆலோசனை சேவைகளுக்கான ஒப்பந்தம் ரூபா 1,617.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.1 மில்லியன் கிரயத்தில் வழு சக்கிக்கான கேள்வி சார்ந்த முகாமைத்துவத்தின் கீழ் | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட்டு இனங்காணப்பட வேண்டும். | பகுதி 2 ல் திட்டமிடப்பட்ட வேலையின் நோக்கம் முழு கட்டுநாயக்க CSC யினதும் smart அளவீடாகும். மதிப்பிடப்பட்ட செலவு ஐ.அ.டொலர் 8.85 மில்லியன் (பொருட்கள் மற்றும் சேவைக்கு | ஒரே அளவிலான பணியானது ஒரு ஆலோசகரின் ஆலோசனையை பயன்படுத்தாமல் வெவ்வேறு திட்டங்களில் காணப்படும் உத்திகளையும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமுல்ப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் இது 2021 யூலை 26 வரையான கணக்காய்வு திகதி வரை கூட தொடங்கப்பட்டிருக்கவில்லை. | | ஐ.அ.டொலர் 8.85 மில்லியனும் ஆலோசனை சேவைகளுக்கு 0.75) 1ம் கட்ட திட்டமிடலில் நிலவிய நிபந்தனைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. | |
| (உ) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மோட்டார் வாகனங்கள் நேரடியாக இறக்குமதி செய்யப்படாது ஒப்பந்தக்காரர்களினூடாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒப்பந்தக்காரர்களின் இலாப எல்லை மற்றும் மேந்தலைகள் உள்ளடங்கலாக மோட்டார் வாகனப் பட்டியல் பெறுமதியைப் பார்க்கிலும் கூடியளவு தொகையை செலுத்த வேண்டியிருந்தது. 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 28 மோட்டார் வாகனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 165.707 மில்லியன் தொகை மீளளிக்கப்பட்டிருந்த போதிலும் வாகனங்களின் உரித்து ஒப்பந்தக்காரரிடமே காணப்பட்டது. இதன் விளைவாக ஒப்பந்தக்காரர் ஒப்பந்த வேலைகளைக் கைவிடுவாராயின் அல்லது | ஒப்பந்த ஆவணங்களின் உபபிரிவுகள் இலங்கை மினசாரசபையினால் ஏற்படுத்தக்கூடிய இடர்களை குறைப்பதற்காக செய்யப்படல் வேண்டும். | 35 மோட்டார் வாகனங்கள் ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தத்தின்படி அந்த வாகனங்களுக்கான பணம் செலுத்தப்பட்டது. | திட்டம் முடிந்ததும் சொத்துகள், வாகனங்கள் மற்றும் பிற உபகரணங்கள் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டு அன் நேரமே சொத்துக்கள் வெளிப்படுத்தப்படும். |

விபத்துக்குட்பட்டு வாகனம் கைவிடப்பட வேண்டி ஏற்படின் நிகழ்ச்சித்திட்டத்தினாலேயே இழப்புகள் எதிர்நோக்கப்பட வேண்டிவரும்.

## 4.3 மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம்

### 4.3.1 இலங்கை மின்சார சபையினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

(i) மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டமானது மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,069 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160 மில்லியனானதுடன் அதில் ரூபா 16,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஜுன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்ததாரர்களிற்கு கையளிப்பதில் தாமதம் காரனமாக 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் வட மாகாணத்தில் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களில் கலப்பின புதுப்பிக்கத்தக்க | மேலதிக தாமதமின்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | TEC அறிக்கை SCAP க்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் குழுவின் முடிவு நிலுவையில் உள்ளது. | ஒப்பந்தங்கள் இன்னும் கையளிக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எரிசக்தி முறைமைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2017 இன் 4 ஆம் காலாண்டில் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. இருப்பினும் இப்பொதிக்கான வரைபு ஏல ஆவணங்கள் 2017 ஜூலை 4 இல் ADB இனால் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை | | இதனால், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| (ஆ) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் ஐ.அ.டொலர் 34.99 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 33 கிமீ நீளமுள்ள 270 kv கோபுர கம்பிகள் மற்றும் 13 எண்ணிக்கையான 33 kv - gantries ஐ நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2016 இன் 3 ஆம் காலாண்டில் வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2017 இன் 4 ஆம் காலாண்டில் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. இருப்பினும் பெறுகை செயன்முறை இவ் ஒப்பந்தத்தினை கையளிப்பதற்கு 2 வருடங்களிற்கு மேல் எடுத்திருந்ததுடன் இறுதியாக ஒப்பந்தமானது ஐ.அ.டொலர் 40.48 மில்லியன் கிரயத்தில் 2019 மே 30 இல் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் 10 காணித்துண்டுகள் இக்கூறின் | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டத்திற்கான கால நீடிப்பு ஒப்பந்தக்காரர்களால் கோரப்பட்டதுடன் தற்போது அது பரிசீலனையில் உள்ளது. கடன் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கான அனுமதியை நிர்வாகம் வழங்கியதுடன் அது அமைச்சின் அதிகாரத்தின் ஊடாக ERD க்கு அனுப்பப்பட்டது. | கட்டுமானப் பணிகளானது நீடிக்கப்பட்ட காலத்திற்குள் விரைவாக முடிவடையும் என நம்புகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கீழான ganegries இன் நிர்மானத்திற்காக கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. 4 வருடங்கள் கடந்ததன் பின்னரும் எவ்விதகாணிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | சேயற்திட்டத்தின் சேமிப்பை பயன்படுத்தி கொழும்பு மின்விநியோக உப மின்நிலையத்தில் 124 MVAr Breaker Switched Capacitor ஐ நிறுவுதல் மற்றும் துல்கிரிய மின்விநியோக உப மின்நிலையத்தில் Capacitor ஐ மாற்றுதல் என்பவற்றிற்கான செயற்திட்டம் 2021 திசெம்பர் 31 இல் எள்ளவாறு பூச்சிய செயலாற்றலை காட்டியது. | மேலதிக தாமதமின்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏலம் திறக்கப்பட்டு மதிப்பீடு இடம்பெறுகின்றது. அதிக ஏல விலை காரணமாக, குறை மதிப்பீடு செய்யப்பட்ட ஏலதாரருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. | கட்டுமானப் பணிகளானது நீடிக்கப்பட்ட காலத்திற்குள் விரைவாக முடிவடையும் என நம்புகிறேன். |
| (ஈ) | மொத்த ஒதுக்கீடு ரூபா 16,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியனில் 2020 திசெம்பரில் உள்ளவாறு ரூபா 5078.084 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்ட நிர்வாக கையேட்டில் குறிப்பிடப்பட் நிதி இலக்குகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2592 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியனை பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும்இ உரிய | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகள் பின்பற்றப்பட வேண்டும். | எதிர்பார்த்த திட்ட இலக்கை அடைய முடியவில்லை இதற்கான காரணமானது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நோய் மற்றும் மோசமான காலநிலை. இதனால் ஒப்பந்தகாரரின் செயல்திறனும் கனிசமாக குறைவடைந்துள்ளது. | தாமத வேலைகளை சீர்செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இலக்குகளில் 42.56 சதவீதத்தனை பிரதிநிதித்தவப்படுத்தும் ரூபா 1103.17 மில்லியன் மாத்திமே அத்திகதியில் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது.

### 4.3.2 வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார கம்பனி (தனியார்) இனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை

(i) மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டமானது மேல் மாகாணத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையொன்றை நிர்மாணிப்பதனூடாக கலப்பின புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமைகளை ஸ்தாபிப்பதற்கு உதவியளிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் அது ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஜுன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**(iv)** கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

### 4.3.3 தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

(i) நம்பகமான மின்சார வழங்கல் முன்னேற்ற ஆதாரவுச் செயற்திட்டமானது வட மாகாணம் யாழ்ப்பாணம் பகுதியில் 3 தீவுகளில் (நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு) சிறிய தனித் தீவு மற்றும் கிராமிய சமூகங்களின் மின்சார பயன்பாட்டிற்கான மின்சக்தி உற்பத்திக்கு ஆதரவளிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 288 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்படுகின்ற வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 180.72 மில்லியனிற்கு

சமமான ஐ.அ.டொலர் 1.25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட அதேநேரம், இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ரூபா 106.56 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.75 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது கடல்நீர் சுத்திகரிப்பு பொறி (SWRO) மற்றும் 0.5 தொன் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் குளிரூட்டல் முறைமை வழங்கி பொருத்துதல் என்ற பெயருடைய இரண்டு செயற்திட்ட கூறுகளைக் கொண்டுள்ளது. அதில், சிவில் வேலைகள் தொடர்புபட்ட இரண்டு நாளொன்றிற்கு 75 $m^3$/day கடல் நீர் சுத்திகரிப்பு பொறி வழங்கல் மற்றும் பொருத்தல் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மற்றும் குளிரூட்டல் முறைமை வழங்கி பொருத்துதல் என்ற பெயருடைய இன்னொரு கூறு குறிப்பிடத்தக்களவு செயலாற்றலைக் காட்டியிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் தயாரித்தல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாட்டில் உள்ளது. எனவே, செயற்திட்ட முன்னேற்ற | இலங்கை மின்சார சபையினுடைய உயர் மின்சக்தி முறைமையின் அமுலாக்கல் வரை குறைந்த விலையில் மின்சாரம் வழங்குதல் தற்காலிக தீர்வாக உள்ளதா என இந்த விடயம் தொடர்பில் இலங்கை மின்சார சபையுடன் கலந்துரையாட வேண்டும். | ஐஸ் க்யூப்(cube) தயாரிப்பிற்கான ஏல விற்பனை அழைப்பானது இலங்கை மின்சார சபையின் அதிசக்தி(Hubrid system) வாய்ந்த திட்டம் முடிவடையும் போது அது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருக்கும். ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 2022 பெப்ரவரி 21 - 2022 பெப்ரவரி 24 ற்கு இடையில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளும் தூதுக்குழு விஜயத்தின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொண்ட பற்றி கலந்தாலோசிக்கப்படும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புபட்ட சிவில் வேலைகள் உள்ளடங்கலான கடல் நீர் சுத்திகரிப்பு பொறியின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 99 மற்றும் 75 சதவீதமாக இருந்தது. | | | |
| (ஆ) | சமுதாயத்தின் பாதுகாப்பான குடி தண்ணீரிற்காக நயினாதீவு குடாவில் நாளொன்றிற்கு 150 கனமீற்றர் இயலளவு சுழு பொறி பொருத்துதல் மற்றும் முறையான தண்ணீர் விநியோகம் என்பன செயறற்திட்டத்தின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டமானது ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படகின்ற இன்னொரு யர்ப்பாணம் கிளிநொச்சி செயற்திட்டம் ஊடாக விநியோக முறைமையை பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் கீழ் உயர்த்தப்பட்ட கோபுரங்களின் நிர்மாணம் 2020 திசெம்பர் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஒட்டு மொத்த பௌதீக முன்னெற்றம் 44 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின் நீர் வழங்கல் செயற்திட்ட பிரிவு என்பவற்றால் வரையறுத்த பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தத்தின் முன்னேற்றத்தை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். | PMCIU அறிவுறுத்தியதாவது நீடிக்கப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்தத்தை முடிக்குமாறும் ஒப்பந்தக்காரர்கள் அவர்களது பணியாளர்களை அதிகரிக்குமாறும் கூறியது. துரதிஷ்டவசமாக வேலைகள் தாமதமடைவதற்கான காரணமாவது அதிகளவான வேலையாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டதோடு தள ஊழியர்கள் (site workers) தனிமைப்படுத்தப்பட்டமை, கட்டுமானப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தாமதம் அதாவது சீமெந்து, இரும்புப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் மற்றும் இன்னும் பல ஆகும். | நயினாதீவில் உயர்மட்ட நீர் கோபுரத்தின் நிர்மானப் பணிகள் நீர் இறுக்கப் பரிசோதனை,சுத்தப்படுத்துதல் மற்றும் தொற்று நீக்கம் போன்றவை உள்ளடக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |

## 4.4 மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம்

(i) மன்னார் காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டமானது காற்றலை மின்வலு உருவாக்கல் அதிகரிபத்தல், மீள்சுழற்சி மின்வலு முகாமைத்துவ முறைமை முன்னேற்றம், செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வையில் கடன் பெறுபவரின் இயலளவை வலுப்படுத்தல் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,923 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 257 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,105 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 மார்ச் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகத்தில் செயற்திட்டத்தால் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4 மில்லியன் ஆன வைப்புக்கள் மீதி தீர்ப்பனவு செய்யப்படாமல் நான்னு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. | காணிச் சுவீகரிப்பு செயற்பாடுகள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதியானது ஏனைய வைப்புக்களின் கீழ் இன்னும் நினைவுபடுத்துவதுடன் நில உரிமையாளர்களின் தீர்ப்பனவு விவரங்கள் இல்லாமல் அகற்றவோ அல்லது மூலதனமாக்கவோ முடியாது. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க மற்றும் 02/2016 ஆம் இலக்க | செயற்திட்ட நடவடிக்கைகளின் உள்ளக கயக்காய்வு ஒழுங்காக மேற்கொள்ளப்பட வேண்டும். | திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்கான விரிவான உள்ளக கணக்காய்வு 2017 ல் இலங்கை மின்சார சபையின் கணக்காய்வு பிரிவினரால் | |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரை சேர்க்கப்பட்டோ அல்லது மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டது. |
| (இ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED/03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந் திகதிய SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை உன்பன வற்றிற்கு முரணாக செயற்திட்டமானது உரிய ஊழிர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை ரூபா 15.76 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)/ முற்பணமளிக்கப்பட்ட வருமான வரி (APIT) என்பவற்றினை செலுத்தியிருந்தது. | ஊழியர்களின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டும். | CEB ஆனது ஊழியர்களுக்கு ஒக்டோபர் 2020 வரை உயர் தனிநபர் வருமானவரி (APIT) யை செலுத்தியதுடன் நிர்வாக தீர்மானத்தின் படி ஊழியர்கள் நவம்பர் 2020 முதல் மேம்பட்ட தனிநபர் வருமானவரியை (APIT) செலுத்துகின்றனர். |
| (ஈ) | இயலளவு அதிகரிக்கப்பட்ட காற்றலை மின்வலு உருவாக்கலின் | தேவையற்ற கிரயத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை | ஆரம்ப நேர அட்டவணையின் படி, திட்ட நிறைவு திகதியானது 2020 ஒக்டோபர் 25 ஆகும். இது |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் 100 சதவீதம். இருப்பினும் அடையப்பட்ட செயலாற்றல் 87.60 சதவீதமாகவிருந்தது. ஆரம்ப பட்டில் இழப்பீட்டு திகதி 2020 திசெம்பராக இருந்த போதிலும், 2021 மார்ச் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நீண்ட கால குறைந்த கிரய மின்சாரம் உருவாக்கல் திட்டம் முறைப்படியாக அடையப்பட்டிருக்கவில்லை | திட்டமிடப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களால் தாமதமடைவதால் 2021 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டது. |
| (உ) | முன்னேற்றப்பட்ட மின்சார முகாமைத்துவ முறைமை மீள்செயற்படுத்தலின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் 87 சதவீதம். இருப்பினும் அடையப்பட்ட செயலாற்றல் 82 சதவீதமாகவிருந்தது. ஆரம்ப பட்டியல் பூர்த்தியாக்கல் திகதி 2021 சனவரியாக இருந்த போதிலும் 2021 ஏப்ரல் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | தேவையற்ற கிரயத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை திட்டமிடப்பட வேண்டும். | சர்வதேச பயணங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதனாலே மேற்பார்வையாளரின் வருகை தாமதமடைந்தது. |

## 4.5 கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்தி வரிசை கடன் செயற்திட்டம்

(i) கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்தி வரிசை கடன் செயற்திட்டமானது நிதி நிறுவனங்களின் பங்களிப்பினூடாக இலங்கையில் தகுதியான கூரை மீதான சூரிய மின்வலு முறைமையிற்கு நிதியளிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,550 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 50 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஏடிபீ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 ஏப்ரல் 17 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 2,390 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீட்டில் 12.7 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் அதிகபட்சமாக பயன்படுத்தப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். கொவிட் 19 தொற்று நோய் மிக மோசமாக இத்திட்டத்திற்கான கடன் தேவையை பாதித்தது. | திட்டத்திற்காக வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை 2021.12.31 முடிவடைந்தது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,315.71 மில்லியன் தொகை ADB ஆல் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,835.29 மில்லியன் தொகை | பெறப்பட்ட நிதிகள் தாமதமின்றி பயன்படுத்தப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். மேலும் மத்திய வங்கியின் திறைசேரியில் இருந்து பெறப்பட்ட நிதிக்கு வட்டி | திட்டத்திற்காக வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை 2021.12.31 முடிவடைந்தது. |

| | |
|---|---|
| மாத்திரமே பயன்படுத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாததாக மத்திய வங்கிக் கணக்கில் ரூபா 1,480.41 மில்லியன் தொகை காணப்பட்டது. | செலுத்துவதற்கு தனியார் முயற்சியாளர்கள் (PFI) பொறுப்பாவார்கள். |

## *5. கல்வி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி துறை*

### 5.1 திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

(i) திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான திறன்கள் கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, நுழைவு, இனங்காணல் என்பவற்றை மேம்படுத்துதல் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் பெறுபேறுகள் அடிப்படையிலான கடனளிப்பு முறை மூலக்கூறின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(ii) நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 141,524 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 13,100 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 செப்தெம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் கோவிட் - 19 தாக்கம் காரனமாக 2022 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இலங்கை ஓசன் பல்கலைக்கழகத்தினால் 07 டிப்ளோமா கற்கை நெறிகள் நடாத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் 232 மாணவர்களினை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டது. இருப்பினும், ரூபா 1.4 மில்லியன் கிரயத்தில் பல்கலைக்கழகத்தினால் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரம் பிழையான தகவலினைக் கொண்டிருந்தமை காரணமாக தொடர்புடைய கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | தொடர்புடைய தரப்பினர்களிடம் புலனாய்வுகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை | |
| (ஆ) | தம்புள்ள மற்றும் இரத்மலானை தொழில்நுட்ப கல்லூரிகளினால் நடாத்தப்படுகின்ற மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்களின் திருத்துகை டிப்ளோமா பாடநெறிக்காக ரூபா 2.5 மில்லியன் கிரயத்தில் பயிற்சி உபகரணங்களினை கொள்வதற்கு செய்வதற்கு 2017 இல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பயிற்சியின் எதிர்பார்க்கப்பட்ட தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு உபகரணங்களினைக் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | உத்தரவு செயலாற்றல் பத்திரத்தினை சமர்ப்பிக்காததன் காரணமாக 2017 ஜூலை 09 இல் ரத்துசெய்யப்பட்டிருந்தது. | பயிற்சியளிப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | பெறுகை வழிகாட்டல் - 2006 இன் 4.4.2 ஆம் பெறுகை வழிகாட்டல் மற்றும் 2.14.1 ஆம் பெறுகை வழிகாட்டல்களுக்கான 2017 மார்ச் 15 ஆந் திகதிய 33 ஆம் இலக்க குறைநிரப்பிக்கு முரணாக, திணைக்கள பெறுகை குழுவினால் | கேள்விமனு செயன்முறையின் போட்டித் தன்மையை உறுதிப்படுத்த கூடியவாறு அரச பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். | பதிலளிக்கவில்லை. | இவ்விடயத்தினை சரிசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேசிய போட்டி விலைமனு முறைமையினைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பிராந்திய பெறுகைக் குழுவால் உடன்கொள்வனவு பெறுகை முறைமையைப் பயன்படுத்தி கட்டுநாயக்கவிலுள்ள பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்காக ரூபா 46.6 மில்லியன் பெறுமதியுடைய பயிற்சி உபகரணங்களினை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை கொள்வனவு செய்திருந்தது. | | | |
| (ஈ) | இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியில் உணவு தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2015 இல் ரூபா 7 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூட கட்டிடத்தில் காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் விளைவொன்றாகக் காணப்படுகின்றது. | அவ்வாறான உபகரணங்களினைப் மாணவர்கள் பயன்படுத்தக்கூடியவாறு ஆய்வு கூடத்தின் நிர்மாண வேலைகளினை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்நிலமை ஆய்வுகூட நிர்மான நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக பிரதானமாக ஏற்பட்டிருந்தது. | மாணவர்கள் அந்த துறையில் அறிவைப் பெறாமல் பயிற்சி நெறியைப் பின்பற்றுகிறார்கள். |
| (உ) | செயற்திட்ட நிதிகளில் பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரியால் மீளாய்வாண்டின் போது ரூபா 886,801 தொகையான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகளுக்கான மிகைக்கட்டண செலுத்துகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செயற்திட்டத்தின் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். | ஏற்றுக்கொண்டனர். | இன்னும் சரிசெய்யப்படவில்லை. |
| (ஊ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் விரிவான செயற்பாட்டு திட்டத்தின் பிரகாரம் வருடாந்தம் 4.8 மில்லியனை ஏற்படுத்துவதன் | இந்த செயற்பாடானது நிகழ்ச்சித்திட்ட நிதியிடலை பயன்படுத்தி அமுல்படுத்தப்பட | இருந்த போதிலும் தொழில் நுட்ப தொழிற்கல்வி பயிற்சி 2014-2020 காலப் | இந்நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூலம் தேவையான பயற்சியாளர்களுக்கு 100 உதவித் தொகை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2014 தொடக்கம் 2020 காலப்பகுதிக்காக அதற்காக ரூபா 33.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 வரையிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | வேண்டியிருக்கும். | பகுதிக்குள் பிரதிபலிப்பதானது துறைசார் பயிற்சியாளர்களுக்கான உதவித்தொகையை வழங்குவதாகும். திறன்துறை மேம்பாட்டு திட்டமானது 2014-2020 காலத்திட்டத்திற்கான SSDP ன் விரிவான செயல்திட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில்(NYSC) பயிற்சியாளர்களுக்கு தேவைப்படும் உதவித்தொகைக்கு நிதியளிக்கவில்லை. | |
| (எ) | தேசிய இளைஞர் சேவைகள் சபையின் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், பாடநெறி கட்டணங்களை அறவிடுவதற்காக கொள்கையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சபை சபையினால் கொள்கையொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்ட நிலையங்களில் ஒரேமாதிரியான பயிற்சி பாடநெறிகளிற்காக வேறுபட்ட கட்டணங்களை அறவிடுவதற்கும் இயலாதிருந்தது. | முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் (NYSC) ல் இடம்பெறும் முழுநேர,பகுதி நேர மற்றும் குறுகிய கால பயிற்சி நெறிக்கான கட்டணத்தை 2020 ம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு (semester) முதல் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | கொள்கை படிப்பு கட்டணங்களின் மாற்றம் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையானது 2016 திசெம்பர் இல் நிகழ்ச்சித்திட்ட நிதியங்களால் ரூபா 9.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கவுலொக் ரவுன் சிற்றி | நிர்மாண வேலைகளிலுள்ள காலதாமதாமதத்திற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை | நிர்மானங்களிலுள்ள தாமதத்திற்கான பல்வேறு காரணங்கள் அமுல்படுத்தல் முகவரினால் பராமரிக்கப்பட்டிருந்தது. | நிர்மானமானது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு இணங்கியிருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட செயன்முறையை காட்டாமையால் நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் நிதியங்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்ட அலுவலகம் நிராகரித்ததுடன் தொடர்ச்சியான ஒப்பந்தக் காரரின் நிர்மாண வேலைகள் 2018 செப்தெம்பர் 26 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவால், தேசிய பயிலுனர் மற்றும் தொழில்சார் பயிற்சி அதிகாரசபை உள்ளக நிதயத்தை பயன்படுத்தி வேறு ஒப்பந்தத்திற்கு வழங்கியிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஐ) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 3,495 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 20 பயிற்சி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 14 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்ட 6 பயிற்சி நிலையங்களில் 4 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் பௌதீக செயன்முறையின் 30 | நிர்மாணிப்பதற்கும் நவீன மயப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட பயிற்சி நிலையங்களின் சிவில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிர்வாகம் கணக்காய்வு பரிசோதனைக்கு உடன்படுகிறது. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் 20 புதிய பயிற்சி நிலையங்களை நிர்மானிக்க செயல்திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் தடை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதியினால் 07 நிலையங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதில் 07 நிலையங்களில் 04 நிலையங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன. | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சதவீதம் அடையப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, ரூபா 3,935 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 90 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 27 பயிற்சி நிலையங்களில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 31 சதவீதம் செயல் முன்னேற்றத்தை அடைவதன் மூலம் ரூபா 857 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி யாக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஒ) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2014 - 2020 ஆம் ஆண்டு விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 20 பயிற்சி நிலையங்களில் 15,000 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் முதல் காலப்பகுதியில் 586 பயற்சியாளர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தது. | பயிற்சிகள் இயலளவை முன்னேற்றுவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிரத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | பொது திறைசேரியில் இருந்து தடைசெய்யப்பட்ட நிதி வெளியீடுகள் காரணமாக புதிய பயிற்சி நிறுவனங்களின் கட்டுமானப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டதுடன் புனர்வாழ்வு மையங்களை மேம்படுத்துவதன் செயலாற்றல் தாமதமடைந்திருந்தது. | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பெறுகைகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 9 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழான 51 நடவடிக்கைகளில் 18 நடவடிக்கைகளின் இலக்குகள் மீளாய்வாண்டில் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏடிபீ கடன் உடன்படிக்கைகளின் கீழான DLIs இன் மிகுதி செயற்பாடுகள் தொடர்பாக இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | ஆசிய அபிவிருத்தி வங்கி(ADB) யின் கடன் உடன்படிக்கையின் படி,அனைத்து வழங்கல் இணைப்பு குறிகாட்டிகளின் இலக்கை அடைவது 30 ஜுன் 2021 ஆகும். கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்துறையின் மூடல் பகுதியளவான செயற்பாடுகள் என்பன | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தாமதங்களுக்கான முக்கிய காரணங்களாகும். | |
| (ஔ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3650 மற்றும் 3651 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஐ.அ.டொலர் 100 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியளவில் பணவளிப்பு செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும் ஐ.அ.டொலர் 36 மில்லியன் கூட்டுமொத்தம் பணவளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிகளை பயன்படுத்துவதில் வினைத்திறனின்மையை இது காட்டுவதால் செயற்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | குறிப்பிடப்பட்ட ADB கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஐ.அ.டொலர் 100 மில்லியன் மொத்த மீளப்பெறல்கள் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |
| (க) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் திறன்கள் துறை அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 84 மில்லியன் கிரயத்தை கொண்டிருந்த இரண்டு செயற்திட்டங்கள் ஒப்பந்ததாரரால் பூர்த்தி செய்வதிலுள்ள தாமதம் காரணமாக 2018 ஆகஸ்ட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தன. | நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | தம்புள்ளை பயிற்சி நிலையம் மற்றும் திருகோணமலை மேம்படுத்தல் என்பனவற்றின் சீரமைப்பு வேலைகளின் ஒப்பந்தத்தினை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தற்போது இந்த இரண்டு ஒப்பந்தங்களும் நிர்மானத்திற்காக வேறொரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாமலும் கட்டுமாணப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்களை கறுப்புப் பட்டியலிடவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்ல. |
| (ங) | செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 4 பயிற்சி நிலையங்களின் மேம்படுத்தல் வேலை 2019 நவம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் மேம்படுத்தல் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணித்து நவீனமயப்படுத்துவதற்கு இனங்காணப்படுகின்ற பயிற்சி நிலையங்களின் சிவில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரைக்கவில்லை | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவானது தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ச) | இரத்மலானையிலுள்ள புதிய கட்டிடத்தின் நிர்மாணங்களிற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2014 ஆகஸ்ட் 5 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தாமதமான காலப்பகுதி 5 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்ததுடன் நிர்மாணக் கிரயம் ரூபா 200 மில்லியன் தொகையாக காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தி செய்வதற்காக பட்டியலிடப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதம் மாத்திரமேயாகும். | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். | இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ரத்மலானை கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் உயிர் குமிழி (bio bubble) கருத்திட்டத்தின் கீழ் மெதுவாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது, ஆனால் இவ்வேலை நோக்கத்தில் பௌதீக முன்னேற்றமானது 95% ஆகும். மீதமுள்ள பணிகள் 21 ஒக்டோபர் முடிக்கப்படும். | நிர்மானமானது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஞ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தொழில்சார் விசேட திறன்கள் மற்றும் தொழில்துறை தேவைப்பாடுகளை தேடும் மாணவர்களிற்காக பல நுழைவு மற்றும் வெளியேற்றத்தை செயற்படுத்த நெகிழ்வான விநியோகத்தை ஊக்குவிப்பதற்கு ரூபா 1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | பயிற்சி நிலையங்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு கற்கைநெறிகள் தொடங்க அறிவுறுத்தப்பட்ட போதிலும் நடைமுறையில் உள்ள கொவிட் 19 தொற்று நோய் காரணமாக மாணவர்கள் பங்கேற்காததால் பயிற்சித் திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ட) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் | உரிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு உடனடி | மொனராகலை, ஹொரவாப்பதன, ஒருபந்திவெவ மற்றும் | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள நான்கு பயிற்சி நிலையங்களில் ஐந்து பயிற்சி கற்கைநெறிகளிற்காக மேலதிக பௌதீக வளங்கள் மற்றும் குழுக்களை இனங்காண்பதற்கு ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பௌதீக வளங்கள் மற்றும் குழுக்கள் இனங்காணப்பட முடியாதிருந்தன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. | உலப்பன காரணமாக உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியவில்லை. | அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ண) | ரூபா 757 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் திறன்கள் துறை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாடுகளின் கீழ் சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தால் நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதி 2020 ஒக்தோபர் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 65 சதவீதமாக காணப்பட்டது. | ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்ட வேலையின் தொடர்ச்சியான மேற்பார்வை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | முாணவர் வீடுதி கட்டிடம் பைஓ பப்ல் (bio-bubble) கோட்பாட்டின் கீழ் நடைமுறையிலுள்ளதுடன் பௌதீக செயலாற்றல் தற்போது 70%. | நிர்மானமானது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (த) | தர முகாமைத்துவ முறைமையை மேலும் மேம்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் தர மேம்பாட்டு முறைமைகள் (கியூஐஎஸ்) அறிமுகப்படுத்தப்பட்டது. சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மீளாய்வாண்டின் இறுதி வரை முறைமைகளை நிறுவி தர உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். | பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக உள்ளக முழுநேர மாணவர்களுக்கு பயிற்சி வழங்குனர்கள் பயிற்சியை வழங்குகின்றனர் தர மேம்பாட்டு முறை என்பது ஒரு நீண்டகால கருத்தாகும் இது படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ந) | மீளாய்வாண்டின் போது ஊழியர் இணைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக (ஈஎல்ரீபி) ரூபா 69.43 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்காக பயிற்சி உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இலக்கிடப்பட்டவாறு 2000 மேலதிக பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். | 2020 வருட ஆரம்பத்திற்குள் 2000 ஒப்பந்தங்கள் வழங்க திட்டமிட்டபட்டதும் கொள்முதல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தால் நாடு 3 மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டது. | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ப) | தொழில்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பதவியணியினரின் திறன்களை மேம்படுத்தி சான்றளிக்கப்பட்டவர்களின் திறன் இடைவெளியை குறைக்கும் நோக்கத்துடன் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,889 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 0.0195 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் தொழில்துறையில் திறன்களை தரமுயர்த்தும் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஆகக்குறைந்தது 2000 மேலதிக பணியாளர்கள் பங்குபற்றும் இலக்கையும் அடைந்துகொள்ள தவறியிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. | இலக்குகள் பின்னால் இருப்பதற்கான பிரதான காரணம் தொழிற்துறையிலுள்ள எதிரான விளைவுகள் மற்றும் கோவிட் 19 பரவல் காலத்தினால்ஆன பயிற்சி வழங்குனர்களின் (பொது மற்றும் தனியார் ) மூடல் என்பனவாக இருந்தது. | செயற்திட்டத்ததின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்க வில்லை. |

## 5.2 இலங்கையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமானது தனியார் துறையில் பெண்களின் புதுமையான அனுகுமுறைகள் மற்றும் பெண்களின் அதிகாரமளித்தல்.

(i) இலங்கையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமானது தனியார் துறையில் பெண்களின் புதுமையான அனுகுமுறைகள் மற்றும் பெண்களின் அதிகாரமளித்தல் ஆனது TVET ஊடாக பெண்ஊழியப்படையின் பங்களிப்பு மற்றும் பெண்கள் பொருளாதார வேலைவாய்ப்பு என்பவற்றை அததிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 534 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 03 மில்லியனானதுடன் அது ஓர் மானியகாக வறுமை குறைப்பிற்கான ஜப்பானிய நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஒகஸ்ட் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், கோவிட் 19 பாதிப்பு காரணமாக 2022 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சி நிரலின் விரிவான செயற்திட்டத்திற்கு இணங்க, இதில் இருந்து எதிர்பார்க்கப்படுவது 04 வெளியீடுகளின் கீழ் 19 செயன்முறையை மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் அமெரிக்க டொலர் 462,060 மதிப்பீட்டில் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டு இருந்த போதிலும் 07 செயற்பாடுகள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டு இதற்காக வருட இறுதியில் | செயற்திட்டத்தின் காலம் அரைவாசியால் முடிவடைந்ததால் எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை அமுல்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்ட காலத்தை முடிப்பதற்கு முன் அமைச்சானது செயற்திட்டத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக ஆரம்பிக்கும். | செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் 31,823 செலவு செய்யப்பட்டது. | | | |
| (ஆ) | இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் இலங்கை மூன்றாம் நிலை தொழிற்கல்வி பயிற்சி துறையில் பெண்களை மேம்படுத்த இருந்த போதிலும் இதற்காக 84 பயிற்சி நிலையங்களில் 226 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் இதில் 6524 பயிற்சியாளர்கள் பங்கேற்றதுடன் இத்திட்டத்தை அடைவதற்கான நோக்கம் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த பயிற்சி திட்டத்தில் 1543 பெண்கள் மட்டுமே பங்கேற்றனர் இது மொத்த பங்காளர்களில் 24% ஆகும். மேலும் நடத்தப்பட்ட 226 நிகழ்ச்சி களில் அவதானிக்கப்பட்டது யாதெனில் 110 பயிற்சி நிகழ்ச்சிகளானது எந்தவொரு பெண்ணிணதும் பங்கேற்பு இல்லாமல் நடத்தப்பட்டது. | நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு பிரிவானது நெருங்கிய கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடைந்துகொள்ள ஆலோசகர்களுடன் வைத்திருத்தல் வேண்டும். | கவணத்தில்கொள் ளப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | ஆரம்பிக்கப்பட்ட திட்ட அறிக்கையின் திகதியானது 2019 ஏப்ரல் 09 ஆகும். இத்திட்ட நடவடிக்கைகள் பெயர்குறிப்பிடப்பட்ட 5 மாகாணங்களான மேற்கு,வடக்கு,வடமேற்கு, ஊவா மற்றும் சப்ரகமுவ போன்றவற்றில் செயற்படுத்த திட்டமிடப்பட்டது. இருப்பினும் வடமேற்கு மற்றும் வடமாகாணங்களில் மட்டுமே இப்பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. | முகாமைத்துவம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வறுமை பாக்கெட் அளவையானது 2020 ஜூன் தொடக்கம் ஜூலை வரையான காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் நடாத்தப்பட்டிருந்த து. | செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2018 தொடக்கம் 2020ம் ஆண்டுக்கான நிகழ்ச்சியின் விரிவான செயற்திட்டத்திற்கு | முகாமைத்துவம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை | நாட்டில் ஏற்பட்ட சில தவிர்க்க முடியாத | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இணங்க, 24 முக்கிய இலக்குப் பணிகளின் கீழ் 110 துணை இலக்குச் செயற்பாடுகளை அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டது. இருந்த போதிலும் இத்திட்டத்தினால் 17 முக்கிய இலக்குகளின் கீழ் செயற்பட்ட 48 துணை இலக்குகளால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை. | அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சூழ்நிலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலை பாதகமாக தாக்கியிருந்தது. | அடையப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் படி 23 கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளானது அமெரிக்க டொலர் 2,253,620 ஆவதுடன் இவ்வருட இறுதி மதிப்பாய்வின் கீழ் அமெரிக்க டொலர் 74,542 மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. | முகாமைத்துவம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நாட்டில் ஏற்பட்ட சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலை பாதகமாக தாக்கியிருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சர்வதேச திட்ட நிறுவனமானது (The institute of plan international) தொழிற்துறை திறன்கள் பிரிவில் மூலோபாய அபிவிருத்தியை எளிதாக்குவதற்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தொழிற்துறைகளை தேர்ந்தெடுத்ததுடன் இதற்காக ஏலத்தில் 04 வது இடத்தில் இருந்த ரூபா 3,079,125 தொழிற்துறை சேவைகள் பணியகத்தை தேர்ந்தெடுத்ததுடன் குறைந்த விலையில் ஏலம் எடுத்த நிறுவனத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கும் இடையே வித்தியாசம் ரூபா 967,125 ஆகும். தொழிற்துறை | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தொழிற்துறை சேவைகள் பணியகத்தின் (ISB) தெரிவு செய்யப்பட்ட ஏல கொள்முதல் செயன்முறையைத் தொடர்ந்து நேர்காணல் செயன்முறையானது தொழில்நுட்பக்குழு மதிப்பீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது தொடர்பான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களினை பின்பற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

சேவைகள் பணியகமானது முக்கியமாக தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப திறன், ஆலோசகர் சுயவிபரம் போன்றவை வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கூறப்பட்டாலும், குறிப்பு விதிமுறைகளின் படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்தின் ஆலோசகர்களால் நடத்தப்பட வேண்டிய முதுகலை மற்றும் பிற தகுதிகள் தொடர்பான பொருத்தமான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5.3 பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்

(i) பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டமானது பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 144.12 மில்லியன் தொகையான 19 பெறுகை நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் பொது கல்வி நவீனமயப்ப:த்தல் செயற்திட்டத்திற்காக திட்டடிடப்பட்டிருந்தும் 0.71 மில்லியன் பெறுமதியான 2 பெறுகைகள் மாத்திரமே ஆண்டின் இறுதியில் செய்யப்பட்டிருந்தது. | திட்டமிட்டபடி குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட வேலையை பூர்த்தி செய்யவும் விரும்பிய பௌதிக செயலாற்றல் மற்றும் விளைதிறனை அடையவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய உத்தியோகத்தர்கள் விழிப்புடன் இருக்கின்றனர். | மந்தகதியான பௌதீக செயலாற்றல் ஞாபகமூட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் சுயாதீன மதிப்பீட்டு அறிக்கை மதிப்பீட்டு ஆண்டிற்காக பெப்ருவரி 28 இற்கு முன்னர் உலக வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 யூலை 9 வரை மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் (validation) நிறுவனம் நியமனம் செய்யப்பட்டிருக்காததன் காரணமாக குறிகாட்டிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான சுயாதீன மதிப்பீட்டு அறிக்கை உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் நபர் சரிபார்த்தல் அறிக்கைகள் கோவிட் 19 இனால் பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் நபர் சரிபார்த்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்காக புதியகூறு I மற்றும் II இன் கீழ் கொவிட் 19 பரவுவதைத் தடுப்பதற்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு | அமைச்சின் வழிகாட்டியிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்வியின் அனைத்து மாகானதிணைக்களங்களும் அறிக்கைகளை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. | அவ்அறிக்கை கணக்காய்விற்கு இன்னும் சமர்ப்பிக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 617.36 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கல்வி அமைச்சின் 2020 மே 29 ஆம் திகதிய எச்டி/21/05/05-01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்ற அறிக்கைகள் அந்தந்த திணைக்களங்களால் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட நிதி தொடர்பாக கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | | துற்போதைய நிலைமை காரணமாக அவ் அறிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட படி இன்னும் கிடைக்கப்பெறவில்லை. | வில்லை. |
| (ஈ) | செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் 07 ஆம் பிரிவு, 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 ஆகியவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கல்வியமைச்சில் உள்ளக கணக்காய்வினை நடாத்துவதில் ஓர் தாமதம் இருந்தால் அது உரிய பிரிவுகளுடன் கலந்துரையாடுதன் மூலம் சரிசெய்ய முடியும் | உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சுகாதாரம் மற்றும் போசாக்குக் கிளை ரூபா 335 மில்லியன் நிதியேற்பாட்டில் நாடளாவிய ரீதியில் 10,175 பாடசாலைகளுக்கு முகக் கவசங்களை கொள்வனவு செய்து வழங்குவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் அந் நோக்கத்திற்காக ரூபா 71.2 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதன் நிதி செயன்முன்னேற்றம் 21 சதவீதமாக காணப்பட்ட போதிலும் பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கைகள் | நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாடசாலை அடிப்படையிலான மானியங்கள் கல்வி அமைச்சிற்காக கிடைக்கப்பெற்ற கட்டுநிதியின் பிரகாரம் அனைத்து பாடசாலைகளிற்கும் வழங்கப்பட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் கல்விஅமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து | பௌதீக செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரிவிற்கு ஓர் தடையில்லாத மானியமாக அனைத்து அரச பாடசாலைகளிற்குமாக மானியங்கள் வழங்கப்பட்டன. | |
| (ஊ) | தேசிய கல்வி நிறுவகத்திற்கு ரூபா 10 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதை சரிபார்ப்பதற்கான சான்றாதாரங்கள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்பட்ட நிதிகளின் சான்றாதாரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய கல்வியல் நிறுவனம் இவ் ரூபா 10 மில்லியனை பாடத்திட்ட அபிவிருத்தி பயன்படுத்தியிருந்தது என அறிவித்திருந்தது. | தற்போது வரை எவ்வித ஆதாரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5.4 உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் (நிகழ்ச்சித்திட்டக் கூறு)

(i) உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டமானது (நிகழ்ச்சித்திட்டக் கூறு) அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் என்பனவற்றிற்காக அமுல்ப்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| AHEAD செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு துனைஅணி (OMST) மற்றும் AHED செயற்பாடுகள் தொழிநுட்ப செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்று என்பனவற்றில் காட்டப்பட்டுள்ள மிகுதிகளிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | உண்மையான செலவுகள் அறிக்கையிடப்படல் வேண்டும். | இம்மாற்றத்திற்காக பல்வெறு காரணங்கள் காணப்பட்டன. செயற்திட்டமானது செலவீடுகளை கணக்கிடும் போது அனுமதிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டினை மிஞ்சமுடியாது எனவே OMST ஆனது இவ்வாண்டிற்காக போதியளவு பாதீட்டு ஒதுக்கீடுகள் காணப்படாததன் காரணமாக OTS இனால் அறிக்கை இடப்பட்ட மொத்த செலவினங்களை கணக்கிடமுடியாமல் உள்ளது. | உண்மையான செலவினங்களை பதிவு செய்ய பொறிமுறை ஒன்று இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. |

## 5.5 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம்

(i) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டமானது நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப பட்டப்படிப்புக்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 30,051 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,409 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுமான வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் காரணமாக இலக்கிற்கு பின்னால் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் ரஜரட்ட, சப்பிரகமுவ, களனி மற்றும் சிறிஜயவர்த்தனபுர | தாமதமான நடவடிகைகையை ஈடுசெய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முகாமைத்துவத்தின் பதிலிற்கு இணங்க நான்கு கட்டுமானப் பணிகள் நான்கு பீடங்களின்(faculty) கட்டிடப் பணிகளுக்கான கொள்முதல் 2018ம் ஆண்டின், இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்திம் தாமதமானதற்கான காரணம் பணியாளர்களின் தாமதம் ஆகும். | களனி, ஸ்ரீஜெயவர்த்தனபுர மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களின் கட்டுமானப் பணிகள் 2020ம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. ரஜரட்ட தொடர்பான ஒப்பந்த வேலைகள் 17 செப்டம்பர் 2021 இல் வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பனவற்றிற்காக ஐ.அ.டொலர் 66.14 மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 4 வசதியான கட்டிடங்களை நிர்மானிக்க காணப்படும் ஒப்பந்தங்களை தெரிவு செய்வதற்கான பெறுகை செயன்முறை 2017 ஜனவரி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்து கையளிப்பதற்கு 3 வருடங்களிற்கு மேல் எடுத்திருந்தமையை வெளிப்படுத்தியது. மேலும் ரஜரட்ட பல்கலைக்கலகத்திலுள்ள நிர்மான வேலைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிராமையை வெளிப்படுத்தியது. | | | |
| (ஆ) | செயற்திட்ட ஐ.அ.டொலர் 145 மில்லியன் கடன் தொகை பெறுவனவில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 9.86 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்ட நிர்வாக கையேட்டில் ஒப்புதலலிக்கப்பட்ட மாற்றியமைக்கப்பட்ட நிதி | செயற்திட்ட காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆசிய அபிவிருத்தி வங்கியானது மீள்திருத்தப்பட்ட திட்டத்திற்கு உடன்படுகிறது. எதிர்பார்க்கப்பட்ட வழங்கல் விரயச்செலவானது ஐ.அ.டொலர் 18.59 மில்லியனாகும். இருந்த போதிலும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக கொள்முதல் செயன்முறைக்கு மூன்று ஒப்பந்தங்களை மட்டுமே எங்களால் | செயற்திட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. |

இலக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3457.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18.59 மில்லியன் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய இலக்குகளில் 48 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1672.6 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.7 மில்லியன் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. அதற்குமேலதிகமாக இலக்கிடப்பட்ட மீளப்பெறலில் செய்யப்பட்ட ரூபா 750.56 மில்லியனில் ரூபா 99.5 மில்லியன் மாத்திரமே நிர்மான வேலைகளுக்கான ஒப்பந்தத்தினை கையளிப்பதில் தாமதம் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

வழங்க முடிந்தது.

# 6 விவசாயத் துறை

## 6.1 சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்

(i) சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது வணிகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபட்டுள்ள 57,000 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவு தரத்தை நிலையாக அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 17,170 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.03 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,892 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.4 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்த்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 யூலை 01 இலிருந்து 2018 திசெம்பர் 31 வரையான 18 மாதங்கள் காலப்பகுதியின் போது விவசாயிகள் தவிர சிறுநிலவுடைமையாளர்கள் உள்ளடங்களாக 45,000 பயனாளிகளுக்கு உப கடன்களினை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13,887 பயளாளிகள் இனங்காணப்பட்டிருந்தனர். அதில் 2,119 பயனாளிகள் மாத்திரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த | இலக்குகளினை அடைந்து கொள்ளக்கூடியவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பயனாளர்கள் கூட்டங்களினை நடாத்துவதனூடாக வணிகமும்மொழிவுகளினை பெற்றுக்கொள்ள வணிக சமுதாயம் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் (GA) என்பனவற்றை விழிப்புனர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதியில் உள்ளவாறு 1,715 பயனாளிகளுக்கு ரூபா 320.13 மில்லியன் தொகையான உபகடன்கள் அளிக்கப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | காலி மாவட்டத்திலுள்ள வெளி விவசாயிகள் தேவைப்படும் பயிற்சிகள், உட்கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் சிறுநிலவுடமை, பயிர்ச்செய்கைக்கான ஏனைய உதவிகளின் பற்றாக்குறை காரணமாக, தேயிலை நாற்றுமேடைகளின் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் பாரம்பரிய முறைமைகளினைப் பயன்படுத்துகின்றனர். | மேம்படுத்தல் கம்பனி மற்றும் வங்கிகளினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் மீது நெருக்கமான மேற்பார்வை தேவைப்படுகின்றது. | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டமானது 4பி இனை மாத்திரமே செலவுவைத்திருந்ததுடன் 441 விவசாயிகளுக்கு வசதியளிக்கப்பட்டது. துற்போது SAPP இனால் வழங்கப்பட்ட அனைத்து கடன்களும் மீளப்பெறப்பட்டு செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு சனாதிபதி செயலாளரின் கீழ் ரூபா 2,044.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் திருத்தப்பட்ட வருடாந்த பாதீட்டில் அவை தொடர்பாக ரூபா 2,600 மில்லியன் தோகையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 63 சதவீதத்தை பிரதிநித்தித்துவப்படுத்துகின்ற ரூபா 1,654.25 மில்லியன் தொகையை மாத்திரமே நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தியிருந்தது. | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒட்டுமொத்த இலக்குகளும் அடையப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 ஆம் ஆண்டிற்கான மானிய பணவளிப்பின் கீழ் இலக்கிடப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 5,500 ஆகும். எனினும், ஆண்டின் போது உள்ளபடியான மானிய பணவளிப்பு செய்யப்பட்டமை 4,502 பயனாளிகளிற்காக மாத்திரமே ஆகும். கொல்லைப்புற கோழி வளர்ப்பு செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகள் 500 ஆக இருந்ததுடன் 94 பயனாளிகளுக்கு மாத்திரமே பணவளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் கறுவா பயிர்ச்சி செய்கைக்காக இலக்கிடப்பட்ட மொத்த பயனாளிகள் 140 ஆக காணப்பட்ட<br><br>அதே நேரம் 40 பயனாளிகளுக்கு மாத்திரமே மானியம் வழங்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும்<br><br>பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை<br><br>கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூன்று பிராந்திய நிகழ்ச்சித்திட்ட ஒருங்கினைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு பிராந்தியங்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர். | அனைத்து இலக்குகளும் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கடன் கூறின் கீழ் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15,223 பயனாளிகளை மேவுகை செய்வதன் மூலம் பதினைந்து பொது-தனியார்உற்பத்தியாளர் பங்குடமை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை கடன் பணவளிப்புச் செய்யப்படுவதற்கு 7,499 பயனாளிகளை நிகழ்ச்சித்திட்டம் இலக்கிட்டிருந்ததுடன் அதில் 6,091 பயனாளிகள் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 5,219 பயனாளிகளுக்கு மாத்திரம் ரூபா 1.037 மில்லியன் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும்<br><br>பொருட்டு நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை<br><br>கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாயத்திற்கு தனியார் நிதி நிறுவனங்களினால் கடன்வழங்குவதினை துரிதப்படுத்த மொத்த கடன் வசதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | அனைத்து இலக்குகளும் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | கொல்லைப்புற கோழி வளர்ப்புச் செயற்திட்டம் தொடர்பாக 2018 | பணவளிப்பு திட்டத்தை அடிப்படையாகக் | எவ்வித தடுப்பு நடவடிக்கைகளும் | செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் தொடக்கம் 2019 திசெம்பர் வரை பணவளிப்பு திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. 2019 சனவரி 04 மற்றும் 2019 பெப்ரவரி 26 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | கொண்டு உரிய காலத்தில் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | க்கொண்டிருக்கின்றது. |
| (எ) | பால்ப்பண்ணை செயற்திட்டத்திற்கான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் காலப்பகுதி இரண்டு ஆண்டுகளாகும். ஒரு ஆண்டு காலப்பகுதி முடிவடைந்திருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை இச் செயற்திட்டத்தின் கீழ் எந்தவொரு விவசாயியும் பதிவு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் பயனாளிகளுக்கு மானிய பொருட்களை வழங்குவதற்கு முறையே 2018 திசெம்பர், 2019 சனவரி மற்றும் 2019 பெப்ரவரி அளவில் செயற்திட்ட தரப்பினர்கள் இணங்கியிருந்த போதிலும் பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை உரிய காலத்தில் அடைந்து கொள்ள நிகழ்ச்சித்திட்ட தரப்பினர்கள் எவராலும் முடியாதிருந்தது. | தாமதத்தை இழிவுபடுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. |
| (ஏ) | கறுவா பயிர்ச்செய்கை தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் கடன்களின் மீள்கொடுப்பனவிற்கு உத்தரவாதமளிப்பவராக செயற்படுத்துநர்கள் செயற்பட வேண்டும். சில பயனாளிகள் தவணைப்பணம் செலுத்த தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இதனால் மிகுதி கடன் தொகையை விடுவிப்பது செயற்படுத்துநர் | பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தொடர்புடைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடயங்கள் மாற்றம் செய்யப்படாமல் இன்னும் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கியால் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், செயன்முறைப்படுத்தும் நிலையம் மேற்படி உடன்படிக்கையின் 2(அ)(ii) ஆம் பிரீவின் பிரகாரம் செயற்படுத்துநர் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சங்கம் தொடர்பாக செயன்முறைப்படுத்தும் நிலையம் எதுவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஐ) | 2019 ஒக்தோபர் 10 இல் உள்ளவாறு தேயிலை நிரப்புதல் செயற்திட்டத்தின் கீழ் 500 பயனாளிகள் இணங்காணப்பட்டிருந்த போதிலும் 119 பயனாளிகள் மாத்திரமே இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 31 தேயிலை பயிர்ச்செய்கையாளர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கைகளின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | முருங்கை பயிர்ச்செய்கை தொடர்பாக சனாதிபதி செயலாளர், Dasini Dehydration நிலையம் மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 2(ஈ) பிரிவு மற்றும் 03 ஆம் பட்டியலின் பிரகாரம் 250 பயனாளிகளுக்கு 2018 நவம்பர் மாதத்திலும் மிகுதி 250 பயனாளிகளுக்கு 2019 மே மாதத்திலும் மானியங்கள் மற்றும் கடன் வசதிகளை வழங்குவதற்கு பணவளிப்பு திட்டத்தின் முதலாம் கட்டம் தீர்மானித்திருந்த போதிலும் 97 பயனாளிகளுக்கு மாத்திரமே ரூபா 9.33 மில்லியன் தொகையான கடன் வசதிகள் 2019 திசெம்பர் 31 இல் | உடன்படிக்கைகளின் பிரகாரம் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் இலக்குகளை அடைந்துகொள்ள எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 120 BOC யினால் 91 விவசாயிகளிற்கு மாத்திரமே கடன் வழங்கப்பட்டிருந்ததடன் 116 விவசாயிகளிற்கு மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. |

உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | முருங்கை பயிர்ச்செய்கை தொடர்பாக சனாதிபதி செயலாளர், Dasini Dehydration நிலையம் மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 3 (ஓ) பந்தியின் பிரகாரம் செயற்படுத்துநர் பீஎம்யூவிற்கு மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 28 வரை செயற்படுத்துநரால் எந்தவொரு செயன்முன்னேற்ற அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கால எல்லையினுள் செயற்படுத்துநர்களால் மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | மாதாந்த செயலாற்றல் அறிக்கைகள் குறித்த காலத்திற்குள் இன்னம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | ரூபா 1.36 மில்லியன் கிரயத்தில் அரச அச்சக கூட்டுத்தாபனத்திடமிருந்து அச்சிடப்பட்ட 14,830 தன்னியக்க கண்காணிப்பு புத்தகங்களில் 4,547 புத்தகங்கள் மாத்திரம் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 10,283 புத்தகங்கள் 2020 மார்ச் 24 வரையிலும் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் களஞ்சிய வளாகங்களில் காணப்பட்டன. மேலும் கலோயா பிளான்ரேஷன் கம்பனி லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட 3,740 புத்தகங்கள் 2020 மார்ச் 24 வரையிலும் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கால எல்லையினுள் செயற்படுத்துநர்களால் மாதாந்த செயன்முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 1 வது அச்சு முழுமையாக விநியோகிக்கப்பட்டுள்ளது. | 2 வது அச்சின் 6,000 சிங்கள புத்தகங்கள் மற்றும் 2,495 தமிழ் புத்தகங்கள் என்பனவற்றில 2,875 சிங்கள புத்தகங்கள் 2,333 தமிழ் புத்தகங்கள் காணப்படுகின்றன. |
| (க) | முயற்சிகள் இச் செயற்திட்டம் 21,823 பயனாளிகளுக்குநன்மைகளை வழங்குவதற்காக 25 4P உடன்படிக்கைகளை | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) ஒரே நேரத்தில் பௌதீக மற்றும் நிதி | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் இலக்குகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,778 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்த்த பயனாளிகளில் 63 சதவீதத்தையும் ஒதுக்கப்பட்ட நிதியில் 19 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 340 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 13,871 பயனாளிகளுக்கு மாத்திரமே இச் செயற்திட்டம் நன்மைகளை வழங்கியிருந்தது. | செயன்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். | | அடையப்பட்டிருக்க வில்லை. |
| (ங) | மீளாய்வாண்டிற்கான கூறு 02 – "கிராமிய நிதிக்கான அணுகல்" இன் கீழ் GOSL நிதியிலிருந்து ரூபா 74 மில்லியனை செயற்திட்டமானது ஒதுக்கியிருந்தது. கிராமிய நிதிச் சேவைகளை பயனாளிகளுக்காக நிலையான முறையிலும் மலிவு விலைவீதத்திலும் அணுகுவதை எளிதாக்குவதே இக் கூறின் நோக்கமாகும். எனினும், பாதிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் கடனுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாடுகள் முறையாக கண்காணிக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனிற்கான இலங்கை அரசாங்கத்தின் (GOSL) எதிரினை நிதிகள் இப்போது பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ச) | செயற்திட்ட அலுவலகம் 2020 மே 22 இல் இராஜகிரியவில் வாடகை கட்டிடத்தில் இருந்து வேறொரு வாடகை கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. பழைய கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தம் முடிவடைந்ததால், செயற்திட்டமானது ரூபா 3.2 மில்லியன் மீளளிக்கத்தக்க வைப்பை பதிவழிக்க வேண்டியிருந்தது. மேலும், அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டதால், செயற்திட்டத்திற்கு | செயற்திட்டத்திற்கு ஏற்படும் நட்டங்கள் மற்றும் சேதங்களை குறைப்பதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடயங்கள் தீர்க்கப்படாமல் காணப்படுகின்றன. |

இனி தேவைப்படாத ரூபா 6.8 ரூபா மில்லியன் பெறுமதியான அலுவலக கட்டடத்தின் பகுதிகள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது. செயற்திட்டத்தில் இந்த நிகழ்வின் தாக்கம் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணானதாகும்.

## 6.2 காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டம்

(i) காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரதேசங்களில் சிறு பற்றுநிலக் கமத்தொழிலின் உற்பத்தி திறனையும் காலநிலை எழுச்சியையும் முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,200 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 140 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 22,500 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மே 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வரிசை அமைச்சினதும் தொடர்புடைய மாகாண சபைகளினதும் 40 உத்தியோகத்தர்களை பகுதி நேர வேலை அடிப்படையிலும் 06 ஊழியர்களை நாட் சம்பள அடிப்படையிலும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2019 | (அ). மாதத் தொடக்கத்தில் செயற்திட்டப் பணிப்பாளர்/ பிரதி செயற்திட்டப் பணிப்பாளர்களால் பகுதி நேரப் பதவியணியினருக்கு வேலை நிரல் வழங்கப்பட வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்பட்ட ஆளனியினரின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்ப இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | டிசெம்பர் 31 வரை ரூபா 8 மில்லியன் ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்திற்கான நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் 2018 செப்டெம்பர் 12 ஆந் திகதியன்றும் 2019 மார்ச் 18 ஆந் திகதியன்றும் பெறப்பட்டிருந்தன. | (ஆ). தொடர்புடைய மேற்பார்வை உத்தியோகத்கதர்கள் பகுதி நேரப் பதவியணியினரிடமிருந் உள்ளவாறான வேலையின் விரிவான விபரத்தைப் பெற வேண்டும்.<br><br>(இ). PMU பகுதி நேர உத்தியோகத்தர்களின் வரவு இடாப்பை பேண வேண்டும்.<br><br>(ஈ). பிரதிச் செயற்திட்டப் பணிப்பாளர் (PMU) வெளியிட்ட MOA/CSIA/PMU/Admin எனும் இலக்கமுடைய 2019 செப்டெம்பர் 18 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பகுதி நேர உத்தியோகத்தர்களது உள்ளவாறான கடமை நேரத்தின் அடிப்படையில் மாதாந்தப்படி வழங்கப்பட வேண்டும். | | |
| (ஆ) | மீளாய்வாண்டின்போது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 3 உறுப்புகளின் கீழ் ரூபா 520.5 மில்லியன் செலவழிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்டபோதும், திறைசேரியின் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபா 440 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றலையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வாறாயினும், திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ரூபா 440 மில்லியன் தொகையின் 58 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 256.5 மில்லியன் செயற்திட்டத்தின் உள்ளவாறான செலவினமாக அமைந்தது. | | | |
| (இ) | மீளாய்வாண்டின்போது செயற்திட்ட முகாமைத்துவக் கூறினதும் செயற்திட்டப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினதும் 26 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், தற்போதைய பதவியில் 43 ஊழியர்கள் பகுதி நேர வேலையில் ஈடுபட்டுமிருந்தனர். | செயற்திட்டம் சுமூகமாக நடைபெற மேலும் தாமதமின்றி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | எவ்வித தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் இன்னும் மேம்படுத்தப்படுகின்றது. |
| (ஈ) | உரிய காலத்திலான மீளாய்வு மற்றும் மதிப்பீடு இயலச் செய்து இப் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ தகவல் அமைப்பு (MIS) ஸ்தாபிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், 2021 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான அமைப்பொன்று செயற்திட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி முகாமைத்துவ தகவல் அமைப்பு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | முகாமைத்து தகவல் முறைமையை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ தகவல் முறைமை இன்னும் நிறுவப்படவில்லை. |
| (உ) | வருகையினை பதிவதற்கு வருகை பதிவேடொன்று பேணப்படாது மற்றும் செயற்திட்டத்தில் வேலை செய்த காலத்தினையும் பங்களிப்பினையும் மதிப்பிடாது, பகுதி நேர அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 54 அரச மற்றும் அரை அரச உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 24 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | வருகையை பதிவு செய்வதற்கு முறையான அமைப்பினை பேணல் வேண்டும். | வரவுப்பதிவேடு பகுதி நேர உத்தியோகத்தர்களிற்காக பராமரிக்கப்படல் வேண்டும். இருப்பினும் செயற்திட்டமானது வரவினை பதிவு செய்வதற்காக ஓர் சரியான முறைமையினை | செயற்திட்டமானது வரவினை பதிவு செய்வதற்காக ஓர் சரியான முறைமையினை நிறுவ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

நிறுவ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6.3 தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம்

(i) தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டமானது செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களின் அதிக உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 8,502 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.4 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.77 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்த்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினையும் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரை 06 தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் 5,500 ஹெக்டெயர் தேயிலை காணிகளை புனரமைத்து மீள்நடுகை செய்வதற்கு இச்செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும் செயற்திட்டம் | திட்டத்தின் செயற்பாடுகள் பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். | இது 18 மாத பயிர்ச்செய்கைக்கு பதிலாக தேயிலை பயிர்செய்கையின் மண்பதப்படுத்தல் காலப்பகுதியில் 12 மாதங்களாக குறைத்து CO3 புல்பயிரிடலின் | 2022 பெறும்போக மற்றும் சிறுபோக காலங்கள் மற்றும் 2023 சிறுபோக காலப்பகுதியின் போதான 2580 ஹெக்டேயர் நிலத்தில் தேயிலை மீள்பயிரிட எதிர்பார்க்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திட்டமிட்டவாறு 2016 ஆம் ஆண்டில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை. எனவே, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,102 ஹெக்டெயர் மாத்திரமே புனரமைக்கப்பட்டு மீள்நடுகை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 4,500 ஹெக்டெயர் வரை தேயிலை காணிகளை புனரமைத்து மீள்நடுகை செய்வதற்கான இலக்கை மீளாய்வு செய்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது. ஆகையால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் 650 ஹெக்டெயர் தேயிலை காணிகள் புனரமைக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டம் தொடங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குள் மொத்த தேயிலை காணிகளில் 75 சதவீதம் புனரமைக்கப்பட்டு மீள்நடுகை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 46 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. | | அறிமுகத்தின் காரணத்தால் ஆகும். | |
| (ஆ) | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இணைய அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை நிறுவுவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 4.6 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அது நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தால் தற்போதுள்ள மாவட்ட அலுவலகத்தை ஒருங்கிணைத்து தேவையான முகாமைத்துவ | முகாமைத்துவ தகவல் முறைமை நிறுவப்பட வேண்டும். | இணையத்தள அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமையின் நடவடிக்கைகள் தற்போது பூர்த்திஅடைந்துள்ளன. | தகவல் முறைமைக்கான தரவு உள்ளீடு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தகவல் முறைமையை பேண முடியாதிருந்தது. | | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் செயற்திட்ட விளைவுகள் தொடர்பான ஆய்வை நடாத்துவதற்கான ஆலோசனைக்காக ரூபா 4.6 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் அது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்கு செயற்திட்ட விளைவு ஆய்வுகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | நிலஅளவை கோவிட்19 தொற்று பரவல் காரணமாக தாமதமடைந்திருந்ததுடன் அதன் இறுதி அறிக்கை செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆய்வறிக்கையானது திட்ட முடிவுகளினடிப்படையில் 13-17 டிசம்பர் 2021 சரிபார்ப்பு பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் தேசிய வழிநடத்தல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. |

## 6.4 வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01

(i) வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 01 ஆனது வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதம் எனும் பெயரிலான 03 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(iii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 15,612 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,176 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 63 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iv) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஜனவரி 23 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2022 ஜனவரி 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்ட காலம் 2023 ஜூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(v) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 வரை 65 முன்மொழிவு கம்பனிகளுக்கு இணை மானியங்களாக ரூபா 1,184.07 மில்லியன் தொகையை அங்கீகரித்திருந்த போதிலும் அங்கீகாரத் திகதிகளிலிருந்து 6 முதல் 30 மாதங்கள் வரையிலான காலப்பகுதி கடந்த பின்னரும் இணை மானியங்கள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயற்திட்ட செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பின்வரும் காரணங்களால் தாமதம் ஏற்படுகிறது. திட்டத்தை ஆரம்பிக்க தயாராகாமை, சட்டபூர்வமான ஆவணங்கள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமை, கொவிட் காரணமாக திட்டங்களைச் செயல்படுத்தி அனுமதி பெறுவதில் தாமதம், திட்டங்களை அமுல்படுத்தி செயற்படுவதில் தாமதம். | செயற்திட்டமானது தற்போது வரை 310 மும்மொழிவு கம்பனிகளிற்கு ஓர் இனைமானியமாக கூட்டுமொத்தம் ரூபா 4639.7 மில்லியன் விடுவிக்கப்பட்டது. |
| (ஆ) | ரூபா 341 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட மானியங்களிலிருந்து ரூபா 144 மில்லியன் தொகையான இரண்டாவது மானியம் 2020 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்டிருக்காத போதிலும் முழுமையடையாத பணிகள் காரணமாக முதல் தவணைப்பணம் வழங்கப்பட்டதால் 5 முதல் 15 மாதங்கள் ஆகியுள்ளன. | மும்மொழிவு கம்பனிகளால் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மீது நெருங்கிய கண்கானிப்பு தேவை. | தேவையற்ற தாமதங்களை தவிர்க்கவும் குறித்த அளவுறுக்குள் பகுதிகளை துரிதப்படுத்த இருதரப்பினர்களும் ஒன்றினைந்து வேலை செய்கின்றனர். | கூட்டுமொத்தம் ரூபா 2,853.7 மில்லியன் தற்போது வரை இரண்டாவது பகுதிக்காக 144 மும்மொழிவு கம்பனிகளிற்கு விடுவித்திருந்தது. |
| (இ) | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 232 முதலீட்டாளர்களுக்கு இரண்டு முதல் மூன்று வருட காலமாக ரூபா 4,830 மில்லியன் பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன, | மும்மொழிவு கம்பனிகளால் அமுல்படுத்தபப்பட்ட நடவடிக்கைகள் மீது நெருங்கிய கண்கானிப்பு ஒன்று தேவை | தேவையற்ற தாமதங்களை தவிர்க்கவும் குறித்த அளவுறுக்குள் பகுதிகளை துரிதப்படுத்த இருதரப்பினர்களும் ஒன்றினைந்து வேலை | கூட்டுமொத்தம் ரூபா 14.7 மில்லியன் தற்போது வரை மூன்றாவது பகுதிக்காக 36 மும்மொழிவு கம்பனிகளிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆனால் ரூபா 57.83 மில்லியன் தொகையான 4 முதலீட்டாளர்கள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அவர்களது முதலீட்டை பூர்த்தி செய்திருந்தனர். | | செய்கின்றனர். | விடுவித்திருந்தது. |
| (ஈ) | யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை 07 முன்னோடி மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 350 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு இணை மானிய நிகழ்ச்சித்திட்டம் ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல் உட்பட ஏனைய 15 மாவட்டங்களை இணை மானியங்கள் வழங்குவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளது. மொத்த மானியங்களில் 86.6 சதவீதம் மேற்குறித்த 15 ஏனைய மாவட்டங்களிற்கு ஒதுக்கியிருந்தது. | மும்மொழிவு கம்பனிகளால் அமுல்படுத்தபப்ட்ட நடவடிக்கைகள் மீது நெருங்கிய கண்காணிப்பு ஒன்று தேவை. | பூரிய அளவான முன்னெச்சரிக்கை நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதனூடாக இவ்அடையாளப்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மானிய திட்டத்தின் மீது முதலீட்டாளர்கள் பாதுகாப்பை ஏற்படுத்த செயற்திட்டமானது அனைத்து சாத்தியமான படிகளையும் எடுத்துள்ளது. | வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் குறைந்த பதில் காரணமாக, அதிக முதலீட்டுடன் கூடிய சாத்தியமான திட்டங்களை PMU பரீசிலிக்க வேண்டியிருந்தது. |
| (உ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் இணைப்பு 2 இன் 8 (ஆ) vi ஆம் பந்தியின் படி, அம் முதலீட்டுத் திட்டமும் இணை மானியமும் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு மேலான காலமாக அமுலாக்கப்பட உள்ளவையாகும். எவ்வாறெனினும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 232 | மும்மொழிவு கம்பனிகளால் அமுல்படுத்தபப்ட்ட நடவடிக்கைகள் மீது நெருங்கிய கண்காணிப்பு ஒன்று தேவை. | PAD மிகவும் சாதகமான சூழலில் மானியங்களை மட்டும் வழங்குவதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது. ஆனால் நடைமுறையில் இந்நிலமைகள் மாறுவதும் தாமதமாவதும் தவிர்க்க முடியாதவையாகும். | 36 மும்மொழிவு கம்பனிகள் அவைகளது முதலீட்டு நடவடிக்கைகளை பூர்த்திசெய்திருந்தன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆதரவளிக்கும் கம்பனிகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட இணை மானியத் தொகையான ரூபா 4829.79 மில்லியனில் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 4 அங்கீககரிக்கப்பட்ட ரூபா 57.83 மில்லியன் முதலீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருந்தது. அது அனுமதிக்கப்பட்ட இனை மானியத்தின் பெறுமதியின் சதவீதமாக எடுக்கும் போது அது 1.19 சதவீதமாகும் அதற்கு மேலதிகமாக 4 மும்மொழிவுகள் மாத்திரமே அவர்களது 3வது பகுதிக்கு கிடைத்திருந்தது. | | | |
| (ஊ) | துணை மானியங்கள் ரூபா 71.58 மில்லியன் அவர்களது செயற்திட்ட நடவடிக்கைகளை கைவிட்ட 9 கம்பனிகளிற்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டில் விடுவித்திருந்ததுடன் ரூபா 1.35 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மீளளிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்காக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்ட படி சட்ட நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மிகுதி ரூபா 70.23 மில்லியனை அறவிட செயற்திட்டத்தினால் கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைமையைச் சீராக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இணை மானிய உடன்படிக்கையின் படி, விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவர்கள் 3 செயற்திட்டங்கள் மாத்திரம் கைவிடப்படும் என அபாயப்படுவதுடன் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் செலுத்தப்பட்ட மானியங்களை மீளப்பெற எடுக்கப்பட்டுள்ளது. | மானிய தொகையினை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக 5000 ஏற்றுமதிக் கிராமங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்பகட்ட நடவடிக்கையாக, ஆரம்ப நிகழ்ச்சி நடவடிக்கைகளிற்கு ரூபா 4.24 மில்லியன் கிரயத்தில் தெஹியத்த கண்டியவில் 2019 யூன் 17 | செயற்திட்டத்தின் நோக்கங்களைப் பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்ட செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு அவசியமான | ஏற்றுமதி கிராமங்களை நிறுவுதல் சமூக அதிகாரமளித்தல் மற்றும் விவசாய ஏற்றுமதி அமைச்சினால் செய்யப்பட்ட ஓர் நிகழ்ச்சித்திட்டமாகும். | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதி நாடளாவிய ரீதியாக 1000 கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. செயற்திட்டத்தின் நோக்கம் விவசாயப் பொருட்களுக்கு பெறுமதி சர்ப்பனவை வழங்குவதான போதிலும் ரூபா 3.4 மில்லியனிற்கு சிக்கனமற்ற செலவினத்தை மேற்கொண்டு ஆடுகளைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| (ஏ) | செயற்திட்டத்தின் பகுதியளவிலான கடன் உத்தரவாதக் கூறின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் ஒதுக்கீட்டு தொகை 2020 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | இக்கடன் திட்டத்தை தனியார் வங்கி மூலம் அமுல்ப்படுத்துவதற்கான ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பகுதியளவிலாக கடன் உத்தரவாதத்தின் மீதான கணக்காய்வாளர்களின் கருத்து உண்மையானதுடன் ஏற்றும் கொண்டனர். | தனியார் வங்கிகள் ஊடாக இக்கடன் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 6.5 வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 ஆனது யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்கு அமுல்படுத்தப்படுகின்றது. மேலும், சிறுநிலவுடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்கதும் சந்தைவாய்ப்புள்ளதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவை முன்னேற்றி வர்த்தகமயமாக்கலை நோக்கி நகர்வதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(i) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,176 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 65 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(ii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்ட காலம் 2023 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iii) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடு சர்வதேச அங்கீகரம் பெற்ற விவசாய தொழில்நுட்ப சேவை வழங்குனருடன் யாழ்ப்பாணம், முல்லைதீவு, மட்டக்களப்பு, மொனராகலை, அனுராதபுரம், பொலநறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்களை நிறுவுதல் ஆகும். இருப்பினும் வடிவமைப்புஇ நிறுவுதல் செயற்படுத்தல்இ விவசாய தொழிநுட்ப பூங்காக்களை நிறவுதல் மற்றும் முகாமை செய்தல் என்பனவற்றிற்கான ஒப்பந்தம் 33 மாதங்கள் தாமதத்துடன் 2019 ஒக்டொபர் 16 இல் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 4.35 மில்லியனில் ஓர் சர்வதேச சேவை வழங்குனரிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2021 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் எவ்வித பூங்காக்களும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | சர்வதேச சேவை வழங்குநருடன் முறையான ஒருங்கிணைப்பை பேண வேண்டியதுடன் தாமதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வாளரின் கண்காணிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சர்வதேச சேவை வழங்குனரை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மிக நீண்ட கொள்முதல்களை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை தாமதமானது. | சர்வதேச சேவை வழங்குநருக்கு 07 விவசாய தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணிப்பதற்கான வடிவமைத்தல், நிறுவுதல்,இயக்குதல், முகாமை செய்தல் மற்றும் மாற்றம் செய்வதற்கான உடன்படிக்கை 16 ஒக்டோபர் 2019 4.35 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பீட்டில் செய்யப்பட்டது. |

நிறுவப்பட்டிருக்கவில்லை
அதன் பெறுபேறாக
செயற்திட்டத்தின் அனைத்து
நடவடிக்கைகளும்
தாமதமடைந்திருந்தன.

## 7. சுகாதாரத் துறை

### 7.1 கோவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம்

(i) கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டமானது கொவிட்-19 ஆல் திணிக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் இலங்கையில் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான தேசிய முறைமைகளை வலுப்படுத்துதல் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,655 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 128.6 மில்லியனானதுடன் அத் தொகையில் ரூபா 18,673.2 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 93.6 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 6,982.5 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் மிகுதி தொகை நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 ஏப்ரல் 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | யுனிசெவ்வால் வழங்கப்படுவதற்கு இணங்கப்பட்ட ரூபா 5,550 மில்லியன் தொகையன மருத்துவ பொருட்களிற்கான மதிப்பிடப்பட்ட கிரயமானது உண்மையான கிரயத்தை மதிப்பீடு செய்யாமல் உள்ளபடியான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இம் மருத்துவப் பொருட்களின் பெறுகை மற்றும் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கான சான்று கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பொருட்களின் பெறுவனவை உறுதிப்படுத்துவதன் மூலம் கிரயம் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் இக் கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | எழுத்துமூலமான ஆதாரங்கள் 2022 மார்ச் 32 வரை கணக்காய்வு உறுதிப்படுத்தலிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வுக் காலப்பகுதியின் போது 33 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிற்காக உரிய பணம் பெறுநரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் நிறுத்தி வைத்தல் பணத்திற்காகவும் பணம் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வுக் காலப்பகுதியின் போது ரூபா 42.40 மில்லியன் பெறுமதியான 56 சந்தர்ப்பங்களில் 7 வைத்தியசாலைகளிற்கு அரசாங்க வருமானம் | இக் கிரயங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | எழுத்துமூலமான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

அனுப்பப்பட்டிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை தரைப்படையால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 188.74 மில்லியன் பெறுமதியான உபகரணத்தின் பெறுமதியானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி இருப்பை பொருட்படுத்தாமல் மீளாய்வுக் காலப்பகுதிக்கான செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காலப்பகுதிக்குரிய செலவினம் தெளிவாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இம் மீதமாக உள்ள உருப்படிகள் தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் அவசர பாதுகாப்பு நிலையங்கள் என்பனவற்றில் நேர்த்தியான செயற்பாடுகளை வழங்க எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். | எழுத்துமூலமான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | செயற்திட்டம் ரூபா 239.48 மில்லியன் கிரயத்தில் 805 மோட்டார்சைக்கிள்களை கொள்வனவு செய்து பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கு வழங்கியிருந்தது. எனினும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சிற்கிடையே எழுத்துமூலமான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரண்டு தரப்பினர்களிற்கும் இடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். | ஆவதானிப்புக்களுடன் உடன்பட்டனர். | உடன்படிக்கை இன்னும் கையொப்பமிடப்படவில்லை. |

## 7.2 ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - (கூறு I மற்றும் II)

(i) ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - (கூறு I மற்றும் II) ஆனது நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 697,937 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 4,419 மில்லியனானதுடன் அத் தொகையில் ரூபா 31,588 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மீள் நிர்மானம் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள அறிக்கைகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு நிதியளித்தல் முகவர் ரூபா 9,851 மில்லியனை வழங்கியுள்ளது. அதில் ரூபா 4,317 மில்லியன் மாத்திரமே கூறு - 1 இற்காக விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ரூபா 4,169 | செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட அனைத்து நிதிகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கண்காணிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படுவதானது வெளிவளத் துறை (ERD)மற்றும் திட்ட அலுவலகத்தால் பராமரிக்கப்படும் பதிவேடுகளுக் கிடையில் சமரசம் செய்து வேறுபாட்டை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள ரூபா 5,534 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், திறைசேரியால் விடுவிக்கப்பட்ட தொகைக்கும் செயற்திட்டத்தினால் பெறப்பட்ட தொகைக்கும் இடைப்பட்ட ரூபா 231 மில்லியன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | 1989 நவம்பர் 30 ஆம் திகதிய பிரதமர் அலுவலக சுற்றறிக்கை இல PM/Ps/05 இன் பிரகாரம் வெளிநாட்டு பயணத்தின் பின்னர் நாட்டிற்கு திரும்பும் உத்தியோகத்தரால் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும், அவ்அறிக்கை தாய்லாந்து, கொஸ்தாரிகா மற்றும் சீனசுற்றுலா என்பனவற்றிற்கு விஜயம் செய்த 27 உத்தியோகத்தர்களினால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை | இவ்அறிக்கை தாமதமின்றி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | அமைச்சின் செயலாளரிற்கு அறிவிக்க நடைமுறை எடுக்கப்பட்டுள்ளது. | 18 உத்தியோகத்தர்கள் மாத்திமே 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு இவ் அறிக்கையினை சமர்ப்பித்திருந்தனர். |
| (இ) | செயற்திட்டத்தின் கூறு 1 இன் கீழான சுமார் 70 சதவீத ஒதக்கீடு மாகாண சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 94.13 மில்லியன் தொகை மாகாண சுகாதார சேவைகளுக்காக | மாகாண மட்ட மற்றும் மத்திய மட்ட செயற்பாடுகள் தெளிவாக இனங்காணப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | ஏனைய செயற்பாடுகள் மாகாண நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளன. ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகள் சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் மேலதிக | இதற்காக ஓர் முறையான பொறிமுறை 2021 இல் செய்யப்பட்டிருக்கவில்லை. |

செலவிடப்பட்டுள்ளது. செயலாளர்களிடமே உள்ளது.

## 7.3 சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம்

(i) சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டமானது தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) ரூபா 7,751 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் , ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.50 மில்லியனை கடனாகவும் மற்றும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.50 மில்லியனை மானியமாகவும் நிதியழிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கிகியால் உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்ட காலம் செயற்திட்ட வேலைப்பரப்பு மாற்றம் மற்றும் கடனாக ஐ.அ.டொலர் 110 மில்லியன் மற்றும் மனியமாக ஐ.அ.டொலர் 3 மில்லியனும் மேலதிக நிதியாக கிடைக்கப்பெற்றமை போன்ற காரணங்களினால் 2025 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2018,2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | டொலஸ்வகே பிரதேச வைத்தியசாலை செயற்திட்டத்தின் நிர்மாணமானது தெரிவுசெய்யப்பட்ட் காணிகளின் நிலையற்ற தன்மையால் இடைநிறுத்தப்பட்டிருந்தபோதிலும் ஒப்பந்தகாரரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 5.71 மில்லியன் ஆரம்ப முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்தப்பிரச்சனையானது உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். எனவேதான், அரசாங்கமானது நட்டமொன்றை ஏற்படுத்த வேண்டியதில்லை. | டோலஸ்பேஜ் பிரதேச வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் உபசெயற்திட்டத்தின் நோக்க மாற்றம் காரணமாக முற்பணம் மீளப்பெறப்படவில்லை என மாகாண சுகாதார திணைக்களம் பதிலளித்தது. | ஒப்பந்த விலை கட்டடத்தின் திட்டமிடப்பட்ட இடம் மாற்றப்பட்டதன் காரணமாக ரூபா 5.26 மில்லியனால் அதிகரித்திருந்தது. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ஐ.அ.டொலர் 37.5 மில்லியன் மொத்தக்கடனில், மொத்தக்கடனில் 36.37 சதவீதமான ஐ.அ.டொலர் 13.64 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் விளைவால், மீளாய்வாண்டின் இறுதியளவில் பயப்படுத்தப்படாத மீதிகள் மீது கடப்பாட்டு கட்டணங்களாக ரூபா 34 மில்லியன் செலுத்தவேண்டியுள்ளது. | விருப்பப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைவதற்கும் கடப்பாட்டுக் கட்டணங்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆசிய அபிவிருத்தி வங்கியானது கடன் ஒப்பந்த உடன்படிக்கையின் படி நேரடியாக பற்று வைக்கும் உறுதி மாற்றங்களை மாற்றியதும் திட்ட நிதி அறிக்கையானது கடன்வாங்கும் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில், ரூபா 60,560,458 பயன்படுத்தப்படாத மிகுதிகள் மீது ஒப்படைப்பு கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 07 இரட்டை வான்கள் மற்றும் 09 வான்களின் கொள்வனவிற்காக பெறப்பட்ட விலைமனுக்களை மீளப்பெற்றிருந்தமையால், ரூபா 2.95 மில்லியன் தொகையான இரண்டு விலைமனுக்கள் காசாக்கப்பட்டிருந்தது. ஆனால், 1.66 மில்லியன் ரூபா எந்தவித | இந்தத்தொகை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | வழங்குனர்கள் 07 cabs மற்றும் 09 வேன்களுக்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்களை ஏலம் செல்லுபடியாகும் காலத்திற்குள் மீளப்பெற்றுள்ளனர். அதன் அடிப்படையில் | இத்தொகை 2022 ஜனவரி 31 அளவில் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | காரணமில்லாமலும் அதிகாரமில்லாமலும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | | நாங்கள் உடனடியாக ரூபா 2,950,000 மதிப்புள்ள ஏலப்பத்திரங்களை பறிமுதல் செய்தோம். | |
| (ஈ) | வரிப்பற்றுச்சீட்மை சமர்ப்பிக்காத 04 ஒப்பந்தகாரர்களிற்கு 07 சந்தர்ப்பங்களில் கூட்டு மொத்தம் ரூபா 808,027 பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் மருத்துவ உபகரணத்தின் விற்பனை தொடர்பாக ரூபா 1,590,832 மொத்தத் தொகை உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்தின் பதிவுசெய்யப்படாத வழங்குனருக்கு மருத்துவ உபகரணத்தின் விற்பனை பெறுகை மீதான பெறுமதி சேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது. | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டும். | எப்போதும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது (VAT) வழங்குனர்களுக்கு கடமைப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆய்வு செய்வதானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விவரங்களை பதிவு செய்வதிலும் கொள்முதல் நிலையிலும் (வரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு முன்) பணம் செலுத்தும் படிமுறைக்கு இணங்க சரிபார்த்து ஆய்வு செய்கின்றது. | எழுத்து மூலமான ஆதாரம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) முறையாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதுடன் 31 ஜனவரி 2022 வரையான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை. |

## *8.* நகர அபிவிருத்தி துறை

### 8.1 உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம்

(i) உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டமானது கணக்களிப் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் என்பவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் பின்தொடர் கடன்களின் நோக்கமாகும்.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்திசெய்தல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் செயலாளர் செயற்திட்ட காலத்தினை 2023 மார்ச் 31 வரை நீடிக்க ஈஆர்டி இடமிருந்து அனுமதியினை வேண்டுகின்றார்.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களில் அவர்களின் உட்கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளினை மேம்படுத்துவதற்கு 105 உள்ளூராட்சி சபைகளுக்கு செயற்திட்டம் | செயற்திட்டமானது தேவையான அளவு மட்டத்தினை உறுதிசெய்ய நிர்மான வேலைகளை உடனடியாக பூர்த்திசெய்ய ஒப்பந்ததாரர்களிற்கு | பல்வேறு வேலைகள் ஆண்டின் முடிவில் பூர்த்திசெய்யப்படும் என்பதுடன் மிகுதி வேலைகளை துரிதப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் | வேலைகள் 2021 திசெம்பர் 31 வரை ஒப்பந்ததாரர்களின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக பூர்த்திசெய்யமுடியா |

| | | | | |
|---|---|---|---|---|
| | உதவியளித்திருந்ததுடன் 178 உள்ளூராட்சி சபைகளின் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் பிற்சேர்க்கை கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி சபைகளில் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 35 நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 03 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 11 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 8 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 12 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் 2020 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் 6 மாதங்களிற்கு மேலாக 17 செயற்திட்டங்கள் தாமதமாகியிருந்தது. | தேவையான செல்வாக்குகள் செய்யப்படல் வேண்டும். | எடுக்கப்படல் வேண்டும். | மல் போகக்கூடும். |
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 3,131.35 மில்லியன் 9 நீர்வழங்கள் செயற்திட்டங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது ஆரம்பித்தலில் 21 மாதங்கள் தொடக்கம் 43 மாதங்கள் தாமதமாகியிருந்தன. | ஒப்பந்ததாரர்களின் கிரயங்கள் அதிகரிப்பதற்கு சாத்தியமாவதுடன் தேவையற்ற காலநீடிப்புக்கள் தவிர்க்கப்படல் வேண்டும். | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் விபரமான வடிவமைப்பு NWS&DB இனால் தயாரிக்கப்படல் வேண்டும். விபரமான வடிவமைப்பானது NWSDB இடமிருந்து 2018 மார்ச் இல் செயற்திட்டததிற்கு கிடைக்கப்பெற்றது. | செயற்திட்ட காலப்பகுதியை 2023 மார்ச் 31 வரை நீடிப்பதற்கு வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | கூட்டுமொத்தம் ரூபா 2,291.71 மில்லியன் 5 நீர் வழங்கள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதுடன் ரூபா 113.42 | உபசெயற்திட்டம் சாத்தியமான அளவு விரைவாக ஆரம்பிக்கப்பட | தேசிய வழிநடத்தல் குழுவின் ஆலோசனைப்படி நீர் திட்டங்கள் | விடயங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் 2 பிரதேச சபை அலுவலக கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டது. இது 2021 ஜூன் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாக கையேட்டில் உள்ள வேலைப்பட்டியல்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். | கைவிடப்பட்டதற்கான காரணங்களானது நீர்வளப்பற்றாக்குறை, பிரதேச சபைக்கட்டடங்கள் கைவிடப்பட்டமை மற்றும் நிலப்பிரச்சினை போன்றனவாகும். | |
| (ஈ) | இவ் ஈ-புரநெகும மென்பொருளானது குறைந்த வருமானம் பெறுனர் பிரதேச சபைக்காகத் தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருள் தீர்வான – மென்பொருள் 07 மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 137 பிரதேச சபைகளில் தாபிக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் வடமேல் ஆகிய இரு மாகாணங்களில் 41 பிரதேச சபகளில் 16 பிரதேச சபைகளில் இந்த மென்பொருள் பயன்படுத்தப்படவில்லை. என்பதும் இந்த மென்பொருள் செயற்படுத்தப்படும் எந்த ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த – திட்டமிடப்பட்ட 4 செயல்களிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | வெளிநாட்டுக் கடன் தொகை பாவனையில் மேற்கொள்ளப்படும் செயற்திட்டம் என்பதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைவதற்குத் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளல் வேண்டும் | சம்பந்தப்பட்ட பிரதேச சபை அதிகாரிகளின் ஆர்வமின்மை, உள்ளக, வெளியக இடமாற்றங்கள், மென்பொருள் பயன்பாடு பயிற்சி பெற்ற ஊழியர்களால் பயிற்சி பெறாத ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்காமை மற்றும் மேற்பார்வையின்மை. | விடயங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | புரநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 332.19 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 பிரதேச சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் நுழை வாயில் 30 மாதம் தொடக்கம் 57 மாதம் வரையான காலம் பாவனையின்றி செயற்படாது இருந்ததுடன் ரூபா 16.49 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹெட்டிபொல பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. 36 மாதங்களுக்கும் அதிகமாக பெறப்படாது இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக பிரதிபலன்களைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். | மாகாண தலைவர் அறிவுறுத்தியதாவது இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். | விடயங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| (ஊ) | ரூபா 513.73 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 12 பல்நோக்கு கூட்டங்களும் ரூபா 18.90 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நூலகமும் ரூபா 105.06 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 03 சந்தைகளும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | மேற் கூறியது போன்று. | ரத்தோட்ட வாராந்த சந்தையானது பிரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு விட ஏலம் கோரப்பட்டுள்ளது. திஸ்ஸமஹாராம மீன்சந்தையானது மொத்த பழ விற்பனையாளர் ஒருவருக்கே வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | விடயங்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. |
| (எ) | இந்தச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணப் பணிகள் முடிவடைந்து பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிடம், பலநோக்கு கட்டடம், குடிநீர் செயற்திட்டம் உள்ளிட்ட பதினாறு துணைச் செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களைப் பெற்றுக் | எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்கள் விரும்பிய பலன்களை அடைவதற்கும் தொடர்ச்சியான அடிப்படையில் நிலைமைகளை கண்காணிக்கவும் தேவையான படிமுறைகளை | விரும்பிய பலன்கள் இன்னும் அடையப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| கொள்வதற்கு முடியாதிருந்துள்ளது. | | எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | |

## 8.2 முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்

(i) முன்னேற்றமடைந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டமானது இலங்கையிலுள்ள வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மகாணங்களில் அடிப்படை உட்கட்டமைப்பை முன்னேற்றுவதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20,622 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 15,409 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 17,185 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 12,957 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூலை அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்** | **செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதய நிலைமை** |
|---|---|---|---|
| அனைத்து நிர்மாணங்களும் 2021 செப்தெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இருப்பினும் செயற்திட்ட செயல் நூலின்படி 418 துணைச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 355 துணைச் செயற்திட்டங்கள் மட்டுமே செயற்படுத்துவதற்குத் தெரிவு | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை மட்டத்தினை அடைவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் வேண்டும். | கணக்காய்வு அறிக்கையானது முன்கூட்டியே சுட்டிக்காட்டுவது யாதெனில், இத்திட்டத்திற்கான ஆலோசகர்கள் ஆட்சேர்ப்பு செப்டம்பர் 2019 ல் இடம்பெற்றது. (இத்திட்டம் தாமதமானதற்கான காரணமாவது பிறவேலைகளில் தாமதம் ஏற்பட்டதால், எதிர்பார்த்த | |

செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 232 துணைச் செயற்திட்டங்கள் எதுவித முன்னேற்றத்தையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்தச் செயற்திட்டத்தின் திட்டப் படைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைக்காக இரு ஆலோசனை நிறுவனங்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதில் தோல்வியடைந்துள்ளது. செயற்திட்ட முகாமைத்துவ செயநூலின் படி 2020 ஆம் அண்டு இறுதியில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய தொகை ஜப்பான் யென் 8,697 மில்லியனாக இருந்த போதிலும் பயன்படுதியிருந்த தொகை ஜப்பான் யென் 643.33 மில்லியனாக இருந்தால் 739 சதவீத முன்னேற்றத்தை மட்டுமே எட்டியிருந்தது. என்பது அதற்கமைய செயற்திட்டம் மிகப் பலவீனமான செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது.

முன்னேற்றத்தை குறித்த காலத்திற்குள் அடைய முடியவில்லை) இருந்த போதிலும் வழமையான கண்காணிப்பு மூலம் இதுபோன்ற தாமதங்களை தடுக்க நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 8.3 உள்ளுர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம்

(i) உள்ளுர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டமானது வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மகாணங்களில் சமூகத்திற்கான சேவையை உரியவாறும் கணக்களிப்பொறுப்புடனும் வழங்குவதற்கும் பொருளாதார உட்கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதற்கும் உள்ளுராட்சி அதிகாரசபைகளின் திறன்களை பலப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் இரண்டாவது கணக்கீட்டு ஆண்டான 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் இந்தச் செயற்திட்டத்துக்காக ரூபா 650.70 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் ஆண்டிற்கான செலவு ரூபா 60.54 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டமையால், ஆண்டில் 9.30 சதவீதம் அளவிலான மிகக் குறைவான நிதி முன்னேற்றத்தை மட்டுமே கைப்பற்றக் கூடியதாக இருந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு மட்டத்தினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டமானது உரிய கட்டுநிதி ஆண்டின்போது விடுவிக்கமுடியாது இருந்ததால் ஆண்டின் போது எவ்வித செயலாற்றளையும் செய்ய முடியாமல் போகக்கூடும். | |
| (ஆ) | முழு நேர செயற்திட்ட பணிப்பாளரைக் கொண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகு இதுவரையிலும் தாபிக்கப்படடிருக்காததுடன் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பதிற்கடமை பணியாளராகவும் சேவையாற்றும் இந்த அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) இந்தச் | செயற்திட்டத்தின் செயலாற்றல் மட்டத்தினைப் பேணுவதற்காக தகைமையின் படி பதவியணியினரை நியமித்தல் வேண்டும். | ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் செய்யப்பட்டுள்ளன. | |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் பணிப்பாளராக கடமை புரிகின்றனர். மேலும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிலை நடவடிக்கைகளுக்கு பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட பதவியணியினரை செயற்திட்ட முகாமைத்துவ அலகின் நடவடிக்கைக்காகவும் இணைக்கப்பட்டிருந்தனர். | | |
| (இ) | வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தின் பங்களிப்புடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்காக ரூபா 4.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உள்ளூராட்சிப் பங்களிப்பு அபிவிருத்தி திட்டத்தின் முன்னுரிமைக்கு அமைய முதலிடத்தை பெற்ற செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு தெரிவு செய்யாது செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்தின் அறிவுரையின் படி வீதி அபிவிருத்தி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | குறித்த திட்டம் ஒட்டுமொத்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டதுடன், அங்கு குறிப்பிடப்பட்டுள்ள உப செயற்திட்டங்கள் எந்தவொரு நிதியினை ஈடுபடுத்தியும் பூர்த்தி செய்ய முடியும். அதற்கமைய அதன் முதலாவது செயற்திட்டம் இந்த செயற்திட்டத்தினால் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது பொருத்தமற்றது. | விரும்பிய நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இந்த செயற்திட்டத்தின் ஆரம்பநிலை பணிகளுக்கு நியமிக்கப்பட்ட 4 மதியுரையாளர்களினால் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதால் செலுத்தப்பட்ட ரூபா 6.47 | செலவு பலனற்று போகாதிருக்க உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்விடயங்களை மேலும் உற்றுநோக்க ஓர்குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக கலந்துரையாடல்கள் அதன்படி |

மில்லியன் தொகை எடுக்கப்படும். விளைவற்ற செலவினமாகியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

## 8.4 நகர செயற்றிட்ட தயார்ப்படுத்தல் வசதி

(i) நகர செயற்றிட்ட தயார்ப்படுத்தல் வசதியானது முன்னுரிமை நகர செயற்றிட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,879 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,540 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதில் ரூபா 884 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 995 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.46 மில்லியன் மிகுதி தொகை மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்றிட்த்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்றிட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

## 8.4.1 மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைக்கு அமைய நடவடிக்கை எடுக்காது மற்றும் போதியளவு ஆய்வுகள் இன்றி அதுவரை நிர்மாணத் திட்டம் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் போன்றே செயற்திட்ட முகாமைத்துவ செலவினங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 169.06 மில்லியனான நட்டத்துடன் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | நட்டத்தினை அறிந்து உரிய முறையில் செயற்பட வேண்டும். | திட்டத்தை முடிக்க வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, அந்த பணிகள் முறையாக முடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விரிவான பதில்கள் கணக்காய்வுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களிடமிருந்து நட்டங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | செயற்திட்டப் பணிப்பாளருக்கு சம்பளம் வழங்குகையில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் 01/2019 மற்றும் 2019 மார்ச் 05 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அமர்த்தப்பட வேண்டிய சம்பள படிநிலையில் வைக்காது மாதாந்தம் ரூபா 60,000 இற்கு அதிகமாக 16 மாதங்களுக்காக ரூபா 960,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | முறையற்ற கொடுப்பனவு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய சம்பளங்கள் செயற்திட்ட பெறுமதியை கருத்தில் கொண்டு செலுத்தப்பட்டுள்ளது. | உரிய உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 01/2019 ஆம் இலக்க மற்றும் 2019 மார்ச் 05 திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டத்தின் நிதிப் பகுப்பாய்வாளர் இந்த செயற்திட்டத்தின் கணக்காளராக பதிற் கடமை புரியும் அடிப்படையின் கீழ் நியமிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 720,000 செலுத்தப்பட்டிருந்தது. | மேற்படி | இவ் உத்தியோகத்தர் செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைக்காக பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். | மேற்படி |

### 8.4.2 நகர அபிவிருத்தி நீர் வழங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 38 ஆலோசனை அறிக்கைகள் வழங்கப்பட்டாலும், அந்த அறிக்கைகள் பெறப்பட்டு 1 முதல் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்த அறிக்கைகள் 2021 மார்ச் மாதம் வரையிலும் மீளாய்வு செய்யப்படவில்லை. | செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய வலுவான மற்றும் செயற்திறனான ஆலோசனை சேவைகளை நிர்வகிக்கும் நடைமுறையொன்று செயல்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/07/28 ஆம் திகதிய இல Er/AB/US/01/(voli) பொதுத்திறைசேரி சுற்றறிக்கையினால் செய்யப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம் ஆலோசனை சேவை அமைச்சின் செயலாளரினால் கைவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 30 ஆலோசனை அறிக்கைகள் 2021 ஏப்ரல் இறுதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ஆலோசனை அறிக்கை 1 முதல் 13 மாதங்கள் வரை தாமதமாக இருந்தாலும், எந்தவொரு ஆலோசகர்களிடமிருந்தும் தாமதக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. மேலும், தாமதக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்கான எந்த விதிகளும் ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>போதிய ஆலோசனை பணியாளர்களை நியமிக்காமையே இந்த தாமதத்திற்கு பிரதான காரணமாகியிருந்தது. | செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதன் மூலம் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய வலுவான மற்றும் செயற்திறனான ஆலோசனை சேவைகளை நிர்வகிக்கும் நடைமுறையொன்று செயல்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துறைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கிடைத்த தகவலின்படி, இது கடன் வழங்கும் முகவரகத்தால் வழங்கப்பட்ட ரூபா 883.88 மில்லியனுக்கு சமனான் 4.65 மில்லியன் அமெரிக்க டொலர்களில் செயற்திட்டத்தின் பணிகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 21 மாதங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தது 1.32 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு சமனான ரூபா255.40 மில்லியன் அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 29 தவீதம் மட்டுமே. மேலும், செயற்திட்டத்தில் மோசமான முன்னேற்றம் மற்றும் திட்டத்தின் மோசமான நிதி எதிர்வுகூறல் காரணமாக, ரூபா 14.79 மில்லியனுக்கு சமமான 79,394 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்படாது 2020 திசெம்பர் 31 இல் சிறப்பு (டொலர்) கணக்கில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் பணிகள் திட்டமிட்ட நேரத்திற்குள் மற்றும் பாதீட்டுக்கு ஏற்ப நிறைவு செய்ய வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயற்திட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 20 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடமான பதவியணி 8 ஆகும். இந்த நிலைமை செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணிகளுக்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறியபடி |

## 8.5 கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம்

(i) கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டமானது இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 257.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2014 மே இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 இல் பூர்த்திசெய்யப்படவேண்டியிருந்தும் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 வரை 2 வருடங்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்திற்காக கடன் வழங்கும் முகவரினால் ஒதுக்கப்பட்ட ரூபா 27,507 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் மொத்த நிதியில் 36 சதவீதத்தினை | சரியான நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயல் திட்டங்களுடன் உண்மையான செயலாற்றல்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஆரம்ப ஐ.அ.டொலர் 147 மில்லியன் நிதியில் ஆரம்பிப்ப திகதி 2014 ஜூலை 1 ஆக இருந்ததுடன் ஐ.அ.டொலர் 55 மில்லியன் மேலதிக நிதிக்கான நிதியீட்டம் 2016 ஒக்டோபர் 19 இல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இலக்குகளை அடைவதில் செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக | ரூபா 13,113.05 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.90 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தத. கோவிட்19 நிதிக்காக ஐ.அ.டொலர் 65 மில்லியன் நீக்கல் மற்றும் ஐ.அ.டொலர் 27 மில்லியன் நீக்கல் என்பன 2021 இல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த ஒதுக்கீடு கூட்டுமொத்தம் ரூபா 11,645.64 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 72.61 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்ததிலிருந்து 6 1/2 வருடங்கள் கடந்ததன் பின்னர் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படுடிருந்தது. | | நிதி ஒதுக்கீடுகளில் காரணங்கள் குறைவடைந்திருந்தன. | பாதித்திருந்தது. |
| (ஆ) | இச்செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகளின் 600,000 பேராக இருந்தபோதிலும் செயற்திட்ட முடிவில் உண்மையான பயனாளிகள் 400,000 பேராக குறைவடைந்துள்ளனர். | திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். | பயனாளர்களின் குறைவிற்கான பிரதான காரணங்கள் செயற்திட்ட நிதிகளில் ஐ.அ.டொலர் 92 மில்லியன் நீக்கப்பட்டிருந்ததாகும். (கோவிட்நிதிக்கான ஐ.அ.டொலர் 27 மில்லியன் மற்றும் KMTT செயற்திட்டததிற்கான ஐ.அ.டொலர் 65 மில்லியன் ) | KMTT திட்டம் மற்றும் கொவிட் நிதிக்காக கொடுக்கப்பட்ட 92 அமெரிக்க மில்லியன் டொலர்கள் தவிர, மீதி 45 மில்லியன் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்பட்டது. மற்றும் யாழ் மாவட்டத்தில் AB 21 வீதியை தவிர, மற்ற அனைத்து திட்டங்களும் இது வரை முடிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | செயற்திட்டத்தின் ஆலோசகர் நிறுவனத்தின் சாத்தியவளகற்கை அறிக்கையின் மூலம் காலி நகரத்தின் வெள்ளப்பெறுக்கினை கட்டுப்படுத்த மெரடோனா ஓடையிலுள்ள தளத்தில் 10 நீர் தக்கவைத்தல் பகுதிகளை நிறுவ அடையாளப்படுத்தப்பட்டிருந்தும் அவ் நீர் தக்கவைத்தல் பகுதிகளுக்கான காணித்துண்டுகளின் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னைய | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு முடிவில் இடைநீக்கப்பட்டிருந்தது. மேலும் ஈரநிலை முகாமைத்துவ திட்டம் கூட அதன்மீது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | ரூபா 22.4 மில்லியன் செலவலித்ததன் பின்னர் ஒப்பந்தமானது பத்தேகம வீதியின் மெரடோனா ஓடையின் ஊடாக செல்கின்ற கஹதுடுவ பால மீள்நிர்மான ஒப்பந்தத்தின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தமானது மீள்கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மான கிரயம் ரூபா 42 மில்லியனாக இருந்ததால் மேலதிக கிரயம் ரூபா 10 மில்லியன் செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | தேவையான சரிசெய்தல் அளவீடுகள் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்ய எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரைக்கப்படவில்லை. | ஹதுடுவ பாலத்தின் அனைத்து வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் 2020 நவம்பர் 26 இல் வீதிஅபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | மோரகொட எல பிரதான கால்வாய் புனரமைப்பின் பௌதீக செயலாற்றல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 65 சத வீதத்தை அடைவதற்கு வதிர்பாரடக்கப்பட்டுள்ள போதிலும் உள்ளபடியன செயல் முன்டீனற்றம் அத் திகதியிலுள்ளவாறு 19 சத வீதமாக தொடர்ந்தும் காணப்பட்டது. அதன்படி ஒப்பந்தமானது மந்தகதியான செயலாற்றல் மற்றும் இலங்கை காணி மீளமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு கையளித்தல் என்பனவற்றின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது. | நிர்மான வேலைகள் மீது நெருங்கிய கண்காணிப்பு தேவை. | ஒப்பந்தவேலைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு எதிராக மந்தகதியான பௌதீக செயலாற்றலை காட்டுகின்றது. | நிர்மான வேலைகள் 2021 திசெம்பர் 29 இல் உள்ளவாறு CH 0+000 தொடக்கம் CH 1+850 வரையான பிரிவ பூர்த்திசெய்யப்பட்டிருந்த து. மாகாண நீர்பாசன திணைக்களம் மற்றும் காலி நகரசபை என்பவற்றிற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஊ) | காலி நகரில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னர், | காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் வேறு அரசு | ஓர் ஈரநில முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இத்திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்ட காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொரகொட கால்வாய் படுகைகளை ஒட்டி அமைந்துள்ள 10 இடங்களை வெள்ளக் கட்டுப்பாட்டு நிலையங்களாக ஆலோசனை நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. அந்த இடங்களை நீர் தேக்க நிலங்களாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவதில் திட்டம் தோல்வியடைந்தது மற்றும் ஈரநில முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்படவில்லை. காலி நிர்வாக தொகுதி மற்றும் ஏனைய காணி சுவீகரிப்பு முன்மொழிவுகள் காரணமாக நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 10 இடங்கள் தெடர்புடைய நபர்களிடையே முறையான ஒருமைப்பாடு இல்லாமல்தெரிவு செய்யப்படடிருந்தும் காலி நகரில் 16 வெள்ளத்தடுப்பு வடிகால் அமைப்புகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை மற்றும் பணிகளுக்கு தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை. | நிறுவனங்களுடன் சரியான ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். திறமையான திட்ட முகாமைத்துவ முறைமையை செயல்படுத்துவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட பொதுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | ல. | போது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் திருத்தப்பட்ட மையால் மேற்பட்ட பிரச்சினை எழுந்துள்ளது. |
| (எ) | IDA இனால் கண்டி மல்டிமோட் போக்குவரத்து முனையத்தின் மறுசீரமைப்பு கட்டுமான வேலைக்காக செலவினமாக ரூபா.9,316.60 மில்லியன் (ஐ.அமெரிக்க டொலர 60.11 மில்லியன்) நிதியுதவியில் ரூபா.419.52 மில்லியன் செலவழித்த பின்னரும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலத்துக்குள் கட்டுமானப் பணிகளை முடிக்க | அதன் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் செயற்திட்ட நோக்கத்தையடைய சிறந்த மற்றும் வினைத்திறன் முகாமைத்துவ முறைமைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் எடுக்கப்பட்ட முடிவின் படி நகரங்களின் மூலோபாய அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 65 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக வங்கியினால் அகற்றப்பட்டது. | இச் செயற்திட்டமானது 2021 திசெம்பரில் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. மிகுதி வேலைகள் அவ் அமைச்சினால் தொடரப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | | | |
| (ஏ) | அதன் 2019 ஆகஸ்ட் 12 ஆம் திகதியில் யாழ்ப்பாணத்தின் நிர்மாணப் பணிகள் பொன்னாலை- பருத்தித்துறை வீதி (AB21), ரூபா.1,110.15 மில்லியன் நிர்மாணச் செலவுடன் ஆரம்பிக்கப்பட்டு 2021 மே 15 ஆம் திகதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், 2021 மார்ச் வரையிலான கட்டுமானப் பணிகளின் பௌதீக முன்னேற்றம், அன்றைய திகதியில் எதிர்பார்க்கப்பட்ட 65 சதவீத முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது, 33 சதவீதமாக மட்டுமே காணப்பட்டன. இன் நிலைமையை மீட்க ஒப்பந்ததாரருக்கு 02 மாத கால நீட்டிபபு வழங்கப்பட்டிருந்தது. | தற்போது மீதமாக காணப்படுவனவற்றின் செயலாற்றல் மதிப்பீட்டின் பின்னர் ஒப்பந்த வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்ததாரரின் செயலாற்றல் மிகவும் மந்தமாக இருந்தது. | அமைச்சுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பெறுபேறாக செயலாற்றல் 72.2% தற்பொது அடையப்பட்டிருந்தது. |

## 8.6 அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம்

(i) அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டமானது அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பிரதேசங்களிற்கிடையில் களத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்க இணைந்த அபிவிருத்தியின் நடுநிலையிலான விதத்தினை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52.00 மில்லியன் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியல் இடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் பூாத்தியாக்கல் திகதி 2023 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | விரிவான வடிவமைப்பு ஆய்வு மதியுரைச் சேவையை பெறுவதற்கு ரூபா 212.66 மில்லியன் (1.18 இயுரோ மில்லியன்) தொகையிலான உடன்படிக்கையை செயற்திட்டம் கிறூபிட் - கிறீன் டெக் மதியுரை கூட்டு வியாபாரத்துடன் செய்திருந்ததுடன் கம்பனியானது மதியுரை அறிக்கையை 2018 ஒக்டோபர் 12 அன்று சமர்ப்பிக்க உடன்பட்டிருந்தது. அதன்படி 2020 மார்ச் 31 வரை செயற்திட்டம் ஒப்பந்த காலப்பகுதியைக் நீடித்திருந்தது. இருப்பினும் 2021 மே வரை வழங்கப்பட வேண்டியவற்றுள் சில பூர்த்திடிசய்யப்பட்டிருக்காததுடன் மதியுரைக் கம்பனிக்கு செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 வரை ரூபா 100.32 மில்லியன் செலுத்தியிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நட்டஈட்டை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2021 மே வரி அமைச்சின் செயலாளரால் மற்றொரு கொள்முதல் குழு நியமிக்கப்பட்டது. மதிப்பீடு மதிப்பீட்டை நிறைவு செய்வதுடன் பணப்புழக்க பாதிப்புகளும் பரிசீலிக்கப்படுகிறது. | CPCP இனால் இவ் ஆலோசனை சேவை மீது 2022 மார்ச் 31 வரை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | அனுராதபுரம் புகையிரத நிலைய சுற்றுவட்டம் மற்றும் "சிங்கக் கம்பம்" வட்டம் என்பவற்றின் அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 122.62 மில்லியன் வரையிலான மதிப்பீட்டுக் கிரயத்தில் 2021 யூலை மாதத்தில் நிறைவடைய இருந்தும் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 17.99 மில்லியன் செலவாகியிருந்ததுடன் அத் தினத்தில் உள்ளவாறான பௌதிக செயலாற்றல் 4 சதவீதமாக இருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதன் மூலம் அதன் நோக்கங்களை அடைவதற்கு சிறந்த வினைத்திறனுடனும் கூடிய ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுலாக்கப்பட வேண்டும். | கருத்துரைகளுடன் உடன்பட்டிருந்தனர், வடிவமைப்பு மாற்றம் செயற்திட்ட செயலாற்றலை பாதிக்கின்றது. | 91% வேலைகள் தற்போது வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பகுதியளவிலான பூர்த்தியாக்கல் சான்றுகள் 2022.01.31 இல் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | நான்கு உப செயற்திட்டங்கள் ரூபா 336.25 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டு 2021 யூலையில் நிறைவடைந்திருந்தன. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 செயற்திட்டங்கள் 10 முதல் 30 சதவீதம் வரையிலான குறைவான செயல் முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன. | வடிவங்களையும் விரிவான திட்டங்களையும் மதிப்பாய்வு செய்ததன் பின்னரே அளவைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரையுடன் உடன்பட்டனர். | பொதி 01 மற்றும் 02 இன் செயலாற்றல் 90% மற்றும் 82% ஆகவிருந்தது. மேலும் அது 2022 பெப்ரவரி அளவில் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | ரூபா 308.84 மில்லியனுக்கு சமமான 1.84 மில்லியன் இயூரோ மாத்திரமே கடன் கொடுத்தார் முகவர் நிலையத்தால் வழங்கப்பட்டு 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்டது. இது பெறப்பட்ட ரூபா 8,354.32 மில்லியனுக்குச் சமமான 52 மில்லியன் இயூரோ ஆகும். | நிதியை ஆக்கபூர்வமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்த சிறந்த, வினைத்திறனுடனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுலாக்கப்பட வேண்டும். | கருத்துரையுடன் உடன்பட்டனர். | ரூபா 2,123.31 மில்லியன் பெறுமதியான 5 ஒப்பந்த பொதிகள் தற்போது வரை கையளிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட உடன்படிக்கையின் காலப்பகுதி அனைத்து நிதிகளையும் பயன்படுத்த முடியாததால் 2023.09.30 |

செயற்றிட்டம் ஆரம்பமாகி 4 ஆண்டுகளின் பின்னர் நிலவிய நிலைமையே இதுவாகும். மேலும் தெரியவந்தது. மீளாய்வாண்டில் முற்பணம் எதுவும் பெறப்படவில்லை மேலும், 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 19.08 மில்லியனுக்குச் சமமான 0.08 மில்லியன் இயூரோ 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்கில் இருந்தது.

வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 8.7 கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம்

(i) கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது கொழும்பு நீர்வடிநில வடிகாண்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலளவை வலுப்படுத்துதல், தெரிவுசெய்யப்பட்ட நிரூபிக்கப்பட்ட முதலீடுகள் ஊடாக உள்ளூர் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்தி பராமரித்தல் என்பனவற்றிற்கக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் அதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் செயற்றிட்டக் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்றிட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்றிட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு றொறிங்ரன் மற்றும் புதிய முகத்துவாரம் சுரங்கப் பாதைகளின் நிர்மாணத்தின் செயன்முன்னேற்றம் முறையே 65 சதவீதம் மற்றும் 88 சதவீதம் ஆகும். 2020 மே 30 அளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அது 2021 நவம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. கூட்டு மொத்தம் ஐ.அ.டொலர் 28,465,877.57 மற்றும் ரூபா 233,706,653 செலுத்தப்படடிருந்ததுடன் அத் திகதியில் பௌதிக செயலாற்றல் 97 சதவீதமாகவும் நிதிச் செயலற்றல் 91 சதவீதமாகவும் இருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகள் மீது நெருக்கமாக கண்காணிப்பை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டதன் பின்னர் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 21 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | 2021 டிசம்பர் ற்குள் 31 120 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வேலைகளை செய்ய முடியவில்லை. அமைச்சின் நிதி ஒதுக்கீடு மூலம் மீதமுள்ள பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | ரூபா 6,760.52 மில்லியன் பெறுமதியான ஐந்து ஒப்பந்தங்களின் நிர்மாணப் பணிகள் அதாவது சென் செபஸ்ரியன் நோர்த் லொக் கதவுகள் மற்றும் பம்பி நிலையம் என்பவற்றின் | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகள் மீது நெருக்கமாக கண்காணிப்பை மேற்கொள்ளவும் நடவடிக்கை | 6 உப செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கல் வெள்ளப்பெருக்கு மற்றும் ஈஸ்டர் தாக்குதல் கொந்தளிப்பான | 2021 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிவமைப்பு மற்றும் கட்டிடம், அம்பத்தலே வெள்ள நீர் பம்பி நிலைய வடிவமைப்பு மற்றும் கட்டிடம், கோட்டே ராம்பார்ட்டில் உள்ள உயிரியல் பல்வகைமை பூங்காவின் அபிவிருத்தி, கொலன்னாவ கால்வாய் திசை திருப்பல் திட்ட கட்டம் I மற்றும் கட்டம் IV என்பன மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்ட போதிலும் அவை இணங்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | காலநிலமை, கோவிட்19 பரவல் போன்ற பல்வேறு காரணங்களினால் தாமதமடைந்திருந்தது . | |
| (இ) | நாரிஸ் கால்வாயை தரமுயர்த்துவதற்கான ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 21 இல் ரூபா 353 மில்லியன் வழங்கப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்டது. எனினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்தின் மெதுவான பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 78 சதவீதம் மற்றும் 58 சதவீதம் ஆக காணப்பட்டன. மேலும், ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தையில் உள்ள ஊஆஊ அடுக்குமாடி குடியிருப்புக்களை தகர்க்கும் பணி 2021 மே 05 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்ட | பணிகளை விரைவுபடுத்துவதற்கும், நிர்மாண பணிகள் மீது நெருக்கமாக கண்காணிப்பை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உபசெயற்திட்ட நிர்மான வேலை செயலாற்றல் தாமதமடைந்ததுடன் தகுதியான காரணங்களினால் மெதுவான செயலாற்றலை காட்டியது. | மொத்த நீளம் 632 மீற்றருடைய கால்வாயை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 506 மீற்றர் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையினால் (CMC) நிர்மாணிக்கப்பட வேண்டிய அர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தைக்கு முன்னால் உள்ள 126 மீற்றர் நீட்சியைக் (Extension) கையாள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மீதி பணிகளை செய்ய அரசிடம் நிதி ஒதுக்கீடுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதியினுள் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | | | கோரப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2017 ஆகஸ்ட் முதல் உண்மையான நேர கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்கி அமுல்ப்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் ஆலோசனையாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டு, 2020 யூன் 30 வரை ரூபா 32.9 மில்லியன் தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், பணிகளை பூர்த்தி செய்யாமல் திடீரென ஆலோசனையாளரின் சேவை நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, செயற்திட்டத்திற்கு ஆலோசனையாளரிடமிருந்து எதிர்பார்த்த விளைவுகள் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபரமாக பதிளலித்திருக்கவில் லை. | ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை அமைப்பின் மூலம் சேவையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2021 டிசம்பர் 31 நிர்வாகமானது மீதமுள்ள பணிகளைச் செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு அமைச்சானது நிதி அமைச்சிடம் ,தற்கான கோரிக்கையை வைத்துள்ளது. |
| (உ) | பம்பலப்பிட்டி மற்றும் கொள்ளுப்பிட்டி நடைபாதை மேல்பாலத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைக்கான இரண்டு ஆலோசனை ஒப்பந்தங்கள் 2013 திசெம்பரில் கம்பனி ஒன்றிற்கு ரூபா 27.22 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. நிர்மாணம் Mega Polish பிரதான திட்டத்துடன் இணங்கியிருக்காதமை | நோக்கங்களை பின்பற்ற வேண்டும். | விபரமாக பதிளலித்திருக்கவில் லை. | 2016 ல் நடைபாதையின் மேல் பாலம் கட்டாமல் திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்டம் கொழும்பு மாநகர சபையிடம் (CMC) ஒப்படைக்கப்பட்டது. 2018ல் கொழும்பு மாநகர சபையிடம் இத்திட்டம் இருந்ததாக அறிவிக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனிக்கு தெரிவிக்கப்படாததற்காக ரூபா 16.79 மில்லியன் ஆலோசனையாளர் கட்டணம் செலுத்தப்பட்டது. | | | ஆனாலும் திட்டமிடல் செயற்பாடுகள் முடிந்ததும் அதற்கான பணம் செலுத்தப்பட்டது. |
| (ஊ) | கொழும்பு 05 கிரிமண்டல மாவத்தையில் உள்ள வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நீர் முகாமைத்துவ நிலையத்திற்கான கட்டிட நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்தலில் தாமதத்தின் விளைவாக இதன் விளைவாக, புதிய கட்டிடத்தில் RCT முறைமையை நிறுவும் நடவடிக்கைகளை கணக்காய்வு திகதியான 2021 மே 05 வரையிலும் தொடங்க முடியாதிருந்தது. இந்தக் காரணங்களால் ரூபா 92.15 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள், கணனி திரைகள், சேர்வர்கள் போன்ற இந்த முறைமை தொடர்பான உபபாகங்களை நிறுவுவதற்கு நிரந்தர இடம் இருக்கவில்லை. மேலும், மேற்படி கட்டிடம் முழுமையடையாததால் இந்த முறைமை தொடர்பான ரூபா 643.3 மில்லியன் பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் தாமதமாக வேண்டியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டம் 2021 திசெம்பர் | நிர்மாண பணிகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு பொறுப்பான தரப்பினரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாங்கப்பட்ட துணைக்கருவிகள்/ உபகரணங்கள், நிலையான கொள்முதல் ஆகியவை 10 வது மாடி RTC பிரிவில் இருந்து கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததும் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படும். புதிய கட்டிடத்தை முடிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தால் சில கொள்முதல்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் அங்கீகரிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடையாத காரணத்தால் சேவையை வழங்க முடியவில்லை. மீதமுள்ள பணிகளை செய்வதற்கு அரச நிதியில் இருந்து ரூபா 124 மில்லியன் செலவு தேவை என மதிப்பீடு செய்யப்படுகின்றது. |

31 இல் மூடப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வின் போது மேற்படி பெறுகை நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த முடியாதிருந்தமை சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

## *9. ஏனைய துறை*

### 9.1 நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டம்

(i) நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டமானது கடனளிக்கும் முகவரின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளிற்காக உதவுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 636 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.00 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 சனவரி 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| ஆதன தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் நோக்கங்களை | முகாமைத்துவம் உடன்பட்டிருந்ததுடன் 5 எதிர்பார்க்கப்பட்ட உதவியாளர் நிதியளிப்பு செயற்திட்டங்கள் | செயற்திட்டம் மூடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| அமைச்சிலிருந்த பெற்றுக் கொண்ட தகவலின் பிரகாரம் 9 செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்காக வசதியளிப்பதற்கு நிதி உதவி வழங்குவதே இச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளதுடன் அதில் 4 செயற்திட்டங்களே 2018-2020 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய 5 செயற்திட்டங்களின் ஆயத்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் முடப்பட்டிருந்தன. ஐ.அ.டொலர் 04 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் செயற்திட்ட முடிவில் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 9.75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 0.39 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 3.61 மில்லியன் 2020 ஆம் ஆண்டிக் போது கடன் வழங்கும் முகவரிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. | அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அரச கொள்கை முன்னுரிமை மாற்றத்தின் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 9.2 தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டம்

(i) தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டமானது பௌதீக ரீதியான தணிப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் மண்சரிவுகளால் ஏற்படும் இடர் மற்றும் சேதத்தை குறைத்து மண்சரிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் பிரமாணங்களை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 19,976 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியனானதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்த்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வறுவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் கூறு 1 இன் நோக்கம் அனைத்து 147 முன்னுரிமை தளங்களிற்கான நடவடிக்கைகளின் தளபரிசோதனைகள், விபரமானவரைபடம், நிர்மானம் மற்றும் கண்கானிப்பு அல்லது முகாமைத்துவம் உள்ளடங்களாக மட்டுப்படுத்தல் அளவீடுகளை அமுல்படுத்தல் ஆகும். மேலும் ஐ.அ.டொலர் 97 மில்லியன் இக் கூறிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது 147 இல் 27 தளங்கள் நெருக்கடியாக தெரிவு செய்யப்பட்டு கட்டம் 1 இன் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | தாமதங்களை கைகொள்ளவும் மேலதிக கிரயங்களை தவிர்க்க நேரத்திற்கு ஒப்பந்த வேலைகளை பூர்த்திசெய்வதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்டல் வேண்டும். | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடையாத காரணத்தால் சேவையை வழங்க முடியவில்லை. மீதமுள்ள பணிகளை செய்வதற்கு அரச நிதியில் இருந்து ரூபா 124 மில்லியன் செலவு தேவை என மதிப்பீடு செய்யப்படுகின்றது. | எட்டு கட்டுமான நிர்மான வேலைகள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2038 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கையளிக்கப்பட்டிருந்தது. |

இருப்பினும் 27 தளங்களிலுள்ள கட்டுமான வேலைகள் ஐ.அ.டொலர் 19.5 மில்லியன் தொகையான 4 வேலைகள் ஒப்பந்தப்பொதிகளின் கீழ் பொதியாக்கப்பட்டிருந்ததுடன் 2019 இல் கையளிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் எவ்வித ஒப்பந்தங்களும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிர்மான வேலைகள் செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்ய முடியும் என்பது சந்தேகமானதாகும். இதன் காரணமாக கடன் நிதிகளின் எவ்வித தொகைகளும் 2020 ஆம் ஆண்டு முடிவில் உள்ளவாறு பயன்படுத்தப்படவில்லை.

## 9.3 மூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம்

(i) சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டமானது இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட மூலதனம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11,212.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் தொகையானதுடன் செயற்திட்டத்தின் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 ஜுன் 20 இல் நலன்புரி நலன்கள் சபை நிறுவப்பட்டிருந்த போதிலும் அது கணக்காய்வு திகதி 2021 மார்ச் 23 இல் கூட பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | நலன்புரி நன்மைகள் திட்டத்திற்கான வர்த்தமானி அறிவித்தளை அனுமதிக்க உரிய தரப்பினர்களை தாக்கம்செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 நவம்பரில் இருந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக நிபந்தனைகள் அனுமதிக்காக சமர்ப்பிக்கமுடியாமல் இருந்தது. | புதிய நலன்புரி நலன்கள் சபை இன்னும் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் கூறு 01 நோக்கம் ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றை தயாரித்தல் ஆகும். சீர்திருத்தப்பட்ட நலன்புரி முறைமையின் மையப்பாகம் அனைத்து தற்போதைய மற்றும் முன்னைய நிகழ்ச்சித்திட்ட பயனாளர்கள் மற்றும் புதிய விண்ணப்பதாரர்கள் மீதான தகவல்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமூக பதிவேடாகவிருக்கும். கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் ஒப்பந்தமானது 2018 மார்ச் 31 இல் தனியார் தரப்பினரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அபிவிருத்தி வேலைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இக்காரணம் காரணமாக ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் தாமதமடைந்திருந்தன. | தாமதமான நடவடிக்கைகளை ஈடுசெய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியதுடன் அது செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நேர அட்டவணைகளையும் பாதிக்கும். | அபிவிருத்தி வேலைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. |

## 9.4 நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம்

(i) நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டமானது நிதி சந்தையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (எம்எஸ்எம்ஈ) மற்றும் தனிநபர்களிற்கிடையே நிதி சேவைகளை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு பங்களிப்பு செய்வதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,125 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்தோபர் 04 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்துகொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட 10 விநியோக இணைப்பு பெறுபேறுகள் அத் திகதியில் உள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், 2020 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட நிதி உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் இந்த வழங்கல் இணைப்பு பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் ஆண்டு 2021 ஆம் ஆண்டாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன் கூறுகள் 2 இன் கீழான பல்வேறு பெறுகை நடவடிக்கைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்குள் கையளிக்கப்பட்டு பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 07 மீளப்பெறல் இணைப்பின் பெறுபெறுகள் (DLRS) 2022 மார்ச் 23 இல் உள்ளவாறு அடையப்பட்டிரந்ததுடன் உரிய நிதிகள் உலக வங்கியினால் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | மூன்று ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் நிறுவன இயலளவை வலுப்படுத்துதல் கூறுகள் 02 இன் கீழ் ஒழுங்குமுறையாளர்களின் நிறுவன இயலளவை வலுப்படுத்துவதற்கான பெறுகை பணிகளில் ஏற்பட்ட தாமஙமகள் காரணமாக இதன் செயன்முன்னேற்றம் பலவீனமாக காணப்பட்டது. | அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டிற்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன் கூறுகள் 2 இன் கீழான பல்வேறு பெறுகை நடவடிக்கைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்குள் கையளிக்கப்பட்டு பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 21 ஏப்ரல் 2019 ஏற்பட்ட ஈஸ்டர் குண்டு தாக்குதல் மற்றும் 2020ம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக மீதமுள்ள பொதிகளை கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 430.3 மில்லியன் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செயற்பாடுகளுக்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன, 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 74.96 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டது. | குறித்துரைத்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும். | கொள்முதல் நடவடிக்கைகளை முடிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, உலக வங்கி, நிதி அமைச்சு மற்றும் செயல்படுத்தும் மூன்று முகவர் நிறுவனங்கள் ஆகியன தொடர்ச்சியான கொள்முதல்களை மட்டுமே பெற உடன்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த பாதீட்டு ஒதுக்கீடு ரூபா 791.8 மில்லியனிற்கு மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டில் 98 சதவீதத்தினை பிரதிநிதித்தவப்படுத்தும் கூட்டுமொத்தம் ரூபா 777.9 மில்லியன் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,125 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆகும். செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 அளவில் மொத்தக் கடன் பயன்பாடு ரூபா 577.11 மில்லியன் தொகையாகும். அதாவது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 4 சதவீதம் மாத்திரமேயாகும். | ஒதுக்கப்பட்ட மொத்த நிதிகளையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ம் ஆண்டில் 10 வழங்கல் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் முடிவுகளை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.02 ம் பாகத்தின் கீழ் கொள்முதல் நடவடிக்கைகளானது எதிர்பார்க்கப்படுவதால் அந்த கொடுப்பனவுகளின் பயன்பாடு இந்த 2021 ம் ஆண்டின் பயன்பாட்டை கணிசமாக அதிகரிக்க முடியும். | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 75 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 11.2 மில்லியன் உலகவங்கியினால் வழங்கப்பட்டிருந்தது. அது அண்ணளவாக 15%. அது செயற்திட்டத்தின் மொத்த கிரயத்திலிருந்து ஐ.அ.டொலர் 58.8 மில்லியனை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## 9.5 சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்

(i) சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டமானது சமுதாயத்தின் பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் நன்மைகளிற்காகவும் இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவ நிலையை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,827 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய காலம் 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினையும் வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிக்கள உத்தியோகத்தர்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 112.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 3 மோட்டார் வாகானங்கள் அமுல்படுத்தல் முகவர் மற்றும் ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்களை அடைய நிதிபயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | சுற்றாடல் அமைச்சு / செயலாளர் வனஜீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சிற்கு வாகனங்களை திருப்பிக்கொடுக்க வேண்டுகோள் விடுத்துள்ளது. | உரிமைத்துவத்தினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பெறுமதி அ.டொலர் 45 மில்லியன் ஆக இருந்ததுடன் 2020 வரையில் அதில் அ.டொலர் 35 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் செயற்திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தில் 544 செயற்திட்ட செயற்பாடுகளுக்காக அ.டொலர் 53.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. | பெறுகைகளை சரியாக இனங்கண்டு அவ்வப்போது மீளாய்வாய்வு செய்யப்பட வேண்டும். | பெறுகைத்திட்டம் வனத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் (FD, DWC) போன்ற இரு அமுல்படுத்தல் முகவர்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டமானது இன்னும் சில பெறுகை விடயங்களை எதிர்கொள்கின்றது. எனவே கடன்தொகையின் பிரகாரம் 2022 ஜனவரி 31 இல் உள்ளவாறு கூறின் நிதிச்செயலாற்றல் 58.6 ஆக பதியப்பட்டிருந்தது. |
| (இ) | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கூறு 01 இற்காக அமுல்படுத்தும் முகவராண்மை நிறுவனமாக இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி செயலகம் கணக்காய்வு வரையிலும் மேற்கூறப்பட்ட அலுவலகம் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. | சரியாக செயல் நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். | பேந்தகு அபிவிருத்தியின் செயலகம் அமைச்சின் கீழ் நிறுவப்படவேண்டியிருந்ததிலிருந்து செயற்திட்டமானது அதனை அமுல்படுத்த நிதி வசதியினை வழங்க உடன்பட்டிருந்தது. | இவிடயங்கள் இன்னும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. |
| (ஈ) | ஈர வலயம் மற்றும் உலர் வலயங்களில் நிலத்தோற்ற திட்டம் தயாரித்ததன் பின்னர் அமுல்படுத்துவதற்கும், தேவையான சட்டரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நிறுவன ரீதியான பின்புலம் | நிறுவன ரீதியான கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | இவ்விடயம் திரைசேறியின் பிரதிச்செயளலாளரினால் தலைமைதாங்கப்பட்ட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டிருந்தது. | ஏவ்வித வழிகாட்டிகளும் விருத்திசெய்யப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு செய்யும் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | | | |
| (உ) | செயற்திட்டக் கூறு 2 பீ – யானை மனித சகவாழ்விற்கான முன்னைய விபத்துக்களை மதிப்பிடும் முறைமை ஒன்று இரண்டு கிராமங்களுக்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதும் செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அது போதியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்பாடுகளின் மூலம் செயற்திட்ட நோக்கங்கள் அடையப்பட வேண்டும். | கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம் அவர்களது ஓர் புதிய கண்டுபிடிப்பாக அதனை பரிசோதனை செய்வதற்கு உதவிசெய்ய செயற்திட்டத்தினை வேண்டுவதனூடாக மும்மொழிவு ஒன்றினை சமர்ப்பித்தது. | நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் இலக்குகளை அடையமுடியுமான ஓர் வழியில் திட்டமிட்டு பூர்த்திசெய்யப்படல் வேண்டும். |

## 9.6 காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம்

(i) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டமானது காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அனர்த்தங்களை செயற்திறனாக எதிர்த்து செயலாற்றுவதற்கான பெறுநர் இயலளவை மேம்படுத்துதல் என்பனவற்றிறிகாக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஜுன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழியன அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட காலப்பகுதியானது ஒரு வருடத்திற்கு குறைவாக இருந்தும் செயற்திட்ட அலுவலகம் கணனி உதிரிப்பாகங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் அலவலகஉபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய ரூபா 14.09 மில்லியனை செலவிட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கீழ் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | CRIP செயற்திட்டத்தின் கீழ் மும்மொழியப்பட்ட இச்செயற்திட்டத்தினை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது செயற்திட்டத்தின் அனைத்து சொத்துக்களும் மும்மொழியப்பட்ட புதிய செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும். | செயற்திட்டமானது 2021 ஒக்டோபர் 15 இல் முடிவுறத்தப்பட்டிருந்ததுடன் அனைத்து சொத்தக்களும் மாற்றப்பட்டிருந்தன. |
| (ஆ) | கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 13,634.98 மில்லியன் பெறுமதியான 631 ஒப்பந்த பொதிகள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்த காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 230.42 மில்லியன் பெறுமதியான 15 ஒப்பந்த பொதிகள் பல்வேறு காரணங்களால் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த பொதிகள் திட்டமிடப்பட்ட படி பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் இடைநடுவில் கைவிடப்பட்ட செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். | செயன்முறையில் இல்லாத ஒப்பந்த பொதிகள் ஒப்பந்ததாரர்களின் தோல்வி, தண்ணீர் பிரச்சினை, காணி கொளடவனவில் சிரமங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது 2021 ஒக்டோபர் 15 இல் இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்த பொதிகளை பூர்த்தி செய்யாமல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2018 யூன் மாதத்தின் போது இந்த செயற்திட்டன் கீழ் அல்லை உத்தேச திட்டத்தின் தெற்கு கரை கால்வாய் கட்டின் அடிப்படையில் வீதியில் ரூபா 19,298,754 | சிக்கனமற்ற தொகைகள் உரிய தரப்பினரிடமிருந்து அரவிடப்படல் வேண்டும். | 2017 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஜுன் அளவில் பூர்த்தி செய்யப்பட்டது. ஆப்பகுதியிலுள்ள சமுதாயத்திடமிருந்தான அதிக வேண்டுகோளில் | வீதி அபிவிருத்தி செய்யப்படுமிடத்தில் மீள்அபிவிருத்தி பிரிவிற்கான பொறுப்புடைய தரப்பினர்களிற்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | மில்லியன் தொகையில் கடடியெழுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட வீதியில் காப்பட் இடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட மொத்த தொகையும் பயனற்ற செலவினமாக கருதப்படுகின்றது. | | நீர்பாசன திணைக்களம் 14.0 கி.மீ களில் 400 மீற்றர் காபெட் இட அனுமதிவழங்கியிருந்தது. | எதிராக எவ்விதநடவடிக்கை யம் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஈ) | இந இந்த செயற்திட்டத்தின் கீழ் 2018 மார்ச் மாத்தின் போது அல்லை உத்தேச திட்டத்தின் பிரதான வாய்க்கால் கட்டின் வீதி ரூபா 4,381,360 மில்லியனுக்கு கட்டியெழுப்பப்பட்டிருந்தது. எனினும் அது பகுதி 2019 ஆம் ஆண்டில் ‘‘சிரிசர பிவுசும’’ அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காபட் இடப்பட்டிருந்தது. அதனால் இந்த வீதி அபிவிருத்திகாக இந்த செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாகும். | சிக்கனமற்ற தொகைகள் உரிய தரப்பினரிடமிருந்து அரவிடப்படல் வேண்டும். | இவ்ஒப்பந்தத்தின் கீழ் CRIP நிர்மானத்தினை ஆரம்பிக்கும் நேரத்தில் ‘சிவிசர பிவுசும’ நிகழ்ச்சித்திட்டத்தில் எவ்வித ஈடுபாடும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறியபடி |
| (உ) | 2019 ஒக்டோபரில் செயற்திட்டத்தின் கீழ் கந்தளாய் பக்கிராவன்வெட்டியில் புதிய வீதி ரூபா 4.8 மில்லியன் தொகையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட வீதி 2020 செப்டம்பரில் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கெங்கிரீட் | வரிசை நிறுவனங்களுடன் பாதுகாப்பான ஒருங்கினைப்பு காணப்படல் வேண்டும். | இவ் ஒப்பந்தத்தின் கீழ் CRIP நிர்மானத்தினை ஆரம்பிக்கும் நேரத்தில் ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தில் எவ்வித ஈடுபாடும் குறிபிடப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறியபடி |

இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் இந்த வீதிகளின் அபிவிருத்திக்காக இந்த வீதிகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக கருத முடியும்.

## 9.7 காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு)

(i) காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) ஆனது காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பனவறிறிற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

(iii) செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஜுன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | அளவைப்பட்டியல்களின் பிரகாரம் காங்கிறீட்களின் தேவையான அடர்த்தி ரூபா 58.8 மில்லியன் தொகையான | ஒப்பந்ததாரர்கள் வேலைகளை முறையாக பூர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட | வெல்லவாய பிராந்திய பொறியியலாலர் பரிசேதனை செய்து | கைவிடப்பட்ட கொடுப்பனவுகளிற்கான உரிய தொகை CRIP |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்லகதிர்காமம் - கிரிவெஹர விதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அதன்பெறுபேறாக ரூபா 1.8 மில்லியன் நட்டம் ஏற்றபட்டிருந்தது. | வேண்டியதுடன் ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்புகளை அறவிட நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். | பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்டுள்ளார். | செயற்திட்டத்தினால் விடுவிக்கப்பட்டு வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்கில் பேணப்பட்டிருந்தது. |
| (ஆ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 7,090.90 மில்லியன் பெறுமதியுடைய 153 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்ததாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதனிடையே ரூபா 182.18 மில்லியன் பெறுமதியுடைய 03 ஒப்பந்த பொதிகள் பல்வேறு காரணங்களினால் நிறுத்தப்பட்டிருந்தது. | மேலதிக நேரம் மற்றும் ஊழியர்களை தவிர்த்து செயற்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயன்முறைப்படுத்தப் படாத ஒப்பந்தப் பொதிகள் பல்வேறு காரணங்களினால் கைவிடப்பட்டிருந்தன. | செயற்திட்டமானது 2021 ஒக்டோபர் 15 இல் முடிவுறுத்தப்பட்டு அனைத்த கொடுப்பனவுகளும் இறுதியாக்கப்பட்டிருந் தும் இவ் ஒப்பந்தப் பொதிகளினை பூர்த்திசெய்ய எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

## 9.8 மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01

(i) மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 ஆனது நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 யூன் 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**(iv)** கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | காட்டுப் பகுதியில் 50 ஹெட்டெயரில் மரங்கள்<br><br>மீளநடுதல், துழையிட்ட மரங்களை அகற்றுதல் சுற்றாடலை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 வரை கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காடாக்குதல் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த படிகள் எடுக்கப்படல் வேண்டும். | திட்டத்திலிருந்து 25 ஹெக்டயர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 25 ஹெக்டேயர்கள் மாத்திரமே காடமைக்கப்பட்டிருந்தது, துளையிட்டமரங்களின் அகற்றல் மற்றும் பாதுகாத்தல் வேலைகள் செய்யப்பட்டிருந்தன என அறிவிக்கப்பட்டது. |
| (ஆ) | மாத்தளை மற்றும் கலேவெல பிரதேச செயலகத்தில் 443 காணித்துண்டுகள் காணிச் சுவீகரிப்பிற்காக ரூபா 233.90 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தது. இருப்பினும் அதில் ரூபா 103.8 மில்லியன் 2020 ஆம் ஆண்டிண் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வேலைகளை முறையாக செய்ய காணிகளை கொள்வனவு செய்ய படிகள் எடுக்கப்படல் வேண்டும். | தேவையான அறிக்கைக்கு இழப்பீட்டு கொடுப்பனவுகள் தொடர்பாக ஒப்பீடுகளை மேற்கொள்ள பிரதேச செயலகங்களிலிருந்து வேண்டப்பட்டுள்ளன. | 443 காணித் துண்டுகளில் 320 காணித் துண்டுகள் 2022 பெப்ரவரி அளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | கட்டம் 1 இன் கீழ் கையளிக்கப்பட்ட 09 ஒப்பந்தப்பொதிகளில் 06 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்தகாலப்பகுதி முடிவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மீதமான 3 ஒப்பந்தப்பொதிகள் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்திருக்கவில்லை. | ஒப்பந்ததாரரினால் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மீது நெருங்கிய கண்கானிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும | 09 ஒப்பந்தப் பொதிகளில் 05 தினை இநுதியாக்க படிகள் எடுக்கப்பட்டுள்ளன. | ஐந்து ஒப்பந்தங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி பொதிகள் கையளிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | மதியுரை சேவைகளிற்காக ரூபா 543 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,396 மில்லியன் மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு 157 சதவீதம் அதிகமானதாவும் கானப்பட்டது. | மதிப்பீட்டிற்குள் செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குிரய மாறலிற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டதன் பின்னர் முன்னைய ஆண்டுகளில் சென்மதியாக உள்ள ஆலோசனை கொடுப்பனவுகளை விட்டுக்கொடுக்க படிமுறை எடுக்கப்பட்டது. | கிரய மாரலிற்கான அமைச்சரவை அனுமதி எடுக்கப்பட்டிருந்தது. |
| (உ) | தேவகுவ நீர்ப்பாசன முகாமின் புனரமைப்பு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி முகாமின் புனரமைப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளாமல் வாடகைச் செலவினம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவிற்காக ரூபா 5.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | திட்டமிட்ட படி வேலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | காணி கொள்வனவில் தாமதம் மற்றும் இழப்பீட்டு சபையின் நடவடிக்கைகளில் தாமதம் போன்றன காரணமாக தாமதித்திருந்தது. | 67.7 சதவீதமான ஒப்பந்தப்பொதிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தகாலப்பகுதி 2022 செப்டம்பர் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | மதியுரையாளர் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வடமேல் மாகாண கால்வாய் நாபதகஹவத்த இலிருந்து மஹகிதுல நீர்த் தேக்கத்தை உள்ளடக்கிய சுரங்கம் வரையான பிரதான கால்வாய் மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி சென்றதன் காரணமாக ஒப்பந்த பெறுமதி ரூபா 7,226.6 மில்லியன் ரூபா 1,413 மில்லியனால் அதிகரித்து கானப்பட்டது. | ஒப்பந்ததத்தின் விரும்பிய செயலாற்றலை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிர்மான அடிப்படையிலான கட்டமைப்புக்களின் மாற்றம் வனஜீவராசிகள் பகுதிகளின் நடைபெறுகின்றது. | 17.05 கி.மீ வடிகானின் மொத்த நீளத்தில் 15.93 கி.மீ ஒப்பந்ததாரரிற்கு நிர்மானத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. |
| (எ) | மதியுரையாளர் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் உயர் எலஹெர கால்வாய் நிர்மாணம் மதிப்பீடு | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை | NCPCP-03 இன் கீழான மிகுதி வேலைகளில் ஓர் செயற்ப்பு ஒப்பந்தப்பொதியாக | 2022 பெப்ரவரி அளவில் பௌதீக செயலாற்றல் 64 சதவீதமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்ட அளவுகளை விஞ்சி சென்றமையினால் ஒப்பந்த பெறுமதி ரூபா 3,742 மில்லியனில் இருந்து ரூபா 658.50 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | உள்ளடக்கப்படும். | காணப்பட்டது. |
| (ஏ) | மினிப்பே இடது கரை கால்வாய் மறுசீரமைப்பின் கீழ் மினிப்பே இடது கரை கால்வாய் - கட்டம் 1 மறுசீரமைக்கும் நிர்மாண கால எல்லை 2020 நவம்பர் 12 ஆம் திகதி முடிவடைய வேண்டும். ஒப்பந்தகாரர் ஒப்பந்த கால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தவறி இருந்தமையினால் செயற்திட்ட கால எல்லை 2021 சனவரி 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் நீடிப்பு கலப்பகுதியின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்தை காட்டியது. | ஒப்பந்தகாலப்பகுதி க்குள் வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2022 நவம்பர் அளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 73 சதவீதம் அடையப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2020 திசெம்பர் 31 வரையில் மேல் எலஹெர கால்வாய் செயற்திட்டத்திற்கு உரிய 741 காணி கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் எந்த ஒரு காணி கூறும் 2020 திசெம்பர் 31 இல் கைப்பற்றப்பட்டு இருக்கவில்லை. மேலும் வடமேல் மாகாண கால்வாய் செயற்றிட்டத்திற்கான 961 காணி கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி | காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2022 பெப்ரவரி அளவில் காணி கொள்வனவு செயலாற்றலின் எவ்விதமாற்றங்களும் காணப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அளவில் 947 காணி கூறுகள் கைப்பற்றப்படிருந்தது.எனினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்த ஒரு காணி கூறும் காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | |

## 9.9 மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02

(i) மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 ஆனது நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுவதற்காக அமுல்படுத்தப்படுகின்றது.

(ii) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 43,734 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 37,951 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

(iii) நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

(iv) கணக்காய்வாயர் தலைமை அதிபதி செயற்திட்டத்தினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீது முனைப்பழி அற்ற அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக முனைப்பழியான அபிப்பிராயத்தினை வழங்கியிருந்தர். இருப்பினும், கீழ்வருவன இன்னும் தீர்க்கப்படாத செயற்திட்டத்தின் செயலாற்றலுடன் தொடர்புபட்ட சில விடயங்களாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்காய்வாயர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் | செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | மகாவலி நீர் பாதகாப்பு மதலீட்டு நிகழச்சித்திட்டம்-கட்டம் 02 இன் கடன் உடன்படிக்கையானது 2018 இல் கையொப்பமிடப்பட்டிருந்தும் NWPC-ICB—01 மற்றும் UECP-ICN-02A ஆகிய ஒப்பந்த பொதிகள் மீளாய்வாண்டின் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மானங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | 2020 திசெம்பர் காலப்பகுதியில் இவ்ஒப்பந்தத்தினை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | NWPCP-ICB -01 ஒப்பந்தம் மற்றும் UECP-ICB-2A ஒப்பந்தம் என்பனவற்றின் வேலைகள் முறையே 2021 மார்ச் 31 மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இறுதி வரை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 81 மில்லியன் ஒப்படைப்பு கட்டணங்கள் ஒப்பந்தப்பொதிகளின் எவ்வித செயலாற்றலையும் அடையாமல் கடன் வழங்கும் முகவரினால் மீளப்பெறப்பட்டிருந்தது. | | | 2021 மார்ச் 10 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | இடைக்கால பகுப்பாய்வு இலக்கு அறிக்கையின் ADB உதவியளித்தல் ஞாபகமூட்டலின் பிரகாரம் கிரயத்தினை குறைப்பதற்கு கட்டம் 1 இலிருந்து UECP-ICb-05 மற்றும் NWPC-ICB-03 ஒப்பந்தத்தினை அகற்றி கட்டம் 2 இல் உள்ளடக்க மும்மொழியப்பட்டிருந்தது. கட்டம் 1 இலிருந்து கட்டம் 2 இற்கு அகற்றுவதன் தாக்கம் நிகழ்ச்சித்திட்டத்தினால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஒப்பந்தப்பொதிகளையும் அனுமதிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டிங்குள் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மேலதிக நிதி வசதிகளை பெற்றுக்கொள்ள 2022 ஜனவரி 4 இல் அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியை மாற்றியமைக்கவும் மேலதிக நிதி வசதிகளை வழங்கவும் அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| (இ) | களுகங்கை மற்றும் மொரகஹகந்த பரிமாற்றல் கால்வாய் நிர்மாணத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 89 சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 52 சதவீத செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற எதிர்பாராத தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 70 சதவீத செயலாற்றலை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 71 சதவீத செயலாற்றல் 2022 ஜனவரி 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2018 முதல் 2024 வரை 03 கட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 முதல் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதனால் 03 கட்டங்களின் கீழ் | நிர்மாண வேலைகளை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற எதிர்பாராத தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 ஜனவரி 04 இல் கட்டம் 3 இற்கான ஒப்பந்தத்தில் ஈடுபடவும் மிகுதி 9 பொதிகளினையும் அமைச்சரவை அமைச்சர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த | கட்டம் 3 இற்கான உடன்படிக்கையில் ஈடுபட அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இன்னும் 08 ஒப்பந்த தொகுதிகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | | 2022 பாதீட்டு ஒதுக்கீற்குள்ளான கட்டம் 1 , கட்டம் 2 இன் சேமிப்புக்களை பயன்படுத்தி கையளிக்க அனுமதி பெறப்பட்டிருந்தது. | |
| (உ) | 2019 – 2020 இன் போது அமுல்படுத்துவற்கு திட்டமிடப்பட்ட வலுப்படுத்தும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் மதியுரைச் சேவை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தாமதங்கள் இன்றி உரிய காலஎல்லையின் பிரகாரம் மதியுரைச் சேவைகளை அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | TOR இனை தயாரித்து பிரதான தரப்பினர்களுடன TORஇனை மீளாய்வு செய்து ஆலோசனை கம்பனியை தெரிவு செய்க | இது 2022 பெப்ரவரி அளவில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2020 நவம்பர்/திசெம்பர் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆரம்ப விழாவின் 02 ஆவது பகுதியின் மத்திய கால மீளாய்வு செயற்பாடுகள் மற்றும் பகுதி 1 இன் மீளாய்வு செயற்பாடுகளின் பிரகாரம் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு அ.டொலர் 400 மில்லியன் மேலதிக நிதி தற்போது தேவையாக இருந்தமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடப்பட்ட மேலதிக நிதி தேவைக்கான இறுதி இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. மேலதிக நிதிக்காக இறுதி இணக்கப்பாடு காணப்படாமை, அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையை விஞ்சி ஒப்பந்தம் | நிகழ்ச்சித் திட்டத்தினால் கடன் உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட கடன்தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட வேண்டும். ஒப்பந்த பெறுமதி அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை விஞ்சுமாயின் நிகழ்ச்சித் திட்டத்தில் மேலதிக நிதியத்தை தயாரித்து கொள்வதற்கோ அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் கிரயத்தை குறைத்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2022 ஜனவரி 4 இல் அமப/21/2142/317/49-01 இனால் கட்டம் 3 இற்கான உடன்படிக்கையில் ஈடுபட அனுமதி பெறப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதியை மாற்றியமைக்கவும் இலங்கை அரசாங்கத்தினால் மேலதிக நிதி வசதிகளை வழங்கவும் அனுமதி பெறப்பட்டுள்ளது. |

கையளிக்கப்பட்டிருந்தது.
அதனால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அ.டொலர் 114 மில்லியன் இற்காக சமனான மூலதன வசதிகள் வழங்குபவரை ஈடுபடுவதற்கு தவறியிருந்தமையால் எதிர்காலத்தில் நிதியத்தில் பற்றாக்குறையொன்று ஏற்பட முடியும். மேலதிக நிதி தேவை ஏற்பட முடியும். அவ்வாறே நிகழ்ச்சித் திட்டம் ஏற்பட முடியும்.

| இல. | நிதியீட்டு முகவர் பெயர் | செயற்திட்ட எண்ணிக்கை | கடன் மீதி | | |
|---|---|---|---|---|---|
| | | | 2020 | 2019 | 2018 |
| 01 | ஆசிய அபிவிருத்தி வங்கி | 53 | 132,655,294,995 | 33,529,668,541 | 63,464,380,565 |
| 02 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 2 | 1,638,886,494 | - | - |
| 03 | அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1 | - | 1,506,090,427 | 136,179,117 |
| 04 | போடிரன்லீன் வங்கி | 3 | 10,580,714,427 | 282,543,637 | 811,796,799 |
| 05 | எச்எஸ்பீசீ வங்கி | 2 | 7,393,088,080 | - | 501,367,168 |
| 06 | எச்எஸ்பீசீ (ஈகேஎ டென்மார்க்கின் உத்தரவாதத்துடன்) | 1 | 155,405,190 | 413,429,364 | 1,414,599,082 |
| 07 | எச்எஸ்பீசீ வரையறுக்கப்பட்டது (ஹொங்கொங்) | 1 | 12,076,984,244 | - | 2,273,572,328 |
| 08 | சர்வதேச அபிவிருத்தி சங்கம் | 18 | 60,462,418,395 | 7,825,262,326 | 22,432,097,289 |
| 09 | மீளமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி | 6 | 22,953,551,711 | 1,737,866,894 | 4,390,834,327 |
| 10 | விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 3 | 7,654,612,531 | 907,849,835 | 687,871,760 |
| 11 | பின்லாந்து நோர்டியா வங்கி | 1 | 3,116,644,721 | - | - |
| 12 | பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ஒபெக்) | 5 | 3,934,259,469 | 3,139,057,695 | 3,502,525,180 |
| 13 | ரைபிசன் சென்ரல் வங்கி | 3 | 1,449,381,056 | 962,798,432 | 1,922,010,924 |
| 14 | ஒஸ்ரியா ஏஜீ யுனிகிரெடிட் வங்கி | 3 | 1,640,455,036 | 657,325,543 | 845,197,072 |
| 15 | கேலியொன் கிரெடிட் அக்ரிகோல் சீஐபீ | 2 | 21,476,611,620 | 9,256,861,170 | 4,247,856,180 |
| 16 | கோப் டிசன்ரல் ரைபசன் - டீபாரன் லீன் வங்கி | 4 | 3,121,906,541 | 3,782,478,286 | 2,346,118,941 |
| 17 | சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் | 3 | 3,548,449,320 | 4,413,467,830 | 6,483,317,842 |
| 18 | பிரான்ஸ் அரசாங்கம் | 5 | 5,504,908,614 | 758,529,380 | 813,423,879 |
| 19 | ஜேர்மன் அரசாங்கம் | 1 | 702,112,079 | - | 409,519,917 |
| 20 | இந்திய அரசாங்கம் | 4 | 8,610,599,407 | 3,700,164,440 | 6,834,154,828 |
| 21 | குவைட் அரசாங்கம் | 5 | 3,079,637,462 | 1,040,319,174 | 2,421,573,021 |
| 22 | அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான சவுதி நிதியம் | 6 | 2,702,471,056 | 2,494,826,112 | 3,228,232,169 |
| 23 | ஜப்பான் அரசாங்கம் | 14 | 64,274,890,880 | 15,730,991,212 | 17,400,529,849 |
| 24 | பன்கோபில்போ விஸ்காயா ஆர்ஜென்டேரியா (ஸ்பெயின்) | 1 | - | - | 282,894,641 |
| 25 | கொரியா குடியரசு அரசாங்கம் | 4 | 4,770,550,945 | 2,388,476,681 | 1,485,422,631 |
| 26 | ஏற்றுமதி நிதி காப்புறுதி கூட்டுத்தாபனம் | 1 | - | - | 185,732,518 |
| 27 | சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 11 | 106,689,956,880 | 54,578,537,111 | 55,534,237,260 |
| 28 | ஹங்கேரி ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1 | - | 7,068,025 | 384,534,097 |
| 29 | டச் வங்கி ஏஜீ | 3 | 9,226,333,713 | 238,582,868 | 4,569,818,118 |
| 30 | பெல்ஜியம் கேபீசீ வங்கி | 1 | - | 46,097,160 | - |
| 31 | இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 1 | 4,842,265,567 | 2,915,539,639 | - |
| 32 | ஸ்பெயின் இராச்சியம் | 1 | 437,888,476 | 275,596,841 | 879,566,674 |
| 33 | ஸ்டான்டட் சார்ட்ட் வங்கி (ஐக்கிய இராச்சியம்) | 1 | 934,596,367 | - | - |
| 34 | பாகிஸ்தான் அரசாங்கம் | 1 | 18,829,096 | 115,195,952 | - |
| 35 | ஒஸ்ரியா எர்ஸ்டே வங்கி | 1 | 1,734,737,991 | - | - |
| | கூட்டுத்தொகை | 173 | 507,388,442,363 | 152,704,624,575 | 209,889,364,176 |